www.padippakam.com


# தொழிலாளர் பாதை

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

இலங்கையில் வெளியாகும் ஒரே சோசலிஸ்ட் தமிழ் பத்திரிகை

மாத இதழ் 479 | 1997 மே 23 | ரூபா 6.00


உள்ளே


■ உழைக்கும் மக்களின் ஒரே பதிலீடான சோசலிச சமத்துவக் கட்சியைக் கட்டியெழுப்புவோம் - மே தின அழைப்பு 2

■ பொய் வகக்கு பற்றி இராஜ்குமார் எச்சரிக்கை செய்கிறார் ........ 3

■ நவசமசமாஜக் கட்சி அங்கத்தவர்களை விடுதலை செய்! ........ 3

■ மொபூட்டு ஆட்சி வீழ்ச்சி கண்டது ........ 4

■ "இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள் ........ 6

இ.தொ.கா. அதிகாரத்துவத்துக்கு படுதோல்வி - தோட்டத்துறை பூராவும் சோ.ச.க.வை கட்டியெழுப்பு!

\- 8, 9, 14 பக்கம்


# இனவாத யுத்தத்தை எதிர்ப்போம்! சோசலிசத்துக்காக தமிழ்-சிங்கள ஐக்கியத்தை கட்டியெழுப்புவோம்!

பொதுஜன முன்னணி அரசாங்கம் வவுனியாவில் இருந்து கிளிநொச்சி வரையிலான பெருந்தெருக்களையும் அதனை அண்டிய பகுதிகளையும் கைப்பற்றும் முகமாக ஒரு காட்டுமிராண்டி இனவாத யுத்தத்தினை மே 13ம் திகதி ஆரம்பித்தது. அரசாங்கம் ஏகாதிபத்திய வாதிகளின் தூண்டுதலுக்கு இணங்க யூ.என்.பி.யின் ஆதரவுடன் இனவாத யுத்தத்தின் புதிய கட்டத்தினை ஆரம்பித்துக் கொண்டுள்ள தற்குக் காரணம். விடுதலைப் புலிகளின் பிடியின் கீழ் உள்ள பகுதிகளுள் இராணுவ-அரசியல் அதிகாரத்தினை நிலைநாட்டுவதே. இவை தமிழ், சிங்கள தேசிய இனங்கள் இரண்டினையும் சேர்ந்த தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை சர்வாதிகாரத்தின் பிடிக்குள் கொணரும் வேலையை விரைவுபடுத்தவே என சோசலிச சமத்துவக் கட்சி எச்சரிக்கின்றது.

'ஜய சிக்குருயி' என்ற பெயரில் அழைக்கப்படும் இந்த இராணுவ நடவடிக்கைக்கு 20000 தரைப்படையினரும் விமான, கடற் படையினரும் திரட்டப்பட்டுள்ளனர். யுத்தத்தின் நிச இலக்கு என்ன என்பதை மூடிமறைத்து, சிங்கள இனவாத வெறியினால் பொதுமக்களை வெறியூட்டும் வேலையில் முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்கள் இறங்கியுள்ளன.

ரூபவாஹினி காட்சிகள் பொதுமக்கள் வசிக்கும் கிராமப்புறங்களை உள்ளடக்கிய கிராமப்புறங்கள் தீப்பற்றி எரிந்து சாம்பலாகும் வகையில் விமானங்கள் குண்டுகளைப் பொழிவதையும் எந்த ஒரு இடத்திலும் பதுங்கிக் கொண்டு உள்ளார்கள் என நினைத்துக் கொண்டு யுத்த டாங்கிகளும் பீரங்கிகளும் குண்டுகளை தீர்ப்பதையும் காட்டிக் கொண்டுள்ளன. கடற்படையினர் விடுதலைப் புலிகளின் கடல் முகாம்கள் இருப்பதாகக் கருதும் மீனவக் கிராமங்களின் மீது குண்டுகளையும் ஷெல்களையும் தீர்த்தபடி உள்ளனர். வவுனியாவில் நொச்சிமூட்டை, வெலிஓயா என்ற இரண்டு முனைகளில் இருந்து சென்றுவரும் இராணுவத்தினர் ஓமந்தை, நெடுங்கேணி இரண்டையும் கைப்பற்றிக்கொண்டு. அப்பகுதியில் தமது பிடியைப் பலப்படுத்தி வருவதாகவும் புளியங்குளம் ஊடாக விடுதலைப் புலிகளின் முக்கிய கோட்டையான மாங்குளத்தைக் கைப்பற்றுவதற்காக தற்சமயம் முன்னேறிக் கொண்டுள்ளதாகவும் இராணுவத்தினர் கூறிக் கொள்கின்றனர்.

. இந்த செய்தியை எழுதும் வேளையில் அரசாங்கத்தினதும் முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களதும் இராணுவ செய்திகளையும் மேற்கோளாகக் காட்டுபவர்களின் புள்ளிவிபரங்களின்படி நூற்றுக்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டுள்ளதோடு மேலும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்துள்ளனர். விடுதலைப் புலிகள் 300 பேர் உயிரிழந்துள்ளதாகவும் அந்த அறிக்கை கூறுகின்றது. இராணுவத்தினதும் விடுதலைப் புலிகளதும் இறந்தவர்களின் நிஜ எண்ணிக்கை இதை விட அதிகமானது என்பதும் நிஜ புள்ளிவிபரங்களை இருதரப்பும் மூடிமறைக்கின்றனர் என்பதும் அப்படி ஒன்றும் இரகசியம் அல்ல. யுத்தத்தினால் எந்த அளவுக்கு மக்கட் படுகொலைகளும் பேரழிவுகளும் இடம்பெறுகின்றன என்பதை நினைத்துப் பார்கக முடியும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டையும் பின்னர் கிளிநொச்சி வரையிலான வன்னியின் வடபாகத்தையும் கைப்பற்றிக் கொள்ளு வதற்கான இராணுவ நடவடிக்கைகளில் பயன்படுத்தி இராத அளவுக்கு -இரண்டு மடங்கிலான படைகளை இந்த ஜயசிக்குரு இராணுவ நடவடிக்கையில் இறக்கியுள்ளதன் மூலம் பொதுஜன முன்னணி அரசாங்கம் தொடுக்க உள்ள தாக்குதலின் காட்டுமிராண்டித்தனத்தைக் காட்டிக் கொண்டுள்ளது. மாங்குளம் வரையிலான பிராந்தியத்தைக் காப்பாற்றும் பொருட்டு விடுதலைப் புலிகள் 4000 காரியாளர்களை ஈடுபடுத்தியுள்ளதாகச் சொல்லப்படுகின்றது.

தேசிய பிரிவினைவாத விடுதலைப் புலிகள் இயக்கம் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இந்த போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதை இது காட்டுகின்றது.

இந்த இனவாத யுத்த நடவடிக்கையின் போது இலட்சக் கணக்கான தமிழ் மக்கள் பேராபத்தான நிலைமைகளுக்கு முகம் கொடுத்துள்ளனர். வன்னியில் வாழும் தமிழ்

(13ம் பக்கம் பார்க்க)

## பொதுஜன முன்னணி -யூ.என்.பி. ஒப்பந்தம் தேசிய அரசாங்கத்துக்கான ஒரு முயற்சி

### சோசலிச சமத்துவக் கட்சி மத்திய குழுவின் அறிக்கை-25.04.97

பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் யூ.என்.பி. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையே கடந்த ஏப்பிரல் 3ம் திகதி கைச்சாத்தான இருதரப்பு ஒப்பந்தம். தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்ககளுக்கு எதிரான முதலாளித்துவ பிற்போக்கு சக்திகளின் புதிய கூட்டினைக் குறிக்கின்றது. இரண்டு கட்சிகளதும் கூட்டு முயற்சியில் "தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது " ஒப்பந்தத்தின் இலக்கு எனக்காட்டிய போதிலும் ஏகாதிபத்தியவாதிகள் நேரடியாக கைபோட்டு தயார் செய்யப்பட்ட இந்த ஒப்பந்தமானது சிங்கள-தமிழ் தேசிய இனங்கள் இரண்டினதும் பொதுமக்களுக்கு எதிராக மிலேச்ச வேலைத் திட்டத்தினை நடைமுறைக்கிடும் ஒரு தேசிய அரசாங்கத்தினை ஆட்சிக்குக்கு கொணரும் ஒரு துரும்பாகும் என சோசலிச சமத்துவக் கட்சி எச்சரிக்கை செய்கின்றது.

தேசிய இனப்பிரச்சினையைத் தீர்க்க அரசாங்கம் யூ.என்.பி.தலைவரின் கருத்துக்களை ஆராய்ந்து வருவதாகவும் விடுதலைப் புலிகள் உட்பட எந்த ஒரு அமைப்புடனும் அரசாங்கம் நடாத்தும் பேச்சுவார்த்தைகளும் எடுக்கும் தீர்மானங்களும் எதிர்க்கட்சியின் ஒப்புதலுடன் இடம்பெறும் எனவும் தேர்தலில் ஆட்சிக்கு வரும் இரண்டு கட்சிகளில் எந்த ஒரு கட்சியும் எடுக்கும் முடிவினை மதிப்பதாகவும் இந்த உடன்படிக்கையில் குறிப்பிடப்படுகின்றது. இந்தச் சரத்து ஒப்பந்தத்தின் இலக்கு "தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்பதே" எனத் திரிக்கப்பட்டு , பொதுமக்களின் கண்களில் மண் வீசுகின்றது. அத்தோடு வடக்கு-கிழக்கு மாகாணங்களில் முக்கிய முதலாளித்துவ அமைப்பான விடுதலைப் புலிகள் அமைப்பையும் பொதுஜன முன்னணி, யூ.என்.பி. அணிதிரள்வில் அணைத்துக் கொள்வதையும் இது இலக்காகக் கொண்டுள்ளது.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடைபெற்ற சமயத்தில் பொதுஜன முன்னணியும் யூ.என்.பி.யும் தம்மிடையே ஏதோ ஆளையாள் கொலை செய்யும் அளவிலான முரண்பாடுகள் நிலவி வருவதாகக் காட்டிக் கொண்டன. தேர்தல் முடிவுகள் பொதுமக்கள் அரசாங்கத்தில் நம்பிக்கை கொண்டுள்ளதையும் நாட்டின் அரசியல் நிலைமை ஸ்திரமடைந்துள்ளதையும் காட்டிக் கொண்டுள்ளதாக பொதுஜன முன்னணி பிரச்சாரம் செய்தது. தேர்தல் முடிந்து இரண்டு கிழமைகள் கழிந்ததுதான் தாமதம் இந்த காட்டாப்புக்களை ஒதுக்கித் தள்ளிவிட்டு. பொதுஜன முன்னணி அரசாங்கம் யூ.என்.பி.யுடன் ஒப்பந்தத்துக்குச் செல்ல நேரிட்டுள்ளது. இது இலங்கையின் முதலாளி வர்க்கமும் அதன் சகல அரசியல் அமைப்புக்களும் மோசமான நெருக்கடிக்குள் தலைமூழ்கிப் போயுள்ளதைக் காட்டுகின்றது. இது பல்வேறு பட்ட விதத்திலும் வெளிப்பாடாகி உள்ளது.

பெரும் முதலாளிகள் குவிந்து போயுள்ள கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் பொதுஜன முன்னணியைத் தோற்கடித்து யூ.என்.பி வெற்றிகண்டது. இந்த முடிவு ஏகாதிபத்தியவாத மூலதனத்துடன் பிணைக்கப்பட்ட தமது அவசியங்கள் அனைத்தையும் இட்டு நிரப்புவதில் பொதுஜன முன்னணி அரசாங்கம் தவறியதன் பேரில் முதலாளிகளிடையே நிலவும் கசப்பினை காட்டிக்கொண்டுள்ளது. மார்ச் 30ம் திகதிய "சன்டே டைம்ஸ்" பத்திரிகையின் வர்த்தக துறைப் பக்கங்களில் வெளியான ஆசிரியத் தலையங்கத்தில் இந்தக் கசப்பு பின்வருமாறு குறிக்கப்பட்டிருந்தது: "கடந்த இரண்டரை வருடங்களாக அரசாங்கத்தின் ஆட்சியின் குறைபாடாக விளங்கியது அதன் கொள்கைகளை பலமான முறையில் நடைமுறைப்படுத்த அரசாங்கத்தினால் இயலாமல் போனதேயாகும். அது அங்கீகரித்துக் கொண்டுள்ள கொள்கை வடிவத்தையிட்டு எவரும் எதுவும் சொல்ல முடியாது

"அவற்றை முக்கிய எதிர்க் கட்சி எதிர்க்கும் நிலை இல்லை. எனினும் இந்தக் கொள்கைகளை திறமையான விதத்தில் நடைமுறைப்படுத்த அரசாங்கத்தினால் முடியாது போயுள்ளது. நடைமுறைப்படுத்தும் மந்த கதிக்கும் ஈடாட்டத்துக்கும் ஒரு காரணம் அரசியல் அழுத்தங்களும் தனது கொள்கைப் பிரகடனத்தையிட்டுத் தோன்றக் கூடிய அரசியல் எதிர்ப்பையிட்டும் இருந்துவரும் பீதியே என்பதில் அச்சமில்லை. இப்போது வாக்காளர்கள் நம்பிக்கை தெரிவிக்கும் விதத்தில் வாக்களித்துள்ளதால் அரசாங்கத்தில் உள்ள சில கட்சிகள் விரும்பாவிட்டாலும் கடும் எதிர்ப்புக்கிடமான முடிவினை எடுக்கவும் அவற்றை அச்சமின்றி நடைமுறைக்கிடவும் தயாராக வேண்டும்."

எந்த ஒரு மோதுதலும் இல்லாமல் பொதுமக்களின் எதிர்ப்புக்களை தவிடு பொடியாக்கி அவர்களின் உரிமைகளை

(10ம் பக்கம் பார்க்க)

**இனவாத யுத்தம் வேண்டாம்!**
**சிங்கள- தமிழ் தொழிலாளர் ஐக்கியத்தைக் கட்டியெழுப்புவோம்!**

படிப்பகம்

www.padippakam.com

# உழைக்கும் மக்களின் ஒரே பதிலீடான சோசலிச சமத்துவக் கட்சியைக் கட்டியெழுப்புவோம் - மே தின அழைப்பு

"முதலாளித்துவ அமைப்பை தூக்கிவீசி, இந்தியத் துணைக்கண்டத்தின் சோசலிச குடியரசு ஒன்றியத்தின் ஒரு பாகமாக சமூக சமத்துவத்தையும் நீதியையும் நிலைநாட்டும் ஒரு சமுதாயத்தை அமைத்துக்கொள்ளும் ஒரு வரலாற்று பணிக்கு இந்நாட்டின் சிங்கள. தமிழ் மக்களைத் தயார் செய்வதற்கான முன்நிபந்தனை அவர்களிடையேயான நனவான பகுதியினரை மார்க்சிச அரசியல் கலாச்சாரத்தின் மூலம் ஆயுதபாணியாக்கி வழிநடாத்துவதேயாகும். இந்த பணியை இட்டு நிரப்ப இலாயக்கானது வாய்வீச்சுக்கள் மூலம் தம்மையும் பிறரையும் ஏமாற்றாத விஞ்ஞான சோசலிசத்துக்கான அடிப்படைக் கொள்கைகளுக்காக போராடும் வரலாறு கொண்ட நான்காம் அகிலமேயாகும். அதன் இலங்கைப் பகுதி சோசலிச.சமத்துவக் கட்சியாகும்." மார்க்சிச ட்ரொட்ஸ்கிச தலைமையைக் கட்டியெழுப்ப இணையுமாறு தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கு இந்த அழைப்பை விடுத்தவர் சோசலிச சமத்துவக் கட்சியினால் ஒழுங்கு செய்யப்பட்ட மே தினக் கூட்டத்தில் பேசிய கட்சியின் பொதுச் செயலாளர் தோழர்.விஜே டயஸ்.

இந்தப் போராட்டத்துக்கு புறநிலை ரீதியாக உலகளாவிய ரீதியில் முதிர்ச்சி கண்டுள்ள சக்திவாய்ந்த அடிப்படைகளை அவர் குறித்துக் காட்டினார்.1891 இரண்டாவது மே தினத்துக்கு பிரெட்ரிக் எங்கேல்ஸ் விடுத்த செய்திக்கு கவனத்தை ஈர்த்த விஜே டயஸ் அளப்பரிய செல்வந்தர்களைக் கொண்ட வர்க்கமும் பரந்த அளவிலான ஏழை பாட்டாளி வர்க்கமும் உருவானதன் பின்னணியில் இருந்துவந்த உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியை திட்டமிட்ட முறையில் ஈடுபடுத்துவதன் மூலம் மனித இனத்துக்கு பிரமாண்டமான உள, உடல் அபிவிருத்திகளுக்கு கதவுகளைத் திறக்கும் என எங்கேல்ஸ் கண்ட விதம் அன்று. இன்று இந்த நிலைமை பூகோளத்தை தாண்டி வளர்ச்சி கண்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார். "அனைத்துலகவாதமும் சோசலிசமும் உலகம் பூராவும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு இல்லாது சரிவராத ஒரு விதிமுறை ஆகியுள்ளது."

ஒரு மூலையில் செல்வத்தை மலையெனக் குவிப்பதையும் மறு மூலையில் தொழிலாளர் வாழ்க்கைத் தரம் தகர்ந்து கொட்டும் விதத்தையும் விஜே டயஸ் அமெரிக்காவை உதாரணமாகக் கொண்டு விளக்கினார். அந்த நாட்டின் முக்கிய ஒன்பது ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் 1990 இலாபம் 17600 கோடி டாலர்களாக விளங்கிய அதே வேளையில் 1995ல் இது 30800 கோடிகளுக்கு உயர்ந்தது. ஆனால் 1990 அளவில் 316047 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்த இந்த ட்ரான்ஷ்நஷனல் கூட்டுத்தாபனங்கள் 1995 அளவில் 439882 பேரை வேலைநீக்கம் செய்திருந்தன. அத்தோடு உலகளாவிய ரீதியில் முதலாளி வர்க்கம் தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் நசுக்கித் தள்ளும் அவசியத்தினால் உளன்று தொண்டுள்ள முகாமையாளர்கள் உட்பட்ட ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் பேரில் தொழிற்படும் மத்தியதர வர்க்க தட்டினரை சிருஷ்டிக்கும் விதத்தினை விஜே விளக்கினார்.

இலங்கையின் அரசியல் நிலைமையைப் பற்றிய கவனத்தை திருப்பிய விஜே டயஸ் பொதுஜன முன்னணி அரசாங்கம் ஏகாதிபத்திய வங்கியாளர்களின் கட்டளையை நடைமுறைக்கிடுவதன் மூலம் பொதுமக்களுக்கு சகிக்க முடியாத நிலைமைகளை உருவாக்கி உள்ளதாகக் குறிப்பிட்டார். இதற்கு எதிராக பொதுமக்கள் போராட்டத்தில் இறங்குவதற்கு முன்னர் அதனை நசுக்கித்தள்ளும் காட்டுமிராண்டித் திட்டத்தின் ஒரு பாகமாகவே பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகளின் தலையீட்டின் பேரில் யூ.என்.பி.-பொதுஜன முன்னணி இரண்டுக்கும் இடையே கூட்டு உருவாகியுள்ளது என்றார்.

### சந்தர்ப்ப வாதிகளின் பரிணாமம்

கடந்த காலத்தில் தாம் தோன்றிவந்த சகலதையும் கைகழுவி விட்டுவிட்டு, ஏகாதிபத்தியச் சார்பு முதலாளி வர்க்க ஆட்சியை அணைத்துக் கொள்ளும் அளவுக்கு சகல சந்தர்ப்பவாதிகளும் சென்றுள்ள மாதிரியை இந்த மே தினத்தின் பேரில் லங்கா சமசமாஜக் கட்சி வெளியிட்ட ஒரு செய்தியில் இருந்து வெளிப்படுகின்றதென அதன் ஒரு பகுதியை வாசிக்கையில் விஜே டயஸ் குறிப்பிட்டார்: "எமது கட்சி என்றும் மே தினத்தினை தொழிலாளர்களுடன் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை முன்வைத்து, சுலோகம் கூறி, ஆட்சியாளர்களின் கண்களைத் திறக்க வைக்கும் ஒரு நாளாக ஆகும்."என சமசமாஜக் கட்சியின் மேதினச் செய்தியில் கேடுகெட்ட விதத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. 1940பதுகளில் அக்கட்சியும் அதில் சேர்ந்திருந்த தொழிலாளர்களும் ஒடுக்கப்படும் மக்களும் நடாத்திய வீரம்செறிந்த போராட்டத்துக்கு சமசமாஜக் கட்சி காறித் துப்பியுள்ளதாக தோழர். விஜே டயஸ் குற்றம்சாட்டினார். ஜே.வீ.பி. ஏகாதிபத்தியவாதிகளினதும் இலங்கை முதலாளி வர்க்கத்தினதும் பாசிசக் கைத்தேங்காயாக ஜே போடும் வித்தினையும் அவர் ஆய்வு செய்தார்.

சகிக்க முடியாத பல்வேறு பிரச்சினைகளின் பேரில் போராட்டத்துக்குள் தள்ளப்படும் தொழிலாளர்கள்,ஏழைகள், இளைஞர்கள், வீட்டுப் பெண்கள், தமிழ் ஒடுக்கப்படும் மக்களை நடவடிக்கைக் குழுக்களின் கீழ் அணிதிரட்டி, ஒடுக்கப்படும் மக்களின் ஆதரவைப் பெற்ற தொழிலாளா-விவசாயிகள் அரசாங்கத்தை-சிறீலங்கா-தமிழ்ஈழம் சோசலிச குடியரசாகக் கட்டியெழுப்பச் செய்யும் போராட்டத்தை இன்று நூறுமடங்கால் தீவிரமாக்குவோம் என அவர் வேண்டினார்.

சோசலிச சமத்துவக் கட்சியின் இந்த மேதினக் கூட்டம் கொட்டாஞ்சேனை இரத்தினம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு முன்னதாக இரு நூற்றுக்கும அதிகமான தொழிலாளர்கள், இளைஞர்கள், ஒடுக்கப்படும் மக்கள், மாணவர்கள் கலந்து கொண்ட உணர்ச்சிமிகுந்த ஊர்வலம் இடம்பெற்றது. கூட்டத்தில் பெருவாரியான தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்கள் ஈர்க்கப்பட்டு இருந்தனர். தோட்டத்துறையில் இருந்து வந்த பலம் வாய்ந்த தொழிலாளர், இளைஞர் குழுக்கள் ஊர்வலத்தில் பவனி வந்தனர். இனவாத யுத்தத்துக்கு எதிரான பதாகைகளும் சுலோகங்களும் கொட்டாஞ்சேனை அந்தோனியார் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி இரத்தினம் மைதானம் வரை பவனி வந்த ஊர்வலத்தில் இடம்பிடித்தன. அடக்குமுறைக்கு முடிவு, தனியார்மயத்துக்கு முற்றுப்புள்ளி, இலவச சுகாதார, கல்வி வெட்டுக்களுக்கு முற்றுப்புள்ளி,விவசாயிகள் மீதான தாக்குதல்களுக்கு முடிவு, தொழிலாளர் பாதுகாப்பு குழுக்களை அமைத்தல் ஆதியன அனைத்துலக சோசலிச வேலைத் திட்டத்துக்கான போராட்டத்தின் அவசியத்தினை உணர்த்திக் கொண்டிருந்தது.

சோசலிச சமத்துவக் கட்சியின் கூட்டம், ஊர்வலம் சம்பந்தமாக சகல முதலாளித்துவ



கொட்டாஞ்சேனை இரத்தினம் மைதானத்தில் இடம்பெற்ற சோ.ச.க. மே தின கூட்டத்துக்கு வருகைதந்தோரில் ஒரு பகுதியினர்.



விஜே டயஸ்

செய்தி துறைகளும் தணிக்கையைக் கடைப்பிடித்தனர். தோழர்.விஜே டயஸ் கூட்டத்தில் சுட்டுக்காட்டியது போல் இது பாட்டாளி வர்க்கக் கட்சி தொடர்பாக முதலாளி வர்க்கம் கடைப்பிடிக்கும் வன்மத்தை வெளிக்காட்டுவதாக அமைந்திருந்தது. தொழிலாளர் வர்க்கத்தின் அனைத்துலகவாத ஐக்கியம், முதலாளி வர்க்கத்தில் இருந்து அரசியல் ரீதியில் சுயாதீனமாக அணிதிரளல், சோசலிசத்துக்கான போராட்டம் என்ற தொழிலாளர் வர்க்க மார்க்சிச அடிப்படைக் கொள்கைகளின் அடிப்படையில் சோசலிச சமத்துவக் கட்சி மேதினத்தைக் கொண்டாடியது. ஏனைய சந்தர்ப்பவாதிகளும் மாஜி.தீவிரவாதிகளும் முதலாளி வர்க்கத்தின் பின்னால் வயிறளந்தனர். வேறு வார்த்தைகளில் சொன்னால் முதலாளிகளுக்குத் துதி பாடும் "மேதினத்தை" நடாத்தினர்.

சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் பொதுஜன முன்னணியின் கூட்டரசாங்க ஊர்வலத்தில் வீதியளந்தனர். தமக்கு கூட்டரசாங்கத்துடன் கருத்து வேறுபாடுகள் இருப்பதால் வேறாக மேதினம் கொண்டாடுவதாகக் பொய்யளந்து கொண்ட ஸ்டாலினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தொழிற்சங்கங்கள் காலையில் மீன்பிடி அமைச்சர் இந்திகா குணவர்தன உரை நிகழ்த்திய கூட்டத்தை நடாத்தி, மாலையில் பொதுஜன முன்னணியினர் நடாத்திய ஊர்வலத்தில் நுழைந்து கொண்டனர். சமசமாஜக் கட்சி மேதினம் முதலாளிகளின் கண்களைத் திறக்க வைக்கும் தினமாகும் என அறிக்கை விட்டதோடு முதலாளிகள் தமது அபிலாசைகளை இட்டுநிரப்ப செயற்படுவதால் அதற்கு "குறுக்கே நிற்றல் தொழிலாளர்களின் பணி"எனவும் மற்றொரு ஜம்பமும் அடித்தது.

நவசமசமாஜக் கட்சியினரின் ஊர்வலம் அரசியல் ரீதியில் மட்டுமல்ல எண்ணிக்கை ரீதியிலும் அவர்களின் வங்குரோத்தினை மீண்டும் ஒருதடவை வெளிக்காட்டிக் கொண்டது. ஊர்வலத்தில் கலந்து கொண்ட சில "இடதுசாரி"குழுக்கள் கூட்டத்தில் பேச்சாளர்கள் உரைநிகழ்த்திக் கொண்டிருந்த வேளையில் மைதானத்தினுள் கூத்தாடியதைக் காணக் கூடியதாக இருந்தது. மார்க்சிச கம்யூனிஸ்ட் கட்சி, தியச முதலான பெயர்ப் பலகைகளுக்கு மேலதிகமாக பறங்கியர் முற்போக்கு அமைப்பு, முஸ்லீம் முற்போக்கு முன்னணி என்ற பெயர்களில் தனிச்சிறப்புவாத அடிப்படையிலான அமைப்புக்களும் காணப்பட்டன. இவை எல்லாம் நவசமசமாஜக் கட்சியினர் தாம் ஏதோ ஒரு பரந்த முன்னணியில் இருந்து கொண்டுள்ளதாகக் காட்டிக் கொள்வதற்காக எடுத்த வங்குரோத்து காவடிகளாகும்.

மேதினத்துக்கு முன்னரும் பின்னரும் ஜே.வி.பி.யினர் பரந்த அளவிலான பதாகைகளை கொழும்பு நகரிலும் வெளி மாகாணங்களிலும் பறக்க விட்டிருந்தனர். முதலாளித்துவ பத்திரிகைகளும் மற்றும் தொடர்பு சாதனங்களும் அவர்களின் மேதினத்துக்கு பரந்த அளவிலான விளம்பரத்தை வளங்கியிருந்தனர். தமது இன்றையதும் கடந்த காலத்தினதும் பிற்போக்கு அரசியல் வரலாற்றை மூடிமறைக்க அவர்கள் தலைகீழாக நின்றனர். இதை எல்லாம் தாம் யூ.என்.பி.யுடனும் இன்றையை பொதுஜன முன்னணியுடனும் அப்பட்டமாகவும் அந்தரங்கமாகவும் கொண்டுள்ள உறவுகளை மூடிமறைக்கவே இந்த சிவப்பு ஆடை உத்திகள். அவர்களின் மேதின பிரேரணை "அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நடவடிக்கைகளை வன்மையாகக் கண்டனம் செய்வதாக்" கூறிக் கொண்ட போதிலும் கடந்த பெப்ரவரி 19ம் திகதி இலங்கை அமெரிக்க தூதரகத்தினுள் நுழைந்து தமது மனித உரிமைகளை காத்தருளுமாறு ஜே.வீ.பி.தலைவர்கள் விடுத்த வேண்டுகோளையிட்டு இந்த மேதின பிரேரணையோ அல்லது மேதின செம் பதாகைகளோ எதுவும் கூறவில்லை.

அனைத்துலக தொழிலாளர் வர்க்கத்தின் புகழ்பெற்ற அடிப்படைக் கொள்கைகளை அத்திவாரமாகக் கொண்ட தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் இளைஞர்களுக்கும் ஏகாதிபத்தியத்தினை தூக்கிவீசிஉலக சோசலிச புரட்சியை வெற்றிக்கு இட்டுச் செல்லும் முன்நோக்கும் தலைமையும் வழங்குவது நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவும் அதன் இலங்கைப் பகுதியான சோசலிச சமத்துவக் கட்சியுமே என்பதை இந்த 1997 மேதினம் மீண்டும் ஊர்ஜிதம் செய்து கொண்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



# செல்லையா இராஜ்குமாரை விடுதலை செய்!



செ. இராஜ்குமார்

## பொய் வழக்கு பற்றி இராஜ்குமார் எச்சரிக்கை செய்கிறார்

தாம் பண்டாரளை புனர்வாழ்வு முகாமில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் வேளையில் இரகசியப் பொலிசார் சிவில் உடையில் வந்து விசாரணை நடாத்துவதாகவும் இதனால் தமக்கு எதிராக ஒரு பொய் வழக்கைத் தாக்கல் செய்யும் சதியையிட்டு தாம் விழிப்பாக இருப்பதாகவும் தோழர் செல்லையா இராஜ்குமார் சோசலிச சமத்துவக் கட்சிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.பெப்ரவரி முற்பகுதியில் இந்தக் கடிதம் எழுதப்பட்டுள்ள போதும் அது சோசலிச சமத்துவக் கட்சியின் கைக்கு ஏப்பிரல் நடுப்பகுதியிலேயே கிடைத்துள்ளது. அந்தக் கடிதம் பின்வருமாறு குறிப்பிடுகின்றது.

"கட்சியின் வேலைத்திட்டங்கள் வெற்றி அளிக்கட்டும் ! ஆபத்தைப் பற்றி நான் குறிப்பிட்டு எழுதிய கடிதம் கிடைத்ததா?

"இன்று இரண்டு இரகசியப் பொலிஸ் அதிகாரிகள் சிவில் உடையில் வந்து என்னிடம் குறுக்கு விசாரணை செய்தனர். எனினும் அவர்கள் தாம் யார் என்பதை வெளிப்படுத்தவில்லை. முகாமில் இருந்த வேறு ஆட்கள் கொடுத்த தகவல்களின்படியே அவர்கள் யார் என்பதை அறிய முடிந்தது.

"நீங்கள் இந்தப் பிரச்சினையை பாரதூரமானதாகக் கொள்ள வேண்டும்.

"சட்டம் அப்பாவிகளுக்கும் தண்டனை வழங்குகின்றது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது."

கடந்த தொழிலாளர் பாதை, கம்கறு மாவத்த பத்திரிகைகளில் நாம் எச்சரிக்கை செய்தது போல் தோழர்.இராஜ்குமாருக்கும் சோசலிச சமத்துவக் கட்சிக்கும் எதிராகப் பொய் வழக்குத் தாக்கல் செய்யும் அரச சதி தொடர்ந்து இருந்து வருகின்றது.

செல்லையா இராஜ்குமாரை சந்திக்க அனுமதி கேட்டு, சோ.ச.க.மத்திய குழு உறுப்பினர் நந்த விக்கிரமசிங்கவினால் கடந்த மார்ச் 25ம் ஏப்பிரல் 15ம் திகதிகளில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட கடிதங்களுக்கு பதில் கிடைக்கவில்லை. இதைத் தொடர்ந்து இராஜ்குமாரின் சார்பில் அவரின் ஆட்கொணர்வு மனுக்களில் ஆஜராகும் சட்டத்தரணி இரத்தினவேல் புனர்வாழ்வு முகாமுக்கு அவரை நேரில் காணச்சென்ற போதும் அவருக்கு அந்த அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

கடந்த மே 7ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்ட இராஜ்குமாரின் ஆட்கொணர்வு மனு விசாரணைக்கு வந்த போது அவரின் சார்பில் ஆஜராகும் சட்டத்தரணி சி.வீ.விவேகானந்தன் பின்வருமாறு குறிப்பிட்டார்: "பஸ் வண்டியில் சிங்களத்தில் மட்டும் எழுதி இருந்த பெயர்ப் பலகையை வாசிக்க முடியாது பிழையான பாதையில் பயணம் செய்வது தமிழ் தேசிய இனத்தைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்வதற்கும் அவருக்கு எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கும் கட்டளையை வழங்கவும் போதுமான ஒரு காரணமாக பொலிசாரால் கணிக்கப்பட்டுள்ளது" என்றார்.

"பஸ் வண்டியின் பெயர்ப் பலகையை வாசித்துக் கொள்ள முடியாமை ஒரு மனிதனை புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்புவதற்கு போதுமான ஒரு காரணமாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் கணிக்கப்பட்டுள்ளதாகவும்" விவேகானந்தன் இந்த ஆட்கொணர்வு மனு தொடர்பான வழக்கு விசாரணையில் மேலும் குறிப்பிட்டார்.

செல்லையா இராஜ்குமார் 1996 ஜூன் 14ம் திகதி பொலன்னறுவையில் அனுராதபுரம் பஸ் எனத் தவறுதலாக அருணபுர பஸ் வண்டியில் ஏறி, அங்கு பயணம் செய்ததன் காரணமாக கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.அருணபுர பஸ் நிலையத்தில் இறங்கி வவுனியாவுக்கு பயணம் செய்யக்கூடிய பஸ் வண்டியை விசாரித்துக் கொண்டு நிற்கையில் அங்கு வைத்து பொலிசாரால் கைது செய்யப்பட்டார்

இந்த ஆட்கொணர்வு பெப்ரவரி 19ம் திகதி தாக்கல் செய்யப்பட்ட போதும் அரசு தரப்பில் இதற்கு இன்னமும் பதில் தாக்கல் செய்யப்படாததால் விசாரணை தொடர்ந்து ஒத்திவைக்கப்பட்டு வருகின்றது. இந்த வழக்குக்கு பதில் தாக்கல் செய்ய அரங்கவில பொலிஸ் நிலைய அதிபர் எச் .எம் .பியசேன, பொலிஸ் மா அதிபர் டபிள்யூ.பி. ராஜகுரு, சட்டமா அதிபர் ஆகியோர் தவறிவிட்டதாக சட்டத்தரணி விவேகானந்தன் சுட்டிக்காட்டினார். அத்தோடு தமது கட்சியான சோசலிச சமத்துவக் கட்சியுடனோ அல்லது தமது சட்டத்தரணியுடனோ கலந்துரையாட அனுமதியின்றி இரா ஜ்குமார் பிந்துனுவவை புனர்வாழ்வு முகாமில் வைக்கப் பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார். வழக்கு விசாரணை தொடர்ந்து ஒத்துவைக்கப்படுவதற்கு இராஜ்குமாரின் சட்டத்தரணிகள் எதிர்ப்புத்தெரிவித்ததைத் தொடர்ந்து பதில் அளித்த அரசு தரப்புச் சட்டத்தரணி இராஜ்குமார் புனர்வாழ்வு முகாமுக்கு அனுப்பப்பட்டுள்ள விடயம் தமக்கு இன்னமும் தெரியாது எனக் குறிப்பிட்டார். இத்தைகைய ஆட்கொணர்வு மனுக்கள் நூற்றுக் கணக்கில் இருந்து கொண்டுள்ளதால் சட்டமா அதிபர் திணைக்களம் இந்த விதத்தில் காலங்கடத்த நேரிட்டுள்ளதாக நீதியரசர். ஹெக்டர். யாபா குறிப்பிட்டதன் மூலம் இதனை நியாயப்படுத்தினார். எனினும் அடுத்து வழக்கு விசாரணைக்கு வரும் வேளையில் அரச தரப்பினர் தமது எதிரியையும் குற்றச்சாட்டையும் நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் என நீதியரசர் கேட்டுக் கொண்டார்.

# நவசமசமாஜக் கட்சி அங்கத்தவர்களை விடுதலை செய்!

பொதுஜன முன்னணி அரசாங்கம் கடந்த ஏப்பிரல் 8ம் திகதி ஜனரச சுகாதார ஊழியர் சங்கத்தினதும் சுகாதாரத்த்தினதும் திணைக்கள ஊழியர் கூட்டுறவு கடன் சங்க கட்டிடத்தில் பாய்ந்து, ஊழியர் சங்கத்தின் செயலாளர், நவசமசமாஜ கட்சியின் மத்திய குழு உறுப்பினர் சரணபால பாலிஹேனவையும அக்கட்சியின் மத்திய குழு உறுப்பினரான அஜித் பொன்சேகாவையும் கைதுசெய்தனர். மருதானை குப்பியாவத்தவையில் உள்ள அந்தக் கட்டிடத்தில் பாய்ந்ததற்குக் காரணம் அங்கு ஆயுதங்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக கிடைத்த தகவலாகும் என பொலிசார் குறிப்பிட்டனர். அங்கு பொலிசார் 32 துவக்குகளை கண்டெடுத்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிசாருக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிக்கச் சென்ற நவசமசமாஜக் கட்சி பொதுச் செயலாளர் கலாநிதி. விக்கிரமபாகு கருணாரத்னவும் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். ஜனரஜ சுகாதார ஊழியர் சங்கத்தின் செயலாளரான சரணபாலவும் அஜித் பொன்சேகாவும் தற்சமயம் அவசரகாலச் சட்டத்தின் கீழ் பேலியகொடைப் பொலிசில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அஜித் பொன்சேகா ஷெல் காஸ் கம்பனி ஊழியராவார்.

இந்த பொலிஸ் ஆத்திரமூட்டலை வன்மையாகக் கண்டனம் செய்யும் சோசலிச சமத்துவக் கட்சியும் தொழிலாளர் பாதை, கம்கறு மாவத்த பத்திரிகைகளும் கைது செய்து வைக்கப்பட்டுள்ள சரணபால பாலிஹேனவையும் அஜித பொன்சேகாவையும் உடன் விடுதலை செய்யும்படியும் நவ சமசமாஜக் கட்சி தலைவர் உட்பட்ட மூவருக்கும் எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டை உடனடியாக வாபஸ்பெறும் படியும் வேண்டிக் கொள்கின்றது.

இந்தப் பொலிஸ் பாய்ச்சலும், கைதும், ஒடுக்குமுறையும் அரச ஒடுக்குமுறையை பலப்படுத்த பொதுஜன முன்னணி அரசாங்கம் தொடுத்துள்ள கடைகெட்ட ஒரு இயக்கத்தின் பாகமாகும். "சட்டவிரோதமாக" வைத்துக் கொண்டுள்ள சகல ஆயுதங்களையும் அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டும் என கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் காலத்தில் இருந்து உக்கிரமான பிரச்சாரத்தினை அரசாங்கம் நடாத்துகின்றது. பொதுஜன முன்னணி , யூ.என்.பி.முதலாளிகளின் கைகளில் அரசாங்கத்தின் ஆயுதக் குதங்களில் இருந்து பெற்ற ஒரு தொகை ஆயுதங்கள் இருந்து வருகையில் பொதுஜன முன்னணி அரசாங்கம் நடாத்தி வரும் இந்த இயக்கத்தின் நிச நோக்கம் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிரான அரச இயந்திரத்தினை பலப்படுத்துவதாக இருந்து கொண்டுள்ளது.தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கள் இதைப் பற்றி விழிப்படைவதோடு, தமது ஜனநாயக உரிமைகளை காக்க அணிதிரள வேண்டும்.

நவசமசமாஜக் கட்சியும் அதன் தொழிற் சங்கங்களும் பொதுஜன முன்னணி அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணர உழைத்த அமைப்புக்கள் என்றாலும் முதலாளித்துவ பிற்போக்கு அமைப்புக்களைப் பலப்படுத்த அவற்றுடன் கூட்டாகத் தொழிற்படுவன என்றாலும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் இந்த பொலிஸ் ஆத்திரமூட்டல்களை எதிர்த்துக் கிளர்ந்தாக வேண்டும். ஏனெனில் இது தமது உரிமைகளை காக்கும் போராட்டத்தின் ஒரு பாகமாக அமைந்துள்ளது.

தொழிற்சங்க அலுவலகத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஆயுதங்கள் 1988 வன்முறைக் காலத்தில் வெலிசறை கடற்படை முகாமில் இருந்து விநியோகிக் கப்பட்டவையெனக் கூறப்படுகின்றது. இந்த வன்முறைக் காலத்தில் நவசமசமாஜக் கட்சியும் அதன் தொழிற்சங்கங்களும் ஜயவர்தன அரசாங்கத்திடம் இருந்தும் பின்னர் பிரேமதாச அரசாங்கத்திடம் இருந்தும் ஆயுதங்களை பெற்றுக் கொண்டதோடு , இராணுவத்திடம் இருந்து பெற்ற ஆயுததங்களைக் கையாளுவது குறித்து தமது குழுவினருக்கு ஆயுதப் பயிற்சியும் பெற்றுக் கொண்டனர். நவசமச்மாஜக் கட்சி அப்போது சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளுடன் சேர்ந்து முதலில் விஜய குமாரதுங்கவின் தலைமையில் இருந்த சிறீலங்கா மக்கள் கட்சியின் கீழும் பின்னர் ஐக்கிய சோசலிச முன்னணி என்ற பெயரில் மக்கள் முன்னணிகளை அமைத்துக் கொண்டிருந்தனர்.இந்தச் சகல கட்சிகளும் யூ.என்.பி.அரசாங்கத்திடம் இருந்து ஆயுதங்களைப் பெற்றுக் கொண்டு இருந்தனர்.

யூ.என்.பி.அரசாங்கமும் பாசிச ஜே.வீ.பி.யும் தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிராக தொடுத்த வன்முறைகளுக்கு எதிராக தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கிய முன்னணியை அமைத்துக் கொண்டு அதன் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்(இன்றைய சோசலிச சமத்துவக் கட்சி) நவசமசமாஜக் கட்சிக்கும் சமசமாஜ-கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் தொழிற்சங்கங்களுக்கும் யோசனை தெரிவித்தது. இலங்கையினதும் அனைத்துலகினதும் தொழிலாளர் வர்க்கத்தின் நனவான பகுதியினரின் பிரமாண்டமான ஒத்துழைப்புக் கிடைத்த இந்தப் பிரேரணையை நவசமசமாஜக் கட்சி அடியோடு நிராகரித்தது. 1989 ஜனவரி 5ம் திகதி ந.ச.ச.க. பொதுச் செயலாளரான கலாநிதி.விக்கிரமபாகு கருணாரத்ன பு.க.க.பொதுச் செயலாளருக்கு அனுப்பிய கடிதத்தில் தொழிலாளர் வர்க்க ஐக்கிய முன்னணி யோசனையை வீசிவிட்டு பிரேமதாச அரசாங்கத்துடன் அணிதிரண்ட ஒரு ஐக்கிய சோசலிச முன்னணிக்குள் நுழைய வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தார். தொழிலாளர்களுக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிராக யூ.என்.பி.யின் ஆயுதம் தாங்கிய இந்த அமைப்பு, கிராமப்புற இளைஞர்களைப் படுகொலை செய்வதற்கு அரசாங்கத்தின் கரங்களைப் பலப்படுத்தியதற்குப் பொறுப்புச் சொல்ல வேண்டும். அந்நாட்களில் நவசமசமாஜக் கட்சி மறுபுறத்தில் ஜே.வீ.பி.பாசிச கிளர்ச்சிகளுக்கும் ஆதரவு வழங்கியது.

பொதுஜன முன்னணி அரசாங்கத்தை ஆட்சிக்கு கொணர்வதன் மூலம் பொது மக்கள் ஜனநாயக உரிமைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என நடாத்தி வந்த பொய்ப் பிரச்சாரமும் அரச இயந்திரத்தினைப் பலப்படுத்த முண்டு கொடுத்ததும் இன்று அந்தக் கட்சிக்கே எதிரான நிலக்கண்ணி வெடியாகியுள்ளது. அரசாங்கத்தைப் பற்றி பொய் விமர்சனங்களைத் தெரிவித்துக் கொண்டு பொதுமக்களை தவறான வழியில் திருப்பிவிடும் நவசமசமாஜக் கட்சிக்கும் அதன் தொழிற்சங்க அதிகாரத்துவத்துக்கும் மிரட்டலை விடுத்துக் கொண்டு அரசாங்கம் கூறுவதென்ன? சுண்டெலி போல் எம் பின்னால் வயிறளவுங்கள்!

பொலிஸ் ஆத்திரமூட்டலைப் பற்றிய தகவல் சேகரிக்க ந.ச.ச.க. அலுவலகத்துக்குச் சென்ற "தொழிலாளர் பாதை" பத்திரிகையாளரிடம் அக்கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான லீனஸ் ஜயதிலக கூறுகையில் "இந்த செய்தியை அறிக்கை செய்கையில் "அரசாங்கம் கவனமாக" இருந்து கொண்டுள்ளது" என்றுள்ளார். டெயிலி நியூஸ் பத்திரிகையில் தமது கட்சியின் பெயர் குறிப்பிடப் படாததன் மூலம் இது தெரிகின்றது எனவும் அவர் கூறியுள்ளார். அரசாங்கத்தின் தொழிற்பாட்டை ந.ச.ச.க.தலைவர்கள் தெரிந்து

(15ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com

# மொபூட்டு ஆட்சி வீழ்ச்சி கண்டது

**(இன்டர்நஷனல் வேர்க்கர்ஸ் புலட்டீன் பத்திரிகையில் மே 2ல் வெளியான கட்டுரையில் இருந்து ஆக்கப்பட்டது)**

"மொபூட்டுவாதம் வரலாற்றின் ஒரு சின்னமாகப் போகிறது " வெள்ளை மாளிகை செய்தித் துறைச் செயலாளர் ஏப்பிரல் முற்பகுதியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அமெரிக்க இராஜாங்கத் திணைக்கள ஆபிரிக்க விவகாரங்களுக்கான உதவிச் செயலாளரும் இதே தொனியிலேயே பேசியுள்ளார். மொபூட்டு செசே செகோவேரின் சயிரே சர்வாதிகாரம் "வங்குரோத்தாகி" "கடந்த காலத்தின் சின்னமாகிவிடடது." என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மொபூட்டுவின் சகாப்தம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது என்பதில் எந்தவிதமான சந்தேகமும் கிடையாது. மொபூட்டுவின் ஆட்சி சயிரேயின் அரைவாசிக்கு மேற்பட்ட பகுதியை லோரன்ட் கபிலாவின் இராணுவத்திடம் இழந்துள்ளதோடு அவரும் புற்றுநோயால் செத்துக் கொண்டுள்ளார். இறுதியாக அவரின் பெரும் பாதுகாவலராக விளங்கிய பிரான்சு தனது ஆதரவை விலக்கிக் கொண்டுவிட்டது. அது மொபூட்டுவிற்கு பின்னைய சயிரேயின் மீதான செல்வாக்குக்கு வாஷிங்டனுடன் போட்டியிட்டுக் கொண்டுள்ளது.

மொபூட்டு யார்? அவன் ஆட்சிக்கு வந்தது எப்படி? ஆபிரிக்காவின் அதிக ஜனத்தொகை கொண்ட ஒரு நாட்டின் மீது அவன் சுமார் 32 ஆண்டுகள் தனது பிடியைக் கொண்டிருந்தது எப்படி? இந்த எந்த ஒரு கேள்விக்கும் ஏகாதிபத்தியத்தினதும் ஆபிரிக்க தேசிய முதலாளி வர்க்கத்தினதும் பாத்திரத்தினை ஆய்வு செய்யாமல் பதிலளிக்க முடியாது .

1960ல் பெரும் காலனியான பெல்ஜியன் கொங்கோவுக்கு வழக்காறான சுதந்திரம் வழங்கப்பட்டது . இதைத் தொடர்ந்து உருவான குழப்பநிலைகளினால் ஆட்சிக்கு வந்தவன்தான் மொபூட்டு . ஆபிரிக்கக் கண்டத்தில் பரந்து வந்த காலனித்துவ எதிர்ப்பு இயக்கத்தினால் பெரிதும் கிளர்ச்சியடைந்த காணப்பட்ட சனத்தொகைக்கு முகம் கொடுத்த நிலையில் பெல்ஜியம், கொங்கோவிற்கு சுதந்திரம் வழங்கியது. அது எந்தவிதமான தயாரிப்புக்களும் இல்லாமலேயே அங்ஙனம் செய்தது. அச்சமயத்தில் அங்கு ஒருங்கமைக்கப்பட்ட-ஐக்கியப்பட்ட ஒரு கொங்கோலிய மக்கள் கட்சியோ அல்லது ஒரு தேசிய இயக்கமோ இருக்கவில்லை. முன்னணி கொங்கோலிய தேசியவாதியான பட்ரீஸ் லுமும்பா பிரதமரானார்.

ஆபிரிக்காவின் செல்வத்தைக் கறக்கும் ஒரு பொறிமுறையைக் கொண்டிருக்கும் அதே வேளையில் பகைமை கொண்ட மக்களை ஆட்சி புரியும் சுமையில் இருந்து பெல்ஜியம் தன்னை விடுவித்துக் கொள்வதை இலக்காகக் கொண்டிருந்தது. இந்த இலக்கில் பெல்ஜியம் சுரங்க அகழ்வு நடவடிக்கைகளின் மையமாக விளங்கிய கட்டங்காவில் இருந்து இயங்கி வந்த மொஷி சோம்பேயின் ஒரு பிரிவினைவாத இயக்கத்துக்குத் தனது ஆதரவை வழங்கியது.

லுமும்பா கொங்கோ பிரிவினைக்கு எதிராக முதலில் அமெரிக்காவின் ஆதரவை நாடினார். அது நிராகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் சோவியத் யூனியனின் ஆதரவைக் கோரினார். அமெரிக்கா, கொங்கோ அரசாங்கத்தை வீழ்த்தி, பிரதமர் பட்ரீஸ் லுமும்பாவை படுகொலை செய்வதை இலக்காகக் கொண்ட ஒரு சீ.ஐ.ஏ. இயக்கத்தை தொடுப்பதில் அக்கறை காட்டியது. முதலாவது இலக்கு மொபூட்டு நடாத்திய ஒரு இராணுவ சதியின் மூலம் சாதிக்கப்பட்டது. அன்று மொபூட்டு லுமும்பாவின் ஒரு இராணுவ ஆலோசகராக விளங்கினார். அடுத்ததாக சீ.ஐ.ஏ. மொபூட்டுவின் ஊடாகத் தொழிற்பட்டு, லுமும்பாவை கட்டங்காவுக்கு மாற்றியது. லுமும்பா அங்கு படுகொலை செய்யப்பட்டார்.

இந்த மாஜி .பெல்ஜியம் காலனியில் சீ.ஐ.ஏ. ஒரு நீண்ட கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததோடு 1965ல் மற்றொரு இராணுவ சதியையும் ஒழுங்கு செய்தது. அது மொபூட்டுவை ஜனாதிபதி ஆக்கியது. அதைத் தொடர்ந்து வந்த தசாப்தத்தில் மொபூட்டு ஆட்சியில் இருந்து வருவதற்கு அவசியமான வெளிப்படையானதும் மறைமுகமானதுமான உதவிகளை அமெரிக்கா வழங்கி வந்தது. சீ.ஐ.ஏ. அவனின் இராணுவ. பொலிஸ் சித்திரவதைகாரர்களுக்கு பயிற்சி அளித்ததோடு, அவனின் அரசியல் எதிரிகளை ஒழித்துக் கட்டவும் உதவி வழங்கியது. 1970பதுகளின் கடைப்பகுதியில் அமெரிக்க ஜனாதிபதி கார்ட்டர் நிர்வாகம் மொறாக்கோ, பிரான்சிய நாடுகளை உள்ளடக்கிய ஒரு அனைத்துலக கூட்டு முயற்சியில் ஈடுபட்டது. கட்டங்காவில் தளங்களைக் கொண்ட கிளர்ச்சியாளர் களிடமிருந்து மொபூட்டுவைக் காக்கவே இவை இடம்பெற்றன.

அமெரிக்க ஆதரவுக்கு பதில் உபகாரமாக சயிரேயின் தலைநகரான கின்சாஷா ஆபிரிக்க முழுவதிலுமான சீ.ஐ.ஏ. நடவடிக்கைகளின் முக்கிய தளமாக மாறியது. குறிப்பாக தென் ஆபிரிக்காவுடன் சேர்ந்து அமெரிக்கா அங்கோலா, மொஷாம்பிக் தேசியவாத ஆயுதப் போராட்ட இயக்கங்களுக்கு எதிரான கேடுகெட்ட யுத்தங்களின் தளமாக மாற்றியது.

மொபூட்டு ஒரு தேசியப் பொருளாதாரத்தைக் கொள்ளையடித்து சயிரே மக்களின் இழப்புக்களின் பேரில் ஒரு சிறிய கும்பலை செல்வந்தர் களாக்கியவர்களுக்கு தலைமை தாங்கினான். ஆண்டுக்கு 200 டாலர்களைத் தலா வருமானமாகக் கொண்டிருந்த மக்களைக் கொண்ட ஒரு நாட்டின் தலைவரான மொபூட்டு உலக செல்வந்தர்களில் ஒருவரானார். போஷாக்கின்மையும் நோய்களும் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு உக்கிரம் கண்டிருந்ததால் நாட்டின் சிறுவர்களில் 50 வீதத்துக்கும் அதிகமானோர் 5 வயதை அடைவதற்கு முன்னரே மரணத்தைத் தழுவிக் கொண்டுவிடுவது வழக்கமாகியது.சிவில் சேவை அதிகாரிகளாக சம்பளப் பட்டியலில் பெயர் குறிப்பிடப் பட்டவர்களில் மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமானவர்களின் பெயர்கள் போலியானவை. சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகள் இவர்களின் சம்பளத்தை தமது சாக்குகளில் போட்டுக் கொண்டனர்.

## மொபூட்டுவும் ஆபிரிக்க முதலாளி வர்க்கமும்

சீ.ஐ.ஏ. மொபூட்டுவை ஆட்சியில் இருத்த உதவியதோடு அமெரிக்கா அவர் பதவியில் இருந்து தூக்கி வீசப்படுவதை தடுக்கவும் தலையிட்டது. 1960பதுகளில் இருந்து 1980பதுகள் வரையில் வாஷிங்டன் சயிரேயின் சர்வாதிகாரிஙய சோவியத் யூனியனுடனான குளிர் யுத்தத்தில் தனது முக்கிய ஆபிரிக்கச் சொத்தாக கணித்தது. அது அவருக்கு கோடானுகோடி டாலர்களை உதவியாக வழங்கியது. "மொபூட்டிசத்தை" வெறுமனே அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட ஒரு கைப்பொம்மை ஆட்சியினால் திணிக்கப்பட்ட ஒரு ஸ்தாபனமாக வருணிக்க முடியாது. அங்ஙனம் வருணிப்பதானது ஏகாதிபத்தியத்துக்கும் ஆபிரிக்க கண்டம் பூராவும் உள்ள தேசிய சுரண்டலாளர்களுக்கும் இடையேயான உயிர்புஷ்டியான தொடர்புகளை குறைத்து மதிப்பிடுவதாக அமைந்து விடும்.

சயிரேயின் ஒடுக்குமுறையும் வறுமையும் ஊழலும் அவற்றின் பரிமாணத்தைப் பொறுத்த மட்டில் மட்டுமே சிறப்பு இலட்சணம் வாய்ந்தவை. தனிக்கட்சி சர்வாதிகாரங்களும் இராணுவ ஆட்சியும் சுதந்திரத்தில் இருந்து ஆபிரிக்க ஜனத்தொகையின் மாதிரியாகிவிட்டது. கண்டத்தின் பொருளாதாரத்தில் பல பகுதிகள் சர்வதேச நாணய நிதியத்தினதும் உலக வங்கியினதும் கண்காணிப்பில் நடாத்தப்பட்டு வருகின்றன. இவை பூகோளத்தின் இந்த வறிய பிராந்தியங்களை பல முன்னேறிய நாடுகளிற்கு தேறிய மூலதன ஏற்றுமதியாளர்கள் ஆக்கியுள்ளது.

மொபூட்டு ஒரு முழு ஆபிரிக்க முதலாளி வர்க்கத் தட்டினைப் பிரதிநிதித்துவம் செய்கின்றான். காலனித்துவத்தினால் உருவாக்கப்பட்ட இந்த வர்க்கம் இரண்டாம் உலக யுத்தத்தைத் தொடர்ந்து வந்த காலனித்துவ ஒழிப்புப் போக்கின் ஊடாக ஆட்சிக்கு வந்தது. இதனது தேசியவாத சித்தாந்தங்கள் ஆபிரிக்க மக்களுக்கு விடுதலை வழங்க வாக்குறுதி அளித்த போதிலும் ஆளும் வர்க்கம் அதனது சொந்த நலனுக்காகவே உண்மையில் ஆட்சியின் நெம்புகோலை தனது பிடிக்குள் கொணர முயன்றது.

இதனால் இது போட்டி ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியாளர்கள் ஆபிரிக்காவுக்கான தமது 19ம் நூற்றாண்டு போட்டாபோட்டிகளின் போது வரையப்பட்ட ஒருதலைப்பட்சமான எல்லைகளை ஒப்புக்கொண்டது. அனைத்து ஆபிரிக்க அரசுகளும், ஆபிரிக்க ஐக்கியத்துக்கான அமைப்பு என தவறாகப் பேர்சூட்டிக் கொண்டவையும் தேசிய முதலாளி வர்க்கம் ஒவ்வொன்றும் தனது அதிகாரத்தையும் சலுகைகளையும் ஸ்தாபித்துக் கொண்ட பழைய காலனித்துவ எல்லைகளை மீறமுடியாதவையாக அங்கீகரித்துக் கொண்டதன் மூலம் ஆபிரிக்க ஐக்கியத்துக்கான அமைப்புக்கள் முற்றிலும் அர்த்தமற்ற ஒன்றாக இருந்து வருகின்றது.

1960பதுகளினதும் 1970பதுகளினதும் தேசிய அபிவிருத்தித் திட்டங்கள் 1980 பதுகளதும் 1990களதும் "அமைப்புரீதியான சீரமைப்பு வேலைத்திட்டங்களுக்கு " வழிவகுத்தது. தமது நடிப்புக்கள் நிறைந்த "முதலாளித்துவம் அல்லாத அபிவிருத்தி," "ஆபிரிக்கன் சோசலிசம்" களைக் கைவிட்டுவிட்டு இந்த ஆட்சியாளர்கள் சர்வதேச வங்கிகளின் ஏஜன்டுகளுக்கு சற்று மேற்பட்டவர்களாகினர். சிக்கன நடவடிக்கைகளைத் திணித்ததோடு கடன்களுக்கு பதிலாக தமது நாட்டின் செல்வங்களை வெளியே பாய்ச்சினர். இவற்றின் மூலம் தம்மையும் தமது ஆதரவாளர்களையும் தொடர்ந்து செல்வந்தர்களாக்கிக் கொண்டனர்.

இந்தக் கட்டுமானத்தினுள் அரசியல் சுதந்திரத்துக்கும் நிஜ பொருளாதார , சமூக அபிவிருத்திக்குமான ஆபிரிக்கத் தேசியவாதத்தின் வாக்குறுதிகள் என்றுமில்லாத விதத்தில் போலியாகின. மொபூட்டுவின் சொந்த ஆட்சி தேசியவாதத்தின் இந்த போலி மோசடிகளில் ஈடுபட்டது. அது ஐரோப்பிய பெயர்களுக்குப் பதிலாக ஆபிரிக்கப் பெயர்களைச் சூட்டியது. "அதிகாரபூர்வமான" ஆபிரிக்க உடைகளையும் பழக்கவழக்கங்களையும் திணித்துவந்தது. பாடசாலைகளையும் ஆஸ்பத்திரிகளையும் இழுத்துமூடிக் கொண்டும் நாட்டின் செல்வங்களை தனது சொந்த பிரான்சிய, சுவிஸ் வங்கிக் கணக்குகளிற்கு மாற்றிக் கொண்டும் மொபூட்டு இதைச் செய்தான்.

வாஷிங்டன் மொபூட்டுவையிட்டுக் களைப்படைந்து போனதற்கு ஜனநாயக உரிமைகள் பற்றியோ அல்லது சயிரே மக்களின் சமூக நிலைமைகளையிட்டோ கொண்டுள்ள அக்கறை காரணம் அல்ல. குளிர் யுத்தத்தின் முடிவுடன் அவரின் பயன்பாடு ஒழிந்து போய்விட்டது. மொபூட்டுவின் ஊழல்கள் திறமையான முறையில் இலாபத்தைச் சுரண்டிக் கொள்ளும் பன்நாட்டு வங்கிகளதும் கூட்டுத்தாபனங்களதும் நடவடிக்கைகளுக்கு ஒரு தடையாகி உள்ளன.

## கபிலாவும் ஆபிரிக்க தேசியவாதத்தின் முட்டுச் சந்தும்

ஆனால் மொபூட்டுவின் வீழ்ச்சி மொபூட்டிசத்தின் முடிவைக் குறிக்கின்றதா? ஆனால் இந்த அரசியல் தோற்றப்பாடு குறுகிய அர்த்தத்தில் வரைவிலக்கணம் செய்யப்படின் மட்டுமே இங்ஙனம் கொள்ள முடியும்.

வாஷிங்டன் தனது ஆதரவை கபிலா தலைமையிலான கொங்கோ ஜனநாயக விடுதலை முன்னணிக்கு வழங்கி வருகின்றது என்பதற்கான பெரும் அறிகுறிகள் தென்படுகின்றன. வாஷிங்டனுடன் நெருங்கிய உறவுகள் கொண்ட உகண்டா, ருவாண்டா -ஆபிரிக்க ஆட்சியாளர்கள் கபிலா படைகளை வெளிப்படையாக ஆதரித்து வருகின்றனர்.

பன்நாட்டு சுரங்க நிறுவனங்களின் செயற்பாடுகள் இதனை மேலும் ஊர்ஜிதம் செய்கின்றன. மொபூட்டுவை பதவியில் இருந்து இறங்குமாறு கபிலா இறுதி காலக்கெடு அறிவித்தல் வழங்கியதும் ஹோப்பையும் ஆர்க்கன்சாஷையும் தளமாகக் கொண்ட அமெரிக்கன் மினரல் பீல்ட்ஸ் என்ற ஒரு சுரங்கக் கம்பனி கிளர்ச்சி இயக்கத்துடன் 1 பில்லியன் டாலர் கொந்தராத்தில் கைச்சாத்திட்டுக் கொண்டுள்ளதாக அறிவித்தது. இந்தக் கம்பனி அமெரிக்க ஜனாதிபதியான பில் கிளின்டனின் குடியிருப்பு நகரத்தில் இருந்து கொண்டிருப்பது தற்செயலானதல்ல. கபிலா வாஷிங்டனின் உத்தியோகபூர்வமான ஆதரவைப் பெற்றுக் கொண்டுள்ளார் என்பதை தெரிந்து கொள்ளாது இந்த கம்பனி இத்தகைய பெரும் கொடுக்கல் வாங்கல்களைச் செய்து கொண்டிருக்கும் என்பதை உள்ளீர்த்துக் கொள்வது சங்கடமானது.

இவ்வாறே டீ பியர்ஸ், ஆங்கிலோ அமெரிக்கன் ஒவ் சவுத் ஆபிரிக்கா, டென்கே மைனிங் ஒப் கனடா, அன்வில் மைனிங் ஒப் அவுஸ்திரேலியா ஆதியன கபிலாவின் கொங்கோ ஜனநாயக விடுதலை முன்னணியுடன் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டுக் கொள்ள வரிசையில் நின்று கொண்டுள்ள வெளிநாட்டுக் கம்பனிகளில் சிலவாகும். இவை எல்லாம் மொபூட்டுக்குப் பின்னைய சயிரேயில் இன்னமும் சுரண்

டப்படாத கோபால்ட், செம்பு, தங்க , வைர படிவங்களில் இருந்து பிரமாண்டமான இலாபத்தை குவித்துக் கொள்ளும் சாத்தியம் பற்றி ஆராய்ந்து வருகின்றார்கள். கபிலா சுரங்கக் கம்பனிகளின் நிறைவேற்று அதிகாரிகளால் வழங்கப்பட்ட தனிப்பட்ட லீர் ஜெட் விமானங்களில் புதிதாக "விடுதலை செய்யப்பட்ட" நகரங்களுக்கு சென்று வந்துள்ளார்.

அவுஸ்திரேலியா, அமெரிக்கா, ஐரோப்பா முதலிய நாடுகளைச் சேர்ந்த குட்டி முதலாளித்துவ இடதுசாரிகள் கபிலாவின் இராணுவ முன்னேற்றங்களைக் கொண்டாடியுள்ளன. இவர்கள் ஆபிரிக்காவில் காலனித்துவமயமாக்க ஒழிப்பு உதயமாகிய நான்கு தசாப்தங்களில் இருந்து எதையும் கற்றுக்கொள்ள இலாயக்கற்றவர் களாக உள்ளனர். அல்ஜீரியாவில் இருந்து சிம்பாபே வரை ஒன்றன் பின்னொன்றாக "ஆயுதப் போராட்டங்கள்" மூலமும் "தேசிய விடுதலை" பிரகடனங்கள் மூலமும் இவை ஆட்சிக்கு வந்துள்ளன.இவை எல்லாம் ஏகாதிபத்திய வங்கியாளர்களதும் ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களதும் விருப்புவெறுப்புக்களை திணிப்பதற்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட ஒடுக்குமுறை அரசியல் ஆட்சிகளைத் திணிக்கவே வந்தன.

இந்த தேசியவாத இயக்கங்களின் ஒரு வரலாற்று ஐந்தொகையை வரைந்து கொள்வது அவசியமாகியுள்ளது. ஆபிரிக்க முதலாளி வர்க்கம் வெளிநாட்டு மூலதனத்தில் சார்ந்துள்ளதோடு தமது சொந்த நாடுகளில் முதலாளித்துவ, அரைக் காலனித்துவ வடிவிலான சுரண்டல்களிலும் வேருன்றியுள்ளதோடு அவை கண்டத்தின் மக்கள் முகம் கொடுக்கும் வறுமை, பட்டினி, யுத்தம் போன்றவைக்கு எந்தவிதமான முற்போக்கு பதிலையும் வழங்க இலாயக் கற்றவையாக தம்மை நிரூபித்துக் கொண்டன.

ஆபிரிக்க விடுதலையை காலனித்துவ வாதிகளால் ஏற்படுத்தப் பட்ட எல்லைகளைக் கொண்டிருப்பதில் அக்கறையற்றவர்களாலும் சகலரையும் ஒரு பொதுப்போராட்டத்தில் ஐக்கியப் படுத்துவதில் அக்கறை கொண்டவர்களாலும் மட்டுமே ஈட்டப்படமுடியும். அது தொழிலாளர் வர்க்கமே. அது தனது அரசியல் சுயாதீனத்தினை ஸ்தாபிதம் செய்ய வேண்டும். அது வறிய விவசாயிகளுக்கு தலைமை வழங்குவதன் மூலம் தன் பின்னால் அணிதிரட்டிக் கொள்ள வேண்டும். அதன் மூலம் தேசிய முதலாளி வர்க்கத்தையும் ஏகாதிபத்தியத்தையும் தூக்கிவீசப் போராட வேண்டும். ஆபிரிக்காவில் உள்ள ஒரே நிசமான புரட்சிகர சக்தியாக தொழிலாளர் வர்க்கம் இருப்பதைப் போலவே கண்டத்தில் தேசிய, சமூக ஒடுக்குமுறைகளுக்கு முடிவுகட்ட இலாயக்கான ஒரே வேலைத்திட்டமாக நிரந்தரப் புரட்சி வேலைத்திட்டம் இருந்து கொண்டுள்ளது.

படிப்பகம்

www.padippakam.com



# புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் 6 வது தேசிய மாநாடு: அனைத்துலக கம்யூனிஸ்ட் கட்சியின் நல்வாழ்த்துக்கள்

அன்பின் விஜே,

அனைத்துலக கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய குழு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் சகல மாநாட்டு பேராளர்களுக்கும் அங்கத்தவர்களுக்கும் தனது உயர்ந்த புரட்சிகர நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றது. தோழர். ராஜ்குமாருக்கும் அவரது குடும்பத்துக்கும் ஒத்துழைப்பைத் தெரிவிக்கும் சிறப்பு செய்தியை அனுப்பிவைக்குமாறு தங்களைக் கேட்க இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ள நாம் விரும்புகின்றோம்.

தங்களின் மாநாடு, பு.க.க.28 வருட காலத்தினுள் மிகவும் முக்கியமான நிகழ்ச்சியாக இருப்பதோடு முழு அனைத்துலக குழுவினதும் அரசியல் அபிவிருத்தியில் வரலாற்றுத் திருப்புமுனையையும் குறித்து நிற்கின்றது. அது நடப்பது உலக முதலாளித்துவ அமைப்பின் வேகமான நெருக்கடியின் பெருக்கத்தின் மத்தியிலாகும். இலங்கையினுள்ளும் வேகமாக வளர்ச்சி கண்டுவரும் முன்னோடி புரட்சிகர நிலைமையினுள் இந்த நெருக்கடி மோசமாக வெளிப்பாடாகிக் கொண்டுள்ளது. இந்த வார இறுதியிலும் கூட நீங்கள் கலந்துரையாடும் பணிஅதாவது பு.க.க.வை சோசலிச சமத்துவக் கட்சியாக மாற்றுவது, அடுத்துவரும் காலப்பகுதியில் சிங்கள - தமிழ் தொழிலாளர்களின் தலைமையாக தோன்றுவதற்காக எமது இயக்கத்துக்கு அவசியமான அரசியல் அடிப்படையைப் போடும் என்பதில் நாம் நிச்சயமாக உள்ளோம்.

லீக்கினை கட்சியாகப் பரிணாமம் செய்வது கடந்த 20 மாதங்களாக நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினுள் கலந்துரையாடலின் நடுமையமாக இருந்து வந்துள்ளது. இது உலகப் பொருளாதாரத்தின் ஆழமான புறநிலை மாற்றங்களையும் சகல வர்க்க உறவுகளையும் மாற்றுவதனுள் அவற்றின் செல்வாக்கினை —ஈர்த்துக்கொள்ள வேண்டும் என்பதை புரிந்து கொள்வதை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இது -புதிய வடிவங்களில் அரசியல் வேலைகளை அபிவிருத்தி செய்யும் சவாலை சகல பகுதிகளின் முன்னரும் தோற்றி உள்ளது. நாம் சகலரும் தொழிலாளர், இளைஞர்க்ள், சோசலிசத்தில் விருப்புக் கொண்ட புத்திஜீவிகளின் பரந்த தட்டினரிடையே பெரிதும் ஆழமாக ஊடுருவும் சாத்தியத்தினை எமக்கு ஏற்படுத்தித்தரும் புதிய நடைமுறையை அபிவிருத்தி செய்ய வேண்டும். அதன்மூலம் நெருக்கடியினுள் உள்ளடங்கியுள்ள புறநிலை முரண்பாடுகளுக்கு எமது கட்சிகளினுள் வளரும் — உள் --வெளிப்பாட்டை கைவரப்பெற நாம் இடமளிக்க வேண்டும்.

கடந்த நவம்பர்-டிசம்பர் மாதங்களில் பிரான்சிய வேலைநிறுத்த இயக்கம் அம்பலப்படுத்தியது போல் ஐரோப்பிய, அனைத்துலக தொழிலாளர் வர்க்கத்தின் புரட்சிகர எழுச்சிகளின் புதிய காலகட்டம் இப்போது ஆரம்பமாகி உள்ளதால் அது தீர்க்கமானதும் முக்கியமும் காலத்துக்கு ஏற்றதுமான கலந்துரையாடல் ஆகியுள்ளது. இதற்கு எமது அனைத்துலக இயக்கம் சம்பந்தமாக பெரிதும் நீண்டதூரம் செல்லும் அரசியல் சமிக்கை இருந்து கொண்டுள்ளது. வர்க்கப் போராட்டத்தின் உத்வேகம் இடம்பெறுவது உலக முதலாளித்துவத்தின் வரலாற்று நெருக்கடி 1968–75 கால கட்டத்தினுள் இருந்ததைக் காட்டிலும் உயர்ந்த பண்பு ரீதியான கட்டத்தினை எட்டிக் கொண்டுள்ளதும், மார்க்சிசத்துக்கும் சந்தர்ப்பவாதத்துக்கும் இடையேயான உறவு மார்க்சிஸ்டுகளின் நலனுக்கு காரணமான முறையில் புறநிலைரீதியாக பரிணாமம் கண்டுள்ளதுமான ஒரு நிலைமையின் கீழாகும்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக மட்டும் அல்லாது ஸ்டாலினிசத்துக்கும் சமூக ஜனநாயகத்துக்கும் மத்தியவாதத்துக்கும் எதிராக மார்க்சிச அடிப்படைகளை பாதுகாக்க ட்ரொட்ஸ்கிச இயக்கம் வாழ்வுக்கும் சாவுக்கும் இடையே போராட்டத்தினை முன்னெடுத்த கடந்த ஏழு தசாப்தங்களாக அது தயாரானது இந்த சந்தர்ப்பத்துக்காகவேயாகும். புதிய கட்சியை அமைப்பது இடம்பெறுவது பிரமாண்டமான வரலாற்று சம்பவங்களின் சோதனைகளுக்கு எதிரில் நிரூபிக்கப் பட்டுள்ள அடிப்படைக் கொள்கைகள் வேலைத் திட்டத்தின் அடிப்படையில் மட்டுமேயாகும்.

லங்கா சமசமாஜக் கட்சி ட்ரொட்ஸ்கிசத்தை கைகழுவிவிட்டதற்கு எதிரான போராட்டத்தினுள் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கை பகுதியாக 1968ல் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அமைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் இருந்து அது தொழிலாளர் வர்க்க, விவசாயிகள் தகவமைவினை அடிப்படையாகக் கொண்டது இந்த மாபெரும் வரலாற்று கொள்கைகளின் அடிப்படையிலேயே. நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால் தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ஓடுகாலிகள் தோற்கடிக்கப்பட்டதனுள் தோழர்.கீர்த்தி பாலசூரியவும் முழு புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவர்களும் இட்டுநிரப்பிய பாத்திரத்தினையும் எமது அனைத்துலக இயக்கத்தின் கோட்பாட்டு, அரசியல் அபிவிருத்தியினுள் -அதைத் தொடர்ந்து பு.க.க.காரியாளர்கள் இட்டுநிரப்பிய பாத்திரத்தின் மூலம் அந்த விடயம் 1985-86ல் நிரூபிக்கப்பட்டது.

## அரசியல் ஆளுமை

பு.க.க.வுக்கு இலங்கை முழுவதும் பெரிதும் வர்க்க நனவு கொண்ட தொழிலாளர், இளைஞர்களிடையே அரசியல் ஆளுமை நிர்மாணிக்கப்பட்டதும் அது சோசலிச சமத்துவக் கட்சியாக பரிணாமம் செய்வதற்காக உறுதியான அரசியல் அத்திவாரத்தினையிட்டதும் குட்டி முதலாளித்துவ சந்தர்ப்பவாதத்தின் சகல வடிவங்களுக்கும் எதிரான சமரசமற்ற போராட்டத்தினுள் மார்க்சிச அடிப்படைக் கொள்கைகள் இந்த விதத்தில் பேணிப் பாதுகாக்கப்பட்டதனாலாகும்.

கழகத்தை கட்சியாகப் பரிணாமம் செய்வதனுள் நீங்கள் சிருஷ்டிப்பது தொழிலாளர்களதும் இளைஞர்களதும் வளர்ச்சி கண்டு வரும் போராட்டத்தினுள் அந்தப் போராட்டத்தை வழிநடாத்தும் பெரிதும் சிறந்த வல்லமையை காரியாளர்களுக்கு பெற்றுத்தரும் நிலைமையாகும். இதன் மூலம் கட்சி இந்தப் போராட்டத்தை சோசலிசத் திசையின் ஊடாக அரசியல் ரீதியில் வழிநடாத்திச் செல்லும் தனது பணியின் ஊடாக- புரட்சிகர நெருக்கடி முதிர்ச்சி காணும் வேகத்தை தீர்மானிக்கும் தீர்க்கமான காரணியாக மாறுகின்றது.

உங்களின் மாநாட்டு முன்நோக்கு பத்திரத்தினை நிறைவேற்றுவதன் மூலம் நீங்கள் இலட்சோப லட்சம் சிங்கள, தமிழ் தொழிலாளர்கள், இளைஞர்களுக்கு ஆளும் வர்க்கம் சமூக தரித்திர நிலைமையையும் வேலையின்மையையும் வறுமையையும் திணிப்பதற்கு எதிரான போராட்டத்தினை வழிநடாத்தும் அரசியல் பொறுப்புக்கு தோள்கொடுக்க ட்ரொட்ஸ்கிஸ்டுகளின் தயார்நிலையை தெளிவுபடுத்தியுள்ளீர்கள். நீங்கள் இனவாத யுத்தத்துக்கு எதிராகவும் ஜனநாயக உரிமைகள் மீது தொடுக்கப்பட்ட கொடிய தாக்குதலுக்கு எதிராகவும் ஆட்சிக்கான போராட்த்தினுள் சிங்கள ,தமிழ் தொழிலாளர்களை ஐக்கியப்படுத்தும் சோசலிச வேலைத் திட்டத்தை முன்வைப்பீர்கள்.

பிரித்தானியாவின் முன்னேறிய தொழிலாளர்களும் இளைஞர்களும் இலங்கையின் அரசியல் அபிவிருத்திகளையும் பு.க.க. வேலைத் திட்டங்களையும் மிகவும் நெருக்கமாக ஆய்வு செய்வார்கள். ஐரோப்பாவில் பு.க.க.வெளிநாட்டு கிளைக்கு எதிராக விடுதலைப் புலிகளால் தொடுக்கப்பட்ட மிலேச்ச தாக்குதல்களுக்கும் இலங்கையினுள் பு.க.க.தோழர்களுக்கு எதிரான அரச தாக்குதல்களுக்கு எதிராகவும் அனைத்துலக கம்யூனிஸ்ட் கட்சி (ICP) யினால் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டங்கள், மறியல்களுக்கு பலம்வாய்ந்த ஆதரவு கிடைத்துள்ளது. குட்டி முதலாளித்துவ தேசியவாதிகளதும் முதலாளித்துவ அரசினதும் இந்தத் தாக்குதல்கள் தீவு பூராவும் பு.க.க.வினால் வெற்றி கொள்ளப்பட்டு வளர்ச்சி கண்டு வரும் அரசியல் ஆளுமையையிட்டு அவர்களின் பதட்ட நிலைக்கான எடுத்துக் காட்டாகும். இது பு,க.க. சோசலிச சமத்துவக் கட்சியாகப் பரிணாமம் செய்யப்பட்டதன் மூலம் இலங்கையினுள் பொதுஜன இயக்கத்தின் தலைமையாக மாறுவதற்கான உங்களது போராட்டத்தை முன்னெடுக்கும் சரியான, அவசரத் தன்மையை மீண்டும் ஒரு தடவை சுட்டிக் காட்டுகின்றது.

அனைத்துலக கம்யூனிஸ்ட் கட்சி தோழர்.இராஜ்குமாரை விடுதலை செய்யும்படி கோரும் பிரச்சாரத்தை விருத்தி செய்ய எண்ணியுள்ளதோடு, பிரித்தானிய தொழிலாளர்கள், இளைஞர்கள் இந்த சகல அத்தியாவசிய மூலோபாய பிரச்சினைகளை தெளிவுபடுத்துவதை தொடர்ந்து முன்னெடுப்பதையும் தங்களுக்கு உத்தரவாதம் செய்ய எம்மால் முடியும். இதைச் செய்கையில் மத்தியதர வர்க்க தீவிரவாத குழுக்களுக்கு எதிரான அரசியல் போராட்டத்தினை ஆழமாக்கும் அவசியம் தோன்றியுள்ளது. இலங்கையுடன் நீண்டகால உறவுகள் கொண்டுள்ள தொழிற் கட்சி மிலிடன்ட் குழு சம்பந்தமாக-சிறப்பாக இந்தப் பிரச்சினை தோன்றியுள்ளது.

அவர்களின் முன்னோக்கும் இலங்கையினுள் அவர்களின் கிளையான மார்க்சிச தொழிலாளர் போக்கின் முன்நோக்கும் அவர்களின் அனைத்துலக முன்நோக்குடன் ஒரே அணியில் நின்று கொண்டுள்ளது. ஏனைய சகல தீவிரவாத குழுக்களைப் போலவே தொழிற் கட்சி மிலிடன்ட் குழுவும் முதலாளித்துவ ஆட்சியின் ஆழமாகிவரும் நெருக்கடிக்கும் ஐரோப்பா பூராவும் அனைத்துலக ரீதியிலும் வளர்ச்சிகண்டு வரும் வர்க்கப் போராட்டங்களின் கிளர்ச்சிகளுக்கு பிரதிபலிப்பைக் காட்டிக்கொண்டுள்ளன. இத்தாலியின் மறுசீரமைக்கப்பட்ட கம்யூனிஸ்ட் அமைப்பு ஸ்பானியாவின் ஐக்கிய இடதுசாரிகள், பிரித்தானியாவில் ஆர்தர் ஸ்கார்கில்லின் சோசலிசத் தொழிற் கட்சியும், மிலிடன்ட் சோசலிச அமைப்பு போன்ற நாற்றம் கண்ட ஸ்டாலினிஸ்டுகளதும் சமூக ஜனநாயகவாதிகளதும் குப்பை கூழங்களுடன் அரசியல் ரீதியில் மீண்டும் அணிதிரள வெறிபிடித்து அலைவதன் மூலம் வெளிப்பட்டுள்ளது. இவை தொழிலாளர் வர்க்கத்தை சிறைப்பிடித்து வைக்கும் புதிய சீர்திருத்தவாத பாணியிலான தடைகளை மீண்டும் சிருஷ்டிக்கின்றதும் (தொழிலாளர் வர்க்கம்) சோசலிச பாதையில் பயணம் செய்வதையும் தவிர்க்கும் கையாலாகாத்தனமான முயற்சியாகும்.

இந்த வங்குரோத்து முன்நோக்கின் பிற்போக்கு சிபார்சுகள் தமது உக்கிரமான வெளிப்பாட்டை பெற்றுள்ளது இலங்கையினுள்ளாகும். இதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தொழிற் கட்சி மிலிடன்ட் குழு சந்திரிகா குமாரதுங்கவின் பொதுஜன முன்னணி அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணரும் பொருட்டு இடதுசாரி முகமூடியை வழங்கியதன் மூலம் அவளின் ஆலோசர்களாக ஆற்றிய பணியை நியாயப்படுத்திக் கொள்கின்றார்கள். யூ.என்.பி. "பிரதான எதிரி"யை பிரதிநிதித்துவம் செய்வதாக இவர்கள் குறிப்பிட்டனர். தொழில், வாழ்க்கைத் தரத்தின் மீது தொடுக்கும் மிலேச்சத் தாக்குதல் , தமிழ் மக்களுக்கு எதிரான இனவாத யுத்தத்தை அது உக்கிரமாக்கியமை, ஜனநாயக உரிமைகள் மீது காட்டுமிராண்டித் தாக்குதல் மூலம் பொதுஜன முன்னணி அரசாங்கம் இப்போது முழுமனே அவமானத்துக்கு உள்ளாகியுள்ளது. இச்சந்தர்ப்பத்தில் தொழிற் கட்சி மிலிடன்ட் குழுவும் மார்க்சிச தொழிலாளர் போக்கும் தமது துரோக "இடதுசாரி" மக்கள் முன்னணியை அமைக்கத் தம்முடன் ஒன்றிணையும்படி சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசம சமாஜ கட்சிகளுக்கு அழைப்பு விடுப்பதன் மூலம் செல்வாக்கிழந்து போன சமசமாஜ, கமயூனிஸ்ட், நவசமசமாஜக் கூட்டினுள் புதிய அரசியல் மூச்சுவிட முன்செல்கின்றனர். அவர்கள் முன்வைக்கும் வேலைத்திட்டம் சிங்கள, தமிழ் தொழிலாளர்களை பிளவுபடுத்தி அவர்கள் மிகவும் மோசமான ஒடுக்குமுறைக்கு முகம் கொடுக்கும் ஒரு நிலைமையைத் திட்டவட்டமாக உருவாக்கும். அது ஏனெனில் அவர்களின் வேலைத்திட்டம் வடக்கில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆளுமையை அங்கீகரிப்பதன் அடிப்படையிலும் தெற்கில் ஏதோ ஒரு விதத்தில் முதலாளித்துவக் கூட்டரசாங்கத்தை நடாத்திச் செல்வதையும் அடிப்படையாகக் கொண்டுள்ளதேயாகும்.

இன்று முதலாளித்துவ முன்நோக்கின் அடிப்படையிலோ அல்லது நாற்றம் கண்ட பழைய சமூக ஜனநாயக அல்லது ஸ்டாலினிச அதிகாரத்துவத் தலைமையின் கீழோ அரைக் காலனித்துவ, காலனித்துவ நாடுகளில் தொழிலாளர் வர்க்கத்தினாலும் கிராமப்புற ஏழைகளினாலும் வெற்றி கொள்ளப்பட்டுள்ள குறைந்த பட்ச உரிமைகளைக் கூட பாதுகாக்க முடியாது போயுள்ளது.

இந்தப் புதிய மக்கள் முன்னணி, சீர்திருத்தவாத மோசடி வாக்குறுதிகள் பலவற்றை உச்சாடனம் செய்யினும் அவற்றின் வேலைத்திட்டம் செல்வது எந்த விதத்திலும் தொழிலாளர் வர்க்கத்தின் திசையில் அன்றி, முக்கியமாக "தேசிய, பிராந்திய அவசியங்களை" பாதுகாக்கும் அடிப்படையிலான முதலாளி வர்க்கத்தினதும் குட்டி முதலாளி வர்க்கத்தினதும் குழுக்களுடன் கூட்டினை உருவாக்கும் திசையிலாகும்.அத்தகைய வேலைத் திட்டத்தினை பாதுகாக்க முடிவது எஞ்சியுள்ள சமூக வெற்றிகளையும் ஜனநாயக உரிமைகளையும் தொடர்ந்து நாசமாக்குவதன் ஊடாக தொழிலாளர் வர்க்கத்தினைத் திட்டவட்டமாக நசுக்கித் தள்ளுவதன் மூலமாகும். அவமானத்துக்கு உள்ளான அதிகாரத்துவங்களினால் தலைமை வழங்கப்படும் இந்த வங்குரோத்து அரசியல் குழுக்கள் இடதுசாரி பரிந்துரையாளர்களாகச் செயற்படுகையில் சகல மத்தியதர வர்க்க தீவிரவாதக் குழுக்களும் மார்க்சிசத்தின் சகல அடிப்படைக் கொள்கைகளுக்கும் தொழிலாளர் வர்க்க சிந்தனையின் சகல நிஜ வெளிப்பாடுகளுக்கும் தாக்குதல் நடாத்துவதன் மூலம் பழைய "ட்ரொட்ஸ்கிச" நடிப்புக்களதும் இறுதி துளியையும துடைத்துக் கட்டுவதாகும்.

மிலிடன்ட் தொழிற்கட்சி அமைப்பின் தேசிய செயலாளர் பீட்டர் டாபேயுடன் நான் சமீபத்தில் நடாத்திய கடிதத் தொடர்புகளில் நான் பிரான்சிலும் ஜேர்மனியிலும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழக அங்கத்தவர்களுக்கு எதிரான விடுதலைப் புலிகள் அமைப்பின் குண்டர்களின் தாக்குதல் சம்பந்தமாக. அவர்கள், கடைப்பிடிக்கும் மௌனத்தின் அர்த்தத்தை எடுத்துக் காட்டியிருந்தேன்.பு.க.க.வின் ஜனநாயக உரிமைகளை பகிரங்கமாக பாதுகாப்பதை அவர்கள் பகிஷ்கரித்தமையானது தொழிற் கட்சி மிலிடன்ட்டும் அவர்களின் அனைத்துலக உறவு அமைப்புக்களும் அவர்களும் வாழும் சகல நாடுகளிலும் பிற்போக்குச் சக்திகளுடனும் நிலைநாட்டிக் கொள்ள எடுக்கும் உறவுகளை வைத்துக் கொண்டிருப்பதற்காக மிகவும் அடிப்படையான தொழிலாளர் வர்க்க அடிப்படைக் கொள்கைகளைக் கூட காட்டிக்கொடுக்கத் தயாராகுவதன் அர்த்தமாகும்.

சகல மத்தியதர வர்க்க தீவிரவாத குழுக்களின் வலதுசாரி அரசியல் பயணம் 1985-86ல் தொழிலாளர் புரட்சிக் கட்சியின் ஓடுகாலிகள் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவினால்

(15ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# இனவாத யுத்தத்துக்கு 25 வருடங்கள்

விஜே டயஸ்

பாகம்-3

சிங்கள, தமிழ் மக்களைப் பிளவுபடுத்தி உடன்பிறப்பைக் கொல்லும் யுத்தத்தினுள் அவர்களைத் தள்ளும் பொருட்டு 1972 அரசியலமைப்பை சட்டமாக்கிய சிறீலங்கா-சமசமாஜ-ஸ்டாலினிச முதலாளித்துவ கூட்டரசாங்கத்தின் பங்காளிகளே இன்று மீண்டும் ஒரு அரசியலமைப்பைத் தோளில் சுமந்து கொண்டுள்ளனர். அதிகாரங்களைப் பரவலாக்கி, ஜனநாயகத்தை ஊர்ஜிதம் செய்யும் பொருட்டு "அரசியல் தீர்வு" என்ற பேரில் தூக்கிப் பிடிக்கப்படும் புதிய அரசியலமைப்பு வடிவத்தினுள் நுழைந்து கொண்டுள்ள சகல குட்டி முதலாளித்துவ தீவிரவாதிகளும் பல்வேறு கருத்தரங்குகளிலும் கலந்துரையாடல்களிலும் சதிர் ஆடுகின்றார்கள். சஞ்சிகைகளுக்கும் பத்திரிகைகளுக்கும் ஆட்வுக் கட்டுரைகளைத் தீட்டுகின்றார்கள். இவை எல்லாம் பொதுஜன முன்னணி அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராக இனவாத யுத்தத்தினை உக்கிரமாக்கி உள்ள ஒரு நிலைமையிலேயே இடம்பெறுகின்றன. யுத்தத்தின் பேரால் பொதுமக்களின் ஜனநாயக உரிமைகள் அடக்கி ஒடுக்கப்பட்டுள்ளன. புதிய அரசியலமைப்பு சட்டத்தை கொணரப் போவது எத்தகைய ஒடுக்குமுறை முதலாளித்துவ ஆட்சி என்பதைப் புரிந்து கொள்ள இந்த அரசியலமைப்புச் சட்டம் தயார் செய்யப்படும் அரசியல் பின்னணியே போதுமானது.

இனவாத யுத்தத்துக்கு அடிப்படையான 1972 அரசியலமைப்புச் சட்டம் தயார் செய்யப்பட்ட காலப்பகுதி இதற்குப் பெரிதும் சமமானதாகும்.

இன்றைய ஜனாதிபதியின் தாயார் இன்று போல் அல்லாது - அன்று பெரும் நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்ட பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்காவாக விளங்கினார்.1970 ஜூலை 19ம் திகதி அரசியல் அமைப்பு நிர்ணய சபை என்ற பேரில் நவரங்ககலவில் கூடிய முதலாளித்துவ பாராளுமன்ற நடிகர், நடிகைகள் முன்னிலையில் பேசிய சிறிமாவோ பண்டாரநாயக்காவின் அறிக்கை ஜனநாயகத்துக்கு இருபுறத்திலும் குழிதோண்டுவதாக விளங்கியது. அவர் கூறியதாவது:

"நான் அரசியலமைப்புச் சட்டத்தை முன்கூட்டியே எதிர்பார்த்துக் கொண்டிருக்க வில்லை. எமது புதிய அரசியலமைப்பு எமது தேசத்தின் ஓரினத்தன்மையை பலப்படுத்த உதவுவதாக இருக்க வேண்டும் என்பதை மட்டும் நான் கூறியாக வேண்டும். எம்மிடையே சிங்கள, தமிழ், முஸ்லீம், பறங்கியர் மற்றும் நானாவித இனக்குழுக்களும் பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாம் போன்ற பல மதக் குழுக்களும் இருந்த போதிலும் நாம் ஒரு தேசிய இனமாகச் செயற்பட வேண்டும்."

நிலமானித்துவ பிரபு வம்சத்தைச் சேர்ந்த ஒரு அம்மணி தமது பண்ணை அடிமையின் திருமண வைபவத்துக்குச் சென்று சாய்மனைக் கதிரையில் நீட்டி நிமிர உட்கார்ந்து கொண்டு, தாமும் தமது அடிமைகளும் ஒரே குடும்பத்தின் பங்காளிகள் எனக் கூறினால் அதில் பொதிந்து இருக்கும் வஞ்சனைக்கு மேலானவை எதுவும் இந்த அறிக்கையில் பொதிந்து இருக்கவில்லை என்பதை இந்த அரசியலமைப்பு நிர்ணய சபையின் நடவடிக்கைகள் நீண்ட காலம் செல்வதற்கு முன்னரே காட்டிக்கொண்டு விட்டது. ஏகாதிபத்தியச் சார்பு முதலாளித்துவ ஆட்சியின் தலைவியான சிறிமாவோ பண்டாரநாயக்கவின் "ஜனநாயக மதிப்பு" தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களின் அடிப்படையில் அல்லாது முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் அவசியங்களினால் வழிநடாத்தப்படுவதே அதற்கான காரணமாகும்.

இன்றைய "அரசியல் தீர்வை" முன்வைக்கும் போது ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் கடந்தகால தீவிரவாதங்களை தூக்கிப் பிடிப்பதன் மூலம் அரசியல் பின்னணி இருட்டடிப்புச் செய்யப்படுவதோடு அவள் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகள் பற்றிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் அவசியத்தினால் பீடிக்கப்பட்டுள்ளதாகவும் காட்டப்பட்டுவருகின்றது. சில தமிழர்கள் சம்பந்தமாக கடந்த காலத்தில் அவர் கொண்டிருந்த தனிப்பட்ட விருப்பும் ஆதரவும் இதற்கு சாட்சியாகக் காட்டப்பட்டது. இந்தக் கதையளப்பில் ஈடுபட்டுள்ள மந்திரவாதிகள் முதலாளித்து வத்தின் நாற்றெமடுப்புச் சகாப்தத்தில் முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தினால் ஜனநாயக உரிமைகளைக் காக்க முடியாது என்ற பொது உண்மையை குழிதோண்டிப் புதைக்கிறார்கள். ஜயவர்தனாவின் தந்திரங் களினாலோ அல்லது பிரேமதாசவின் களவுகள் அல்லது காடைத்தனங்களுக்கு கைநீட்டியவாறு அவர்களின் ஆட்சிக் காலங்களில் இடம்பெற்ற மக்கட் படுகொலைகளாலும் இனவாத யுத்தம் உட்பட்ட நாசகார நடவடிக்கைகளை சிருஷ்டித்த நிஜ காரணிகளை விளங்கிக் கொள்ள முடியாது. அது மட்டுமன்றி முதலாளித்துவ அரசியல்வாதிகள் அன்று தொடக்கம் இன்று வரை ஏதேனும் ஒரு இடத்தில் வெளியிட்டுள்ள வாயளவிலான தீவிரவாத அறிக்கைகளைக் கொண்டும் அவர்களின் பணியை புரிந்து கொள்ள முடியாது. முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் பிற்போக்கு நடவடிக்கைகள் ஊற்றெடுப்பது சமூக உற்பத்தி செயற்பாட்டினுள் அவர்கள் வகிக்கும் பிற்போக்கு நிலைப்பாடுகளில் இருந்தாகும். இனவேறுபாடுகள் தணிந்து போய் விடுவதில்லை. முதலாளி வர்க்கப் பகுதியினர் அவற்றை உலகம் பூராவும் உக்கிரம் அடைபவையாக மாற்றி உள்ளனர். இலாபப் பொதியை காத்துக் கொள்ள அவர்கள் எடுக்கும் கையாலாகாத்தனமான முயற்சிகள் அதற்குக் குறுக்கே நிற்கும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை இரத்த தடாகத்தில் மூழ்கடித்து நாசமாக்கிவிட துடிப்பதே காரணம்.

லங்கா சமசமாஜக் கட்சி தொழிலாளர் வர்க்கத்தின் சுயாதீனமான அரசியல் வேலைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு இருக்கும் வரை தமிழ் மக்கள் உட்பட்ட தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்கட் பகுதியினரின் ஜனநாயக உரிமைகளைக் காக்க வாயளவில் மட்டுமன்றி செயலளவிலும் போராடிய வரலாற்றை தனதாக்கிக் கொண்டுள்ளது. அத்தகைய ஒரு கட்சியின் முன்னணித் தலைவர்களில் ஒருவரான கொல்வின் ஆர் டி த சில்வா 1972 சிங்கள, பௌத்த சோவினிச மயமானதும் பொதுமக்களை ஒடுக்கு முறைக்கு இலக்காக்கிக் கொண்டதுமான அரசியல் அமைப்புச் சட்டத்தின் வரைஞர் ஆகியதை அவரின் தனிப்பட்ட நெறிகேடாக மட்டும் விளக்க முடியுமா? இல்லை. அது தொழிலாளர் வர்க்கத்தின் சுயாதீன அரசியல் வேலைத் திட்டத்தினைக் கைவிட்டுவிட்டு சமசமாஜக் கட்சி தீர்க்கமான முறையில் முதலாளித்துவ முகாமுக்குள் மாறிக்கொண்ட கூட்டரசாங்க அரசியலின் ஒரு பெறுபேறாகும்.

முதலாளித்துவ சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியான சிரிமாவோ பண்டாரநாயக்க ஒரு தேசிய இனமாக தொழிற்படுவதற்கு சிங்கள, தமிழ் , முஸ்லீம், பறங்கியர் முதலான பிரிவினருக்கு வழங்கிய மோசடி மிக்க வாக்குறுதியை வீசி எறிந்தாரெனினும் ஜனநாயக உரிமைகளை காக்கும் போராட்ட வரலாறு படைத்த சமசமாஜக் கட்சித் தலைவர் வழங்கிய வாக்குறுதி சம்பந்தமாக பொதுமக்கள் எதிர்பார்ப்புக்களைக் கொண்டிருந்தனர்.1970 கூட்டரசாங்கம் அமைக்கப்பட்டதன் பின்னர் முதலாவது சிம்மாசனப் பிரசங்க உரைக்கு நன்றி தெரிவிக்கும் பிரேரணை மீதான விவாதத்தில் பேசிய கொல்வின் ஆர்.டி.த.சில்வா பின்வருமாறு குறிப்பிட்டார்:

"இலங்கையர்களை உண்மையில் சுதந்திர, சுயாதீனமான, இறைமை கொண்ட மக்களாக மாற்றும் புதிய அரசியலமைப்புச் சட்டத்தை வரைவதற்கு நாம் செயற்பட்டு வருகின்றோம்." என்றார். நாற்றம் எடுத்த முதலாளித்துவ அமைப்பின் பாதுகாப்புக்கு அர்ப்பணம் செய்து கொண்டுள்ள ஒரு முதலாளித்துவ ஆட்சியினால் இதை நிறைவேற்ற முடியுமா? என்ற பிரச்சினையை அணுகாத சகல திரிபுவாதிகளும் இன்று போலவே அன்றும் அந்த வாக்குறுதியை தலைமேல் வைத்துக் கொண்டாடியதன் மூலம் பொதுமக்களை ஏமாற்றும் விதத்தில் செயற்பட்டனர்.

1972 ஜூலை மாதத்தில் "அரசியலமைப்பு நிர்ணய சபை" என்ற போலி பெயரில் பாராளுமன்றம் நவரங்ககலவில் கூடிய போது யூ.என்.பி.யும் அவ்வாறே சகல தமிழ் முதலாளித்துவக் கட்சிகளும் அதை அங்கீகரித்தன. அதில் பங்குகொண்டன. இன்று போலவே அன்றும் இந்த அங்கீகாரத்தின் மீது பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவம் செய்த சகல கட்சிகளதும் பிரதிநிதிகளதும் பேராளர்களைக் கொண்ட புதிய அரசியல் அமைப்புத் தொடர்பான செயற்குழு பணியை ஆரம்பித்தது.

## அவசரகாலச் சட்ட ஆட்சி

முதலாளித்துவப் பாராளுமன்றத்தின் பிரதிநிதிகள் விழுந்தடித்துக்கொண்டு பொதுமக்களின் கள்ளக் கையொப்பங்களில் நிறைவேற்றிய அரசியலமைப்பு நிர்ணய சபை தனது பணியை நடாத்தியது. இன்று போல் அன்றும் அவசரகாலச் சட்டம் அமுலில் இருந்துவந்த ஒரு நிலையிலே யேயாகும். 1971ல் இருந்து மாதாந்தம் அவசரகாலச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. பிரசுர சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் பொருட்டு லேக்ஹவுஸ் நிறுவனம் அரசினால் சுவீகரிக்கப்பட்டது. அத்தோடு சகல அச்சடிக்கப்பட்ட பிரசுரங்களும் உத்தரவுபெற்ற செய்தி அதிகாரியின் கீழ்க் கொணரப்பட்டது.

புதிதாக வரைந்து கொள்ளப்பட்டுவந்த புதிய அரசியலமைப்புச் சட்டம் ஜனநாயகத்தைக் கட்டிக்காக்கும் இலட்சணம், தொழிலாளர் வர்க்கத்தின் சுயாதீன அரசியல் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் நின்று, கூட்டரசாங்கத்துக்கு எதிராக தமிழ், சிங்கள தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை அணிதிரட்டப் போராடிய புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் (சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடி) தொழிலாளர் செய்தி, கம்கரு புவத், இளைஞர் செய்தி ஆகிய பத்திரிகைகள் 1971ல் இருந்து "சீல்" வைக்கப்பட்டதன் மூலம் எல்லாவற்றுக்கும் மேலாக அம்பலமாகியது.

அன்று நவசமசமாஜக் கட்சியின் இன்றைய தலைமையானது சமசமாஜக் கட்சியின் உள் பதுங்கிக் கொண்டு, 1971 ல் ஆரம்பமான இளைஞர் படுகொலைகளுக்கும் ஒடுக்குமுறைக்கும் முழுமனதாக ஆதரவு வழங்கியதோடு , 1972 அரசியலமைப்பு சட்டத்தின் பின்னணியில் இருந்துவந்த அவசரகாலச் சட்ட ஆட்சியின் பங்காளிகளாகவும் விளங்கியது. முதலாளித்துவ ஆளும் வர்க்கம் தொடர்பான தமது நல்மனதுடன் கூடிய சேவையில் எதுவிதமான குறைச்சலும் இல்லாது இட்டுநிரப்பும் பொருட்டு, ஏப்பிரல் கிளர்ச்சியின் எதிரில் இடைஞ்சல்களுக்கு உள்ளான முதலாளித்துவ அரசின் ஆயுதப் படைகளுடன் கைகோர்த்துக் கொண்டு அலுகோசு வேலையில் இறங்கும் பொருட்டு சமசமாஜக் கட்சித் தலைமையின் கீழ் ஒரு அன்னப் படையை(ஹங்ச றெஜிமேன்துவ) அமைக்கவும் கூட அவர்கள் நடவடிக்கை எடுத்தனர்.தமிழர் எதிர்ப்பு இனவாத யுத்தம் உச்சக்கட்டத்தை அடைந்த நிலைமையில் தமிழ் ஆயுதக் குழுக்களின் தாக்குதல்களுக்கு உள்ளான முதலாளித்துவ அரச படைகளின் முதுகெலும்பை நிமிர்த்தும் பொருட்டு ஒடுக்கப்படும் இளைஞர்களை ஈடுபடுத்தி சங்கிலிப் படைகள் அமைக்கும்படி யூ.என்.பி. அரசாங்கத்துக்கு ஆலோசனைகள் வழங்கியதன் மூலம் நவசமசமாஜக் கட்சி பிற்காலத்தில் இந்த அலுகோசு வேலைத்திட்டத்தை மேலும் முன்னெடுத்தது.


சமசமாஜ-ஸ்டாலினிச தலைவர்கள் "மக்களின் சுதந்திரம், சுயாதிபத்தியம், இறைமை" யை ஊர்ஜிதம் செய்ய வாக்குறுதி அளித்து, பொது மக்களின் மீது திணித்த 1972 பிற்போக்கு அரசியலமைப்புச் சட்டத்துக்கு முன்னுரையாக மற்றுமோர் நச்சுத்தனமான மசோதா நிறைவேற்றப்பட்டது. அது 1972 ஏப்பிரல் மாதத்தில்-அதாவது, புதிய அரசியலமைப்பு நிறைவேற்றப்படுவதற்கு இன்னமும் ஒன்றரை மாதங்கள் இருக்கையில் - நிறைவேற்றப்பட்ட குற்றவியல் ஆணைக்குழு மசோதாவாகும். முதலாளித்துவ நிறைவேற்று அதிகாரத்தின் நச்சுத்தனமான தடியடிகளால் நசுங்கி வந்தவர்கள் முதலாளித்துவ நீதிமன்றத்தின் எதிரில் முறைப்பாடு செய்து, நிவாரணம் கேட்க இருந்து வந்த கந்தையான உரிமையும் இந்த மசோதாவின் மூலம் பறிக்கப்பட்டது. தமது அரசியல் எதிரிகளை சுதந்திரமாக இழுத்துச் செல்லவும், கைகால்களைக் கட்டிப்போட்டு சித்திரவதைகளுக்கு உள்ளாக்கவும் அரச படைகளுக்கும் அதிகாரிகளுக்கும் இதன் மூலம் எல்லையற்ற சுதந்திரம் வழங்கப்பட்டது.

## ஸ்டாலினிசத்தின் தொழிற்பாடு

1965-70 யூ.என்.பி.ஆட்சிக் காலப்பகுதியில் பிரமாண்டமான வாழ்க்கைச் சுமைகளால் நசுங்குண்டு வந்த மக்களிடையே பதட்ட நிலை அதிகரித்து வருகையில் தொழிலாளர்களை வாய்ஜம்பங்களின் மூலம் வெறியூட்டி, ஸ்தம்பிக்க வைக்கவும் இளைஞர்களுக்கு கயிறு கொடுத்து முதலாளித்துவ பொறியில் மாட்டிவைக்கவும் "கிளருங்கள் கிளருங்கள் கிளர்ந்து எழுங்கள்! நாட்டின் சகல புறத்திலும் கிளர்ந்து எழுங்கள்!" என்ற மோசடி சுலோகங்களைக் கோஷித்துவந்த ஸ்டாலினிஸ்டுகள் 1972 அளவில் கூட்டரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும்

படிப்பகம்

www.padippakam.com



*1983 ஜுலை இனக்கலவரத்தின் போது பொரளையில் இனவாத குண்டர்களால் தாக்கப்படும் தமிழ் இளைஞன்*

புதிய இராக்த்தை இசைக்கத் தொடங்கினர். அதாவது "1970 மக்கள் வெற்றியை காப்பதற்கும் அதை முனனெடுப்பதற்கும் அரசாங்கத்தை பலப்படுத்தும் இயக்கத்தை கட்டியெழுப்ப வேண்டும்" என்ற வேட்டைத் தீர்த்தனர்.

இந்த மோசடிக்கு வேசம் போடப் பொருத்தமான விதத்தில் ஸ்டாலினிஸ்டுகள் குற்றவியல் ஆணைக்குழு மசோதாவினை "ஐக்கிய முன்னணி அரசாங்கத்தின் முற்போக்கு வேலைக்கு. இடையூறாக விளங்கும் அரசாங்கத்தின் உள்ளேயான ஒரு சதிகாரர்களின் வேலை"யாக வருணித்தனர். அந்த சதி எனப்படுவதற்கு சிரிமாவோ பண்டாரநாயக்கா தொடக்கம் என்.எம்.பெரேரா, கெனமன் வரையிலான தமது மீட்சிக்கான தலைவர்கள் சகலரும் சம்பந்தப்பட்டிருந்தனர் எனக் கூறுவதற்கு கவனமாக இருந்து கொண்ட ஸ்டாலினிஸ்டுகள் 1972 ஏப்பிரல் 10ம் திகதி "அத்த" பத்திரிகையில் வெளியான தமது முக்கிய தொழிற்சங்கத் தலைவர் ஒருவரின் உரையில் பின்வருமாறு குறிப்பிட்டனர்:

"பொதுமக்களையும் தொழிலாளர் வர்க்கத்தையும் அரசாங்கத்தில் இருந்து அன்னியப்படுத்துவதற்காக அரசாங்கத்தின் உள்ளேயும் வெளியேயும் இருந்து கொண்டுள்ள பிற்போக்காளர்கள் தமது இயக்கத்தை நடாத்திக் கொண்டுள்ளதாகக் குறிப்பிட்ட ஜக் பெரேரா சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட குற்றவியல் ஆணைக்குழு மசோதாவை அதற்கு ஒரு உதாரணமாகக் காட்டினார்."

ராவய, யுக்திய, தியச, பிரவாத போன்ற சஞ்சிகைகள் மூலமும் . ஜே.வீ.பி.யின் பல்வேறு வெளியீடுகள் ஊடாகவும் சந்திரிகா குமாரதுங்காவை சிம்மாசனம் ஏற்றுவதற்கு வியர்வை சிந்தி இன்று களைத்துப் போயுள்ள தீவிரவாத போர்வை போர்த்த முதலாளித்துவ கைக்கூலிகளும் இப்போது முறைப்பட்டுக்கொள்ளத் தொடங்கியுள்ளதைப் போலவே அந்தச் சகலரின் சார்பிலும் ஸ்டாலினிஸ்டுகள் குள்ளத்தனமான முறையில் கூச்சல் போடத் தொடங்கினார்கள். முதலாளித்துவ கூட்டரசாங்க அரசியலுக்கு . எதிராகத் தொழிலாளர் வர்க்கம் சுயாதீனமான வழியில் இறங்கி, முதலாளித்துவ எதிர்பபு கொள்கையின் அடிப்படையில் ஒடுக்கப்படும் மக்களையும் அணிதிரட்டுவதைத் தவிர்க்கும் கடைகெட்ட மோசடிக்கு குறைந்த எதுவும் இன்று போலவே அன்றும் அந்த முறைப்பாட்டுக்குள் உள்ளடங்கியது கிடையாது. உருவாகியுள்ள "துர்அதிர்ஷ்ட வசமான நிலையைஆழமாக ஆய்வு செய்யும் பொருட்டு" அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர் கருத்தரங்கை கூட்டிய ஸ்டாலினிஸ்டுகள் அன்று நிலவிய சூழ்நிலையைக் கருத்தரங்கு நடைபெற்ற நாளான 1972 ஏப்பிரல் 9ம் திகதி வெளியான அத்த பத்திரிகையில் "பொது அரசியல் போராட்டத்தை தேர்ந்தெடுப்போம்" என்ற தலையங்கத்தின் கீழ் பின்வருமாறு குறிப்பிட்டது.:

"ஐக்கிய முன்னணி பதாகையின் கீழ் உறுதியான போராட்டத்தில் ஈடுபட்ட பொது முற்போக்கு மக்களைப் போலவே தொழிலாளர் வர்க்கத்தினது எதிர்பார்ப்புக்கள் எதிர்பாராத விதத்தில் தகர்ந்து கொட்டி வருகின்றன. ஏகாதிபத்தியச் சார்பு ஏழு கட்சிக் கூட்டை தோற்கடிக்க மனப்பூர்வமாக தொழிற்பட்ட மக்கட் பகுதியினர் இடையே விரக்தியும் வெறுப்பும் கொண்ட ஒரு தன்மை படிப்படியாக வளர்ச்சி கண்டு வருகின்றது." (1972 ஏப்பிரல் 9 -அத்த பத்திரிகை)தொழிலாளர் ஒடுக்கப்படும் மக்களை முதலாளித்துவ ஆட்சியுடன் கட்டிப்போடும் புதிய சூழ்ச்சிகளின் துணையை நாட ஸ்டாலினிஸ்டுகள் தள்ளப்பட்டனர். இதற்குக் காரணம் பொது மக்களிடையே வளர்ச்சி கண்டுவந்த இந்த விரக்தியேயாகும். இந்த சூழ்ச்சிகள் மூலம் சிருஷ்டிக்கப்பட்ட நச்சு. வாயுக்களின் பின்னணியில் இனவாத யுத்த அத்திவாரமான 1972 அரசியலமைப்பு நிர்ணயம் சகலரதும் ஒத்துழைப்புடன் முன்நோக்கிச் சென்றது.

இனவாத யுத்தத்தை உக்கிரமாக்கி பொதுஜன ஒடுக்குமுறையை தீவிரப்படுத்தும் அதே வேளையில் ஒரு அரசியல் தீர்வுக் கண்கட்டி வித்தையை முன்வைத்து. அதன் பின்னணியில் மக்களை இடுப்புவரை ஆணி அறையும் இன்றைய வேலைத்திட்டம் 1972 அரசியலமைப்புச் சட்ட நிர்ணயத்துடனும் கைகோர்த்துக் கொண்டுள்ளது. மீண்டும் அத்த பத்திரிகையில இருந்து மேற்கோள் காட்டுவதன் மூலம் ஸ்டாலினிஸ்டுகள் அன்று அந்த நிலைமையை குறிப்பிட்ட விதத்தினைக் காட்டுவது பொருத்தமானது:

"இன்று இந்நாட்டின் விலைவாசி வேகமாக உயர்ந்து வருவதோடு இதனால் அரச, கூட்டுத்தாபன துறை ஊழியர்களும் நாட்டின் பொதுமக்களும் பெரும் கஷ்டங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது. எனினும் அரச, கூட்டுத்தாபன ஊழியர்களின் சம்பளம் ஒரு சதத்தினாலும் அதிகரிக்கவில்லை."(1972 ஏப்பிரல் 10 அத்த)

இலவு காத்த கிளிகளைப் போல அன்று சமசமாஜ-ஸ்டாலினிச தலைவர்கள் முதலாளித்துவ கூட்டரசாங்கம் ஜனநாயகத்தை பகிர்ந்து தரும் என்ற நம்பிக்கையைக் கொண்டிருந்தனர். அதற்குள் தலைகீழாக விழுந்த தீவிரவாதிகள் இன்று போலவே அன்றும் பொதுமக்களை அரசியல் ரீதியில் நிராயுதபாணிகளாக்கி, முதலாளித்துவ தாக்குதல்களுக்கு பலிகடாக்களாக்க செயற்பட்டனர்.

இந்த அரசியல் மூலோபாயங்களின் படிப்பினையை இன்றைய தலைமுறையினருக்கு வழங்குவதற்கு இலாயக்கான அமைப்பாக சோசலிச சமத்துவக் கட்சி மட்டுமே உள்ளது. அன்று சிறீலங்கா-சமசமாஜ-கம்யூனிஸ்ட் கூட்டரசாங்கத்தின் சகல மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கும் எதிராக போராடிய புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகத்தின் அரசியல் கொள்கையின் வாரிசாக அது விளங்குவதே அதற்குக் காரணம்.

## தரப்படுத்தல்

இனவாத யுத்தத்தின் பேரழிவுகளை தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடும் பொருட்டு தொடுக்கப்பட்ட ஆத்திர மூட்டல்கள் நிறைந்த 1972 சிங்கள-பௌத்த அரசியலமைப்புக்கு முன்னோடியாக தமிழ் குட்டி முதலாளித்துவ தட்டினரையும் இளைஞர்களையும் ஆயுதப் போராட்டப் பாதையில் தள்ளிவிடும் மற்றொரு மாற்றமும் கூட்டரசாங்கத்தினால் செய்யப்பட்டது. அது 1971 பல்கலைக் கழக புகுமுக தகுதி தொடர்பாக மாணவர்கள் மீது திணித்த தரப்படுத்தலாகும்.

தரப்படுத்தலின் கீழ் ஒரே வினாப் பத்திரத்துக்கு விடையிறுக்கும் மாணவர்கள் பல்கலைக்கழகம் நுழைவதற்கான வாய்ப்பு தமிழ். சிங்கள தேசிய இனங்கள் இரண்டினையும் சேர்ந்தவர்களுக்கு இரண்டு விதத்தில் வழங்கப்பட்டது. உதாரணமாக மருத்துவக் கல்லூரிக்கு நுழைவதற்கு தமிழ் தேசிய இனத்தின் மாணவர் ஒருவர் 1971ல் 400 மொத்தப் புள்ளிகளில் குறைந்த பட்சம் 250 புள்ளிகளைப் பெற்றிருக்க வேண்டி இருந்த அதே வேளையில் சிங்கள மாணவர் ஒருவர் 229 புள்ளிகளைப் பெற்று அதை அடைய முடிந்தது. சிங்கள, தமிழ் மாணவர்கள் ஒரே ஆங்கில மொழியில் பதிலிறுத்த போதிலும் கூட தமிழ் மாணவர்கள் இந்த இனரீதியான பாகுபாடுகளுக்கு உள்ளானார்கள்.கண்களின் எதிரில் பளிச்சிட்ட இத்தகைய பாகுபாடுகள் இடம்பெற்று இருந்த நிலையிலும் கூட இன்றுவரை நளின் டி சில்வா, குணதாச அமரசேகர போன்ற முன்னணி இனவாத களிசடைகள் தமிழ் மக்களுக்கு இடம்பெற்றுள்ள விசேட அநீதிகள் என்ன என வெட்கமற்ற முறையில் கேள்வி எழுப்புகின்றார்கள்.

படித்த இளைஞர்களின் உயர் கல்வி உரிமைக்குத் தொடுக்கப்பட்ட இந்தத் தாக்குதலுக்கு மெருகூட்டும் பொருட்டு தமிழ் விடைத்தாள் திருத்துவோர் தமிழ் மாணவர்களுக்கு விசேட சலுகைகள் காட்டி அதிக புள்ளிகள் வழங்கினர் எனக் கூச்சலிடப்பட்டது. பல்கலைக்கழக தமிழ் விரிவுரையாளர்கள் இந்தக் கரிபூசல்களுக்கு ஒரே குரலில் எதிர்ப்பைத் தெரிவித்ததோடு ஒரு விசாரணையை நடாத்தும் படியும் கோரினர். அதைத் தொடர்ந்து நியமிக்கப்பட்ட தமிழ், சிங்கள பல்கலைக்கழக விரிவுரையாளர்களைக் கொண்ட கமிட்டி. அத்தகைய மேலதிக புள்ளிகளை வழங்குவதற்கான வாய்ப்புக்கள் புள்ளி வழங்கும் திட்டத்தின் கீழ் கிடையாது எனவும் ஆதலால் குற்றச்சாட்டு பொய்யானது எனவும் குறிப்பிட்டது.எனினும் இனவாதப் பாகுபாடுகள் காட்டும் தரப்படுத்தல் நின்றுவிடவில்லை.

1971க்குப் பின்னர்- சிறப்பாக விஞ்ஞான பாடங்கள் தொடர்பான பல்கலைக் கழக கல்வி துறைகளில் தமிழ் மாணவர் எண்ணிக்கை சிங்கள மாணவர்களுடன் ஒப்பிடுமிடத்து வேகமாக வீழ்ச்சி கண்டு சென்றது. 1972ல் சிங்கள மாணவர்கள் நூற்றுக்கு 63 வீதமாக இருக்க தமிழ் மாணவர்கள் எண்ணிக்கை நூற்றுக்கு 33.6வீதமாகியது. அது 1973ல் சிங்கள மாணவர் எண்ணிக்கை நூற்றுக்கு 67.4 வீதமாகவும் தமிழ் மாணவர் எண்ணிக்கை 29.5வீதமும் ஆக மாறியது.1974ல் சிங்கள மாணவர் நூற்றுக்கு 75.4 வீதமாக தமிழ் மாணவர் எண்ணிக்கை நூற்றுக்கு 20.9வீதமாகிற்று. 1975ல் சிங்கள மாணவர் எண்ணிக்கை 78வீதம் வரை உயர்ந்த அதே வேளையில் தமிழ் மாணவர் எண்ணிக்கை நூற்றுக்கு 19 வீதத்துடன் நின்றுகொண்டது. இனவாதிகளின் பிரச்சாரத்தின் பெறுபேறாக சிங்கள முதலாளித்துவ, மத்தியதர வர்க்க இளைஞர்கள் அதிக அளவிலானோர்க்கு உயர்கல்வி வாய்ப்புக்கள் கிடைத்த போதிலும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் ஏழை மக்கள் குடும்பங்களைச் சேர்ந்த இளைஞர்களுக்கு அதனால் கிடைத்த வாய்ப்புக்கள் எதுவும் கிடையாது. முதலாளித்துவ சிறீலங்கா-சமசமாஜ-கம்யூனிஸ்ட் கூட்டரசாங்கத்தினால் உருவான தரப்படுத்தலின் தாக்கம் காரணமாக வளர்ச்சி கண்ட தமிழ் ஒடுக்கப்படும் மக்களின் பதட்ட நிலையை இரத்த வெள்ளத்தில் மூழ்கடிக்கும் பொருட்டு தூப்பாக்கிகாரர்களாக இராணுவத்தில் சேர்க்கப்பட்டு வருவோரும் இந்தப் பெரும்பான்மை ஏழை இளைஞர்களே.

1972 அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் தமது மொழிக்கும் கலாச்சார நடவடிக்கைகளுக்கும் இதுவரை காலமும் இழைக்கப்பட்டுவந்த பாகுபாடுகள் நின்றுவிடும் என முதலாளித்துவ தமிழரசுக் கட்சியும் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் எதிர்பார்த்த போதிலும் அது நிறைவேறவில்லை. தமிழ் முதலாளித்துவத் தலைவர்கள் முதுகை வளைத்துக் கொண்டு, முதலாளித்துவ பாராளுமன்ற அமைப்பினுள் ஏதேனும் ஒரு மாயையைத் திணித்து, தமிழ் ஒடுக்கப்படும் மக்களை தூங்கச் செய்ய முயற்சித்தனர். சிங்களத்தையும் தமிழையும் அரச மொழிகளாக அங்கீகரிக்க வேண்டும் என்ற கோரிக்கையைக் கூட கைவிட்டுவிட்டு. சிங்களத்தையும் தமிழையும் வடக்கு-கிழக்கு நிர்வாக மொழிகளாக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைக்கும் அளவுக்கு கூட அரசியலமைப்பு நிர்ணய சபையினுள் அவர்கள் குழிபறிந்து போயினர். எனினும் அந்த சமரசத்தையும் கூட முதலாளித்துவ கூட்டரசாங்கம் நிராகரித்தது. முதலாளித்துவ பாராளுமன்ற விளையாட்டு தொடர்பாகவும் தமது தேசிய ஜனநாயக உரிமைகள் நசுக்கப்படுவதற்கு எதிராகவும் தமிழ் மக்களுக்கிடையே வளர்ச்சி கண்டு வந்த எதிர்ப்பின் காரணமாக அரசியலமைப்பு நிர்ணய நடவடிக்கைகள் ஆரம்பமாகி ஒரு ஆண்டின் பின்னர்-1971 ஜூனில் அதில் இருந்து விலகிக் கொள்ள தமிழரசுக் கட்சி முடிவு செய்தது.

முதலாளித்துவ ஆட்சியைக் காப்பதற்கும் தமிழ் மக்களின் அபிலாசைகளை பிரதிநிதித்துவம் செய்வதாக நடிப்பதற்கும் இடையேயான முரண்பாடுகளுக்குள் தமிழரசுக் கட்சி அகப்பட்டுப் போய்க் கிடந்தது. தமிழரசுக் கடசித் தலைவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அரசியலமைப்பு நிர்ணய சபையை பகிஷ்கரித்து நிகழ்த்திய உரை இதை நன்கு தெளிவுபடுத்தியது. :

"விவாதத்துக்கு உள்ளாகி உள்ள பிரச்சினை தொடர்பாக உடன்பாட்டுடன் கூடிய ஒரு தீர்வுக்காக நாம் சமரசத்துக்கு பெரு விருப்புக் கொண்டுள்ளோம். அரசியலமைப்பில் சேர்க்கப்பட எமக்கு அவசியமாக உள்ள குறைந்த பட்ச உரிமைகள் பற்றி, பிரதமருக்கும் அரசியல் அமைப்பு விவகார அமைச்சருக்கும் நாம் தெரிவித்தோம். பிரதமருடனும் அரசியல் அமைப்பு விவகார அமைச்சருடனும் நாம் நடாத்திய பேச்சுவார்த்தைகள் மிகவும் சினேகபூர்வமாகவும் எமது கருத்துக்கள் ஆழமான கவனத்துக்கு உள்ளாகும் எனவும் தோன்றிய போதிலும் அடிப்படைப் பிரேரணைகளில் எந்தவிதமான திருத்தத்தையும் செய்ய அவர்கள் தயாராகவில்லை."

## ஆட்சியின் மூலோபாய மாற்றம்

உருவாகி உள்ள பொருளாதார, அரசியல் வேறுபாடுகள் மூலம் முதலாளித்துவ ஆட்சி ஒரு மூலோபாய மாற்றத்தை வேண்டி நின்றது. இது தமிழ் முதலாளித்துவ தலைவர்களின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டதற்கான காரணமாகியது. இரண்டாம் உலக யுத்தத்தின் பின்னைய உலகப் பொருளாதார அமைப்பின் காவலாளி போல் விளங்கிய தங்கத்துக்கும் டாலருக்கும் இடையேயான உத்தியோகபூர்வமான உறவு 1971 ஆகஸ்ட் 15ம் திகதி நீக்கப்பட்டது. இது முதலாளித்துவ அமைப்பின் உலகளாவிய ரீதியிலான நெருக்கடியின் ஆழத்தை எடுத்துக் காட்டியது. இலங்கையைப் பொறுத்தமட்டில் இதன் தாக்கம் நேரடியானதாயும் திட்டவட்டமானதாயும் விளங்கிற்று. முன்னைய யூ.என்.பி. ஆட்சியின் கீழ் இடம்பெற்ற உதவிமானிய வெட்டுக்களுக்கு எதிராக "சந்திரனில் இருந்தென்றாலும் அரிசி கொணர்ந்து தருவோம்" எனப் பொய் வாக்குறுதி வழங்கி ஆட்சிக்கு வந்த கூட்டரசாங்கம் 1971 நவம்பரில் சமர்ப்பித்த இரண்டாவது வரவுசெலவுத் திட்டத்தில் உணவு மானியத்தையும் நலன்புரி சேவைகளையும் வெட்டத் தொடங்கியது. உலகச் சந்தையில் எண்ணெய் விலை பன்மடங்காக அதிகரித்ததுடன் அரசாங்கம் வெளிநாட்டு செலாவணி தொடர்பாக பாரதூரமான நெருக்கடிக்கு முகம் கொடுத்தது. உள்நாட்டில் உணவு உற்பத்தி வேகமாக வீழ்ச்சி கண்டு வந்ததோடு உணவுத் தட்டுப்பாடு பட்டினி மட்டத்தை நெருங்கிக் கொண்டும் இருந்தது.இதனால் உருவாகும் பொதுமக்களது கொதிப்பை நசுக்குவதற்கான நடவடிக்கைகள் ஆளும் வர்க்கத்துக்கு அவசியப்பட்டது.

ஒடுக்கப்படும் மக்கள் தமது அவசியங்களின் பேரில் நடாத்தும் போராட்டத்தில் அணிதிரளக்கூடிய ஒரு சமூக சக்தியாக தொழிலாளர் வர்க்கம் தலை உயர்த்துவதையிட்டு ஆளும் வர்க்கம் எல்லையற்ற பீதி கொண்டிருந்தது. அதைத் தவிர்க்கும் பொருட்டு 1964ல் சமசமாஜ-ஸ்டாலினிச தலைவர்கள் அரசாங்கத்தில்

(15ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com


# இ.தொ.கா. அதிகாரத்துவத்துக்கு படுதோல்வி! தோட்டத்துறை பூராவும் சோ.ச.க.வை கட்டியெழுப்பு!

**சோ.ச.க. அரசியல் குழு அறிக்கை - 1997.04.25**

30 ஆண்டுகளுக்கு மேலாக தோட்டத் தொழிலாளர்களில் பெரும்பான்மையினர் மீது அரசியல் ஆதிக்கம் கொண்டிருந்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கடந்த உள்ளூராட்சித் தேர்தல்களில் படுதோல்வி கண்டது. தோட்டத் தொழிலாளர்களில் பெரும்பான்மையினர் இ.தொ.கா.வுக்கு வாக்களிப்பதை நிராகரித்ததன் மூலம் மிலேச்சத் தாக்குதல் நடாத்திவரும் பொதுஜன முன்னணி அரசாங்கம் தொடர்பாகவும் கடைகெட்ட காட்டிக் கொடுப்புக்களில் ஈடுபடும் தொண்டமான் தலைமை தொடர்பாகவும் தம்முள்ளே கொதித்துக் கொண்டுள்ள ஆத்திரத்தை வெளிக்காட்டி உள்ளனர். தோட்டத் தொழிலாளர்கள் தமது உரிமைகளைக் காக்கும் போராட்டத்தினை முன்னெடுக்கும் பொருட்டு சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோக்கினாலும் தலைமையினாலும் ஆயுதபாணி ஆக்கப்பட வேண்டிய காலம் வந்துவிட்டது. ஆதலால் காலம் கடத்தாது முன்செல்ல வேண்டும். அங்ஙனம் செய்யாது போனால் தொழிலாளர் வர்க்கத்தின் எதிரியான யூ.என்.பி.யோ அல்லது வேறு எந்த ஒரு பிற்போக்கு சக்தியோ தொழிலாளர் வர்க்கத்தின் எதிர்ப்பினை சூறையாடிக் கொள்ளும் ஆபத்து இருந்து கொண்டுள்ளது. உள்ளூராட்சி சபை தேர்தல்களில் யூ.என்.பி.யும் தோட்டத் துறையில் கணிசமான வாக்குக்களை சுரண்டிக் கொண்டுள்ளது.

இ.தொ.கா.முன்னர் ஆதிக்கம் கொண்டிருந்த சகல உள்ளூராட்சி சபைகளையும் இழந்துள்ளது. 5 இலட்சம் தோட்டத் தொழிலாளர் வாக்குக்களை தனது சொத்துப்பத்தாக விற்றுத் தள்ள முடியும் என வாயடித்துக் கொண்டு முன்னர் யூ.என்.பி.யுடனும் பின்னர் பொதுஜன முன்னணி அரசாங்கத்துடனும் ஒட்டிக்கொண்ட தொண்டமான் அதிகாரத்துவத்தினால் 51062 வாக்குக்களை மட்டுமே வெற்றி கொள்ள முடிந்தது. "இந்திய வம்சாவழியினர்" உரிமைகளின் பேரில் போராடுவதாகக் கூறிக்கொண்ட இ.தொ.கா.கொழும்பு பிராந்தியத்தில் சுரண்டிக் கொண்ட வாக்குக்களின் எண்ணிக்கையும் தலைகீழாக வீழ்ச்சி கண்டுள்ளது. வத்தளைப் பிரதேச சபைக்கான தேர்தலில் அதற்குக் கிட்டிய வாக்குக்களின் எண்ணிக்கை 163 மட்டுமே. வத்தளை -மாபொளை நகர சபைக்கான தேர்தலில் அதனால் 128 வாக்குக்கள் மட்டுமே பெற முடிந்தது.

தொழிலாளர் வர்க்கத்தின் கணிசமான பகுதியினர் இலங்கையினுள் ஏகாதிபத்தியவாதிகளதும் முதலாளிகளதும் மாபெரும் அரசியல் முண்டுகோலை உடைத்து எறிந்ததன். ஒரு உச்சக்கட்டத்தை இது குறித்துநிற்கின்றது. இ.தொ.கா.தலைவர்கள் மட்டுமன்றி முதலாளி வர்க்கத்தின் சகல. அரசியல் கட்சிகளும் அமைப்புக்களும் வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் இந்த முண்டுகோல் சரிந்து போனதையிட்டு நானாவித முனகல்களில் ஈடுபட்டுள்ளனர். அவற்றின் மூலம் மக்களின் கண்களில் மண் போட்டுள்ளனர். தொண்டமானின் "தோட்ட முடியரசு வீழ்ச்சி" கண்டதையிட்டு எழுதும் இனவாத கைக்கூலிகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிரான முதலாளி வர்க்கத்தின் மிலேச்சத் தாக்குதல்களுக்கு. உத்வேகம் அளிக்கும் விதத்தில் கொம்புகளை உயர்த்திக் கொண்டுள்ளனர். எனினும் இவர்கள் அனைவரும் இன்னொரு காரணத்தை மூடி மறைக்க முயற்சிக்கின்றனர். பயத்தினால். கிடுநடுங்குகிறார்கள்: பெரிதும் அடக்கி ஒடுக்கப்பட்ட பகுதியினரான தோட்டத் தொழிலாளர்கள் உட்பட்ட முழு தொழிலாளர் வர்க்கமும் அதிகாரத்துவத்தின் கைவிலங்குகளை உடைத்துக் கொண்டு தமது உரிமைகளைக் காக்கும் தீர்க்கமான போராட்டங்களுக்கு கிளர்ந்து எழும் நிலைமைகள் அபிவிருத்தி காண்பது தோட்டத்துறையில் பெரும்பான்மையினர் இ.தொ.கா.வை நிராகரித்ததன் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. தமக்கு ஏற்பட்ட தோல்வியையிட்டு இ.தொ.கா.தலைவர்கள் குழம்பிப் போயுள்ளனர்.

மார்ச் 30 ம் திகதி கூடிய இ.தொ.கா.வின் தேசிய சபை 48 மாவட்ட கவுன்சில்களையும் அவற்றின் கீழ் இயங்கிய 2100 தோட்டக் கமிட்டிகளையும் கலைத்துவிடத் தீர்மானம் செய்ததாக அன்றையதினமே நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தொண்டமான் அறிவித்தார். தொழிற் சங்கத்தைச் சுத்திகரிக்கத் தம்மைச் "சர்வாதிகாரி" ஆக தேசிய சபை அதிகாரம் வழங்கியுள்ளதாக கூறும் தொண்டமான் பின்வருமாறும் குறிப்பிட்டார்: "எனது மக்கள் எனக்கு நேரடியாக ஒரு செய்தியை வழங்கி உள்ளார்கள்" பெண்களையும் இளைஞர்களையும் தோட்டக் கிளைச் சங்கத் தலைவர்களையும் உள்ளடக்கிய புதிய தோட்டக் கமிட்டிகளை அமைக்கப் போவதாக அவர் அங்கு குறிப்பிட்டார். கனவு கண்டு எழுந்தவர் போல் தொண்டமான் பேசுவது தொழிலாளர்களையிட்டுக் கொண்ட கருணையினால் அல்ல. தொழிலாளர் உரிமைகளுக்காக போராட நினைத்துக் கொண்டும் அல்ல. கையாலாகாத்தனமான விதத்தில் அவர் இந்த வெடியை வெடிக்க வைப்பது தாம் புதிய ஆள் ஆகிவிட்டதாக மோசடி செய்யவும் தொழிலாளர்களை தமது பிடிக்குள் கொணர்ந்து ஏகாதிபத்தியவாதிகள் சிபார்சு செய்துள்ள தாக்குதல்களுக்கு பலியிடுவதற்குமேயாகும். உண்மையில் இந்த தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் ஏகாதிபத்தியவாதிகளுக்கும் இலங்கை முதலாளிகளுக்கும் ஆற்றவேண்டிய சேவையை பற்றியும் தமது மடியை நிரப்பிக் கொள்வது பற்றியுமே அக்கறையாக உள்ளனர். மேலே குறிப்பிட்ட தேசிய சபை கூட்டத்தில் இன்றைய பொதுஜன முன்னணி அரசாங்கத்தினுள் தொடர்ந்து பதுங்கிக் கொள்ளவும் தீர்மானம் செய்த இ.தொ.கா.அதிகாரத்துவம் ஆட்சிக்கு வரும் எந்த ஒரு அரசாங்கத்தினுள்ளும் நுழைந்து கொள்வதெனவும் உறுதியாக குறிப்பிட்டுள்ளது.

மார்ச் 30ம் திகதி இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பேசிய தொண்டமான் ஏகாதிபத்தியவாதிகளும் முதலாளிகளும் தம்மிடம் இருந்து எதிர்பார்க்கும் சேவையை பற்றி பின்வருமாறு குறிப்பிட்டார்: "இதுவரை காலமும் நான் வடமாகாணம் போன்ற ஒரு நிலைமை மலைநாட்டில் அபிவிருத்தி காண்பதை தவிர்த்தேன். நீங்கள் என்னையும் இ.தொ.கா.வையும் ஒழித்துக் கட்டினால் மலைநாடு மற்றொரு கிளர்ச்சித் தளமாகும்." தொண்டமான் சுருக்கமாகக் கூறுவது என்ன? தோட்டத்துறை தொழிலாளர்கள் தமது உரிமைகளுக்காக கிளர்ச்சி செய்வார்கள். ஆதலால் அதைத் தவிர்க்க எனது கையைப் பலப்படுத்துங்கள்!

முதலாளி வர்க்கத்தின் நனவான பகுதியினர் இ.தொ.கா.வின் தோல்வியையிட்டு நன்றாகக் குழம்பிப் போயுள்ளனர். உள்ளூராட்சி சபை தேர்தல் முடிவுகளையிட்டு உள்நாட்டு, வெளிநாட்டு முதலாளிகளின் கருத்துக்களை ஆய்வு செய்கையில் 'சண்டே டைம்ஸ்' பத்திரிகையின் வர்த்தக துறை சார்ந்த பக்கங்களின் தலைப்பு செய்தியில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது: "...ஆனால் இ.தொ.கா.மீது பொதுமக்கள் வெறுப்பை வெளிக்காட்டிக் கொண்ட சமீபத்திய தேர்தலுடன் எதிர்காலத்தில் தோட்டத் துறையில் ஒரு நிச்சயமற்ற நிலை ஏற்பட இடமுண்டு." (1997-மார்ச் 30) முதலாளி வர்க்கத்தினர் தோட்டத் துறையில் உருவாகக்கூடிய நிச்சயமற்ற நிலைமையைப் பற்றி தம்மை எச்சரிக்கை செய்து கொள்வதும் குட்டி முதலாளித்துவ வர்க்கப் பகுதியினரை கிலியடையச் செய்வதும் தொழிலாளர் வர்க்கத்தினை நசுக்கித் தள்ளத் தயாராகும் அவசியத்தினாலேயேயாகும்.

தோட்டத் துறையினுள் பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் மற்றொரு முண்டுகோலான பீ.சந்திரசேகரனின் மலையக மக்கள் முன்னணியும் தொழிலாளர்களால் நிராகரிக்கப்பட்டுள்ளது. 1994 பொதுத் தேர்தலில் 24248 வாக்குக்களைப் பெற்ற மலையக மக்கள் முன்னணிக்கு இத்தேர்தலில் 14507 வாக்குக்கள் மட்டுமே கிடைத்துள்ளது. இ.தொ.கா.வும் மலையக மக்கள் முன்னணியும் அமைச்சர் பதவிகளை வரித்துக் கொண்டுள்ள பொதுஜன முன்னணி அரசாங்கம் தொடர்பாக தொழிலாளர்கள் எந்தளவு ஆத்திரம் கொண்டுள்ளனர் என்பதை இதும் மேலும் காட்டுகின்றது.

தொண்டமான் தேர்தல் தோல்வியுடன் தொழிலாளர்களையிட்டு முதலைக் கண்ணீர் வடிப்பது ஏன்? தோட்டத்துறையின் முதலாளி வர்க்கத்துக்கு எந்த ஒரு நிச்சயமற்ற நிலையும் உருவாக இடமளிக்காமல் தொழிலாளர்களை நசுக்கித் தள்ளும் கடைகெட்ட தாக்குதல்களுக்கு அவர்களைப் பலியிடுவதற்கேயாகும். தொழிலாளர்கள் இ.தொ.கா.தலைவர்களின் இந்த சதிகளைக் தகர்த்து எறிந்து, தமது உரிமைகளை காக்கும் வேலைத்திட்டத்தின் அடிப்படையில் முன்நோக்கிச் செல்ல வேண்டும். அதனை சோசலிச சமத்துவக் கட்சியின் முன்நோக்கிற்குப் போராட அணிதிரள்வதன் மூலம் மட்டுமே சாதிக்க முடியும்.

## தொண்டமானின் அறிக்கை

தோட்டத் தொழிலாளர்கள் இன்று முகம் கொடுத்துள்ள தாக்குதல்களுக்கு பொறுப்பு ஸ்டாலினிஸ்டுகளுடன் கூட்டுச் சேர்ந்து கடைகெட்ட காட்டிக் கொடுப்புக்களை நடாத்திய சமசமாஜக் கட்சியும் -அந்தக் காட்டிக் கொடுப்பின் மத்தியில் தொழிலாளர்களிடையே பிடியை இறுக்கிக் கொண்ட இ.தொ.கா.வுமேயாகும். கடந்த 17 ஆண்டுகள் யூ.என்.பி.அரசாங்கத்தினுள் நுழைந்து கொண்டதும் பின்னர் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினுள் குத்துக்கரணம் அடித்துக் கொண்டதும் தோட்டத் தொழிலாளர்களின் மாபெரும் உரிமைகளை பெற்றுக் கொள்ளவே எனத் தொண்டமான் அதிகாரத்துவம் கூறியது. தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளைப் பெற்றுக்கொள்ள ஆட்சிக்கு வரும் அரசாங்கங்களில் சேர்ந்து கொள்வதைத் தவிர வேறு வேலைத்திட்டம் கிடையாது எனவும் தொண்டமான் கூறி வந்துள்ளார். ஆனால் கடந்த 20 ஆண்டுகளாக தொண்டமானின் செயற்பாடுகளின் சுருக்கம் வருமாறு :

* 1997ல்இருந்து யூ.என்.பி.அரசாங்கம் இ.தொ.கா.வின் முண்டுகோலுடன் முன்சென்றது, வடக்கு-கிழக்கு மாகாணங்களில் தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கும் தோட்டத்துறையில் தமிழ் பேசும் தொழிலாளர்களுக்கும் எதிராக இனவாத இரத்தக் களரிகளை கட்டவிழ்த்து விட்டபடியாகும். மறுபுறத்தில் இ.தொ.கா. தலைவர்கள் இந்த இனவாத பிற்போக்கினை சமசமாஜ-கம்யூனிஸ்ட் -நவசமசமாஜ தலைவர்களுடனும் தொழிற்சங்கத் தலைவர்களுடனும் சேர்ந்து வேலையை பங்கிட்டுக் கொண்டு நகர்ப்புற-தோட்டத் துறை தொழிலாளர்களை பிளவுபடுத்தி வைப்பதற்குப் பயன்படுத்தியது. இந்தக் கடைகெட்ட வேலைத்திட்டத்தைப் பயன்படுத்தி ஜயவர்தனாவின் யூ.என்.பி. அரசாங்கம் ஏகாதிபத்திய மூலதனத்தின் சுரண்டலுக்காக நாட்டைத் திறந்து விட்டதோடு, தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்களை இரத்தக்களரி ஒடுக்குமுறைக்கு உள்ளாக்கியது.
* இலங்கையின் தனியொரு கைத்தொழில் துறையில்- பிரமாண்டமான எண்ணிக்கையான தொழிலாளர்களைக் கொண்ட தொழிலாளர்களின், பிரச்சாரத்துக்கு மத்தியில் குடியுரிமை பறிக்கப்பட்ட தொழிலாளர்களில் ஒரு பிரிவினருக்கு குடியுரிமையை வழங்க முதலில் ஜயவர்தன அரசாங்கத்துக்கும் பின்னர் பிரேமதாச அரசாங்கத்துக்கும் நேரிட்டது. தோட்டத் தொழிலாளர்களுக்கு தாம் குடியுரிமையைப் பெற்றுக் கொடுத்ததாக தொண்டமான் அதிகாரத்துவம் வாயடித்துக் கொள்கின்றது. ஆனால் தோட்டத் தொழிலாளர்களுக்குக் கிடைத்திருப்பதோ கோம்பை மட்டுமேயாகும். ஏனைய பிரஜைகளுக்குச் சமானமான உரிமைகள் அவர்களுக்குக் கிடையாது. பலருக்கு தேசிய அடையாள அட்டை

கிடையாது. பிறப்புச் சாட்சிப் பத்திரம் கிடையாது. வாக்குரிமை கிடையாது. அவர்கள் இரண்டாந்தரமான பிரஜைகளாகக் கணிக்கப்பட்டு இடைவிடாத இனவாத ஒடுக்குமுறைக்கு உள்ளாகி வருகின்றார்கள். தோட்டத் துறைக்கு வெளியில் தொழில் தேடும் தோட்டத் துறை தொழிலாளர் இளைஞர்கள் இனவாதப் பாகுபாடுகளுக்கு பலியாகின்றார்கள். 1949ல் குடியுரிமையை ஒழித்த சட்டம், இந்திய தோட்டத் தொழிலாளர் மசோதா, 1963 சிரிமா-சாஸ்திரி உடன்படிக்கை ஆதிய ஒடுக்குமுறை மசோதாக்கள் தொழிலாளர்கள் மீது திணிக்கப்பட்டுள்ளது. இன்றும் கூட 160,000 தொழிலாளர்கள் குடியுரிமை இல்லாமல் இருக்கின்றார்கள். இவை தோட்டத் துறையில் சூடேறியுள்ள பிரச்சினைகளாகும்.

இ.தொ.கா, யூ.என்.பி.யின் எல்.ஈ.ஜே.டபிள்யூ., மற்றும் தொழிற்சங்க அதிகாரத்துவங்களும் முன்னர் யூ.என்.பி.அரசாங்கத்தினாலும் இப்போது பொதுஜன முன்னணி அரசாங்கத்தினாலும் தோட்டங்களிலும் மற்றும் அரச துறைகளிலும் நடைமுறைப்படுத்தப்படும் தனியார்மய வேலைத்திட்டத்தின் கைக்கூலிகளாக நின்று செயற்படுகின்றன. ஏகாதிபத்திய ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் படுமோசமான சுரண்டலுக்கு தொழிலாளர்களையும் வளங்களையும் பலியிடுவது இதன் ஒரு பாகமாகும். தனியார்மய வேலைத்திட்டம் தொழிலாளர்களின் பலத்த எதிர்ப்புக் காரணமாக நடைமுறைக்கிடப் படுவது பலதடவை ஒத்திவைக்கப்பட்டது. ஆனால் தொண்டமான் போன்ற முன்னணி துரோகி தலைவர்கள் 1993ல் பிரேமதாச அரசாங்கம் தோட்டங்களை தனியார் கம்பனிகளிடம் முகாமைக்கு ஒப்படைப்பதற்கு முண்டு கொடுத்தனர். தனியார்மயத்தின் நாசங்கள் எந்தளவு தீர்க்கமானது என்பதைக் காட்டும் விதத்தில் இந்த தோட்ட முகாமைக் கம்பனிகள் வேலைத் துரிதப்படுத்தலை உக்கிரமாக்கின. சம்பளத்தை வெட்டின. பெயரளவில் இருந்துவந்த நலன்புரிச் சேவையை ஒழித்துக் கட்டின. இவற்றுக்கு தொழிலாளர்கள் தோட்டத்துக்கு தோட்டம் போராட்டங்களில் இறங்கி பதிலளித்தனர். தொண்டமான்-செல்லச்சாமி தலைமை கிளைச் சங்கங்களை இவற்றை முறியடிக்க ஈடுபடுத்தியது.

யூ.என்.பி.அரசாங்கத்தினால் பூர்த்தி செய்ய முடியாது போன தனியார்மயத்தை பொதுஜன முன்னணி அரசாங்கம் சகல தொழிற்சங்க அதிகாரத்துவங்களதும் ஒத்துழைப்புடன் முடித்துவைக்கக் கைவைத்துள்ளது. இதற்கு தொண்டமான் அதிகாரத்துவத்தின் இடையுறாத ஒத்துழைப்பு அரசுக்கு கிடைத்து வருகின்றது. மிகவும் இலாபத்தில் இயங்கிக் கொண்டுள்ள தோட்டங்களை அவற்றின் பெறுமதியில் அரைவாசிக்கும் குறைவாக விற்றுத் தள்ளி, உள்ளூர், வெளிநாட்டு முதலீட்டாளர்களும் அரசாங்கத்தின் கையாட்களும் தொழிற்சங்க அதிகாரத்துவங்களும் மடியை நிறைத்துக் கொள்ளத் தொடங்கி உள்ளனர். தொண்டமான் குடும்பமும் ஒரு தோட்டத்துக்குச் சொந்தமான முதலாளித்துவக் குடும்பமாகும் என்பது குறிப்பிடத்தக்கது. தோட்டத் தொழிலாளர்களை ஒரு சம்பள வெட்டு ஒப்பந்தத்தினுள் மாட்டிவைத்து தனியார்மயத்துக்கான நிலைமைகளைச் சிருஷ்டித்துக் கொடுத்ததால் தோட்டக் கம்பனிக்காரர்கள் தொண்டமானின் 84வது பிறந்த தின கொண்டாட்டங்களை தரீ பக்ரி என்ற ஆடம்பரக் ஹோட்டலில் இலட்சக் கணக்கான ரூபா செலவில் கொண்டாடினர். இன்று தொழிலாளர்கள் தனியார்மயத்தின் சகல ஆபத்துக்களுக்கும் முகம் கொடுத்துள்ளனர். தோட்டங்கள் உள்ளடங்கலான சகல அரச அமைப்புக்களையும் தனியார்மயமாக்கி, வெளிநாட்டு, உள்நாட்டு முதலாளிகளின் இலாபப் பொதிகளை நிரப்புவதைத் தவிரத் தொழிலாளர்களுக்கு வேறு வேலைத்திட்டம் கிடையாது என ஏகாதிபத்தியச் சார்பு தொண்டமான் அதிகாரத்துவம் கூறிக் கொள்கின்றது.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தினை வறுமை மட்டத்திற்குக் கொணர்வது இ.தொ.கா.அதிகாரத்துவத்தின் மற்றொரு வேலைத்திட்டமாகும். 1993ல் தோட்டத் தொழிலாளர் சம்பளத்தினை ரூபா.72.24ல் கட்டிப்போடுவதற்கு அதிகாரத்துவம் அரசாங்கத்துக்கு முண்டு கொடுத்தது. அதன் கீழ் அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவுப் புள்ளி ஒன்றுக்கு கூட்டப்படும் 02 சதம் அலவன்சும்

படிப்பகம்

www.padippakam.com



தோட்டப் பகுதி அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு பு.க.க. அட்டனில் நடாத்திய மறியல் போராட்டத்தின் ஒரு பகுதி



பீ.எல்.ஓ. தலைவரின் இலங்கை விஜயத்தின் போது நடைபெற்ற விழாவில் தொண்டமான் அமைச்சர் தர்மசிரி சேனநாயக்க சபாநாயகர் கே.பி. ரத்னாயக்கவுடன்

கூட நிறுத்தப்பட்டது. வாழ்க்கைச் செலவு அதிகரித்து, தொழிலாளர்களுக்கு அன்றன்றாடு ஜீவியத்தை ஓட்டுவது முடியாத ஒரு நிலை உருவான ஒரு நிலைமையின் கீழ் சம்பள அதிகரிப்பு பிரச்சாரம் மீண்டும் தோன்றியது. 1996 ஏப்பிரல் 22ல் இருந்து 27 வரை தொழிலாளர்கள் சம்பளத்தை அதிகரிக்குமாறு கோரி வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர். தொழிலாளர் போராட்டங்கள் வெடிப்பதைத் தவிர்க்கும் பொருட்டுத் தாம் வேலைநிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்ததாகத் தொண்டமான் பகிரங்கமாகக் குறிப்பிட்டார். இதன் பின்னர் இ.தொ.கா., யூ.என்.பி. தொழிற்சங்கத் தலைவர்கள் அரசாங்கத்துடனும் தோட்ட கம்பனிகளுடனும் கூட்டாகச் சதி செய்து, நாட் சம்பளமாக ரூபா.83வை தொழிலாளர்கள் மீது திணிக்கும் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். 1993ல் வாழ்க்கைச் செலவுப் புள்ளி கொடுப்பனவு நிறுத்தப்படாவிட்டால் 1996 ஜூலை மாதமளவில் தொழிலாளர்களுக்கு சம்பளமாக ரூபா.97.08 கிடைத்திருக்கும். இன்று ரூபா.83 சம்பளத் திட்டத்தின் மூலம் தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் உண்மையில் ரூபா.14.08 சம்பள வெட்டுச் செய்துள்ளன. இரண்டு இலட்சம் தொழிலாளர்கள் இந்த உடன்படிக்கையை எதிர்த்து வேலைநிறுத்தம் செய்தனர். 1996 ஆகஸ்ட் 4ம் திகதி கண்டியில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய தொண்டமான் பின்வருமாறு குறிப்பிட்டார்: "முகாமைத்துவக் கம்பனிகளுக்கு உற்பத்தியையும் இலாபத்தையும் அதிகரிக்க நாம் சந்தர்ப்பத்தை உருவாக்க வேண்டும்". தொண்டமான் யாரின் ஏஜன்ட் என்பதற்கு மேலும் சாட்சி அவசியமா?

தோட்டத் தொழிலாளர்களுக்கு எந்த ஒரு நாட்டிலும் நிலையான மாதச் சம்பளம் இல்லாததால் இலங்கையிலும் அத்தகைய ஒரு கோரிக்கையை முன்வைப்பது அநீதியானது என தொண்டமான் யூ.என்.பி.-பொதுஜன முன்னணி அரசாங்கங்களுடன் சேர்ந்து கூறி வருகின்றார்.

தொழிலாளர்கள் வேறு உணவுப் பொருட்களுக்காக செலவிட பணம் இல்லாததால் மாவு பாவனை அதிகம். மாதத்துக்கு சுமார் 5.5 கிலோ மாவு பாவிக்கின்றார்கள். பொதுஜன முன்னணி அரசாங்கம் 1996 ஆகஸ்ட் மாதத்தில் மாவு விலையை 9.45 ஆல் அதிகரித்தது. ஒரு தோட்டத் தொழிலாளியின் வாழ்க்கைச் செலவு மாதத்துக்கு ரூபா.51.98ஆல் அதிகரித்தது. இதனால் வாழ்க்கைத் தரத்துக்கு பெரும் தாக்குதல் தொடுக்கப்பட்டது.

தொண்டமானின் துரோக அறிக்கையில் சேர்ந்து கொள்ளும் இன்னொரு கயமைப் பாத்திரம் என்ன தெரியுமா? தோட்டத் தொழிலாளர்களை வாய்மூடச் செய்யும் பொருட்டு பொலிஸ் ஒடுக்குமுறைத் தாக்குதல்களில் நேரடியாக இணைந்து கொள்வதுடன்விடுதலைப் புலிகளுடன் பயங்கரவாத நடவடிக்கைகளுடனும் சம்பந்தப்பட்டவர்கள் எனக் கூறி தோட்டத் தொழிலாளர்களை கூட்டம் கூட்டமாக கைது செய்யும் பொருட்டு இந்தத் துரோகிகள் பொலிசாருக்கு பெயர்ப் பட்டியல்களை வழங்கினர்.

இ.தொ.கா.வில் இருந்து விலகி புதிய தொழிற்சங்கத்தை அமைத்த பீ. சந்திரசேகரனையும் பீ.ஏ.காதரையும் கைது செய்ய தூண்டியவர்கள் தொண்டமான்-செல்லச்சாமி அதிகாரத்துவங்களே என்பது அம்பலமாகியுள்ளது. பொதுஜன முன்னணி அரசாங்கத்தின் பிரதி அமைச்சராகி சிறையில் இருந்து வெளியே வந்த சந்திரசேகரன் தொண்டமான் அதிகாரத்துவத்துடன் வேலையைப் பகிர்ந்து கொண்டு தோட்டத் தொழிலாளர்களை வேட்டையாடத் தூண்டி வருகின்றார்.

## சமூக நிலைமை

தோட்டத் தொழிலாளர்கள் முகம் கொடுக்க நேரிட்டுள்ள நிலைமை என்ன? தோட்டத் துறையில் வேலையில்லாதோர் எண்ணிக்கை ஒரு இலட்சத்தை தாண்டிவிட்டதாக கணக்கிடப் பட்டுள்ளது. தொழிலாளர்களின் வருமான மட்டத்தினை எடுத்தால் நூற்றுக்கு 9 வீதமானோருக்கு வருமானமாகக் கிடைப்பது மாதத்துக்கு ரூபா.500-1000 இடையிலான வருமானமாகும். ரூபா.1000-1500க்கும் இடையே வருமானம் பெறுவோர் தொகை நூற்றுக்கு 30 வீதமாகும். ரூபா.1500-2000க்கும் இடையே வருமானம் பெறுவோர் நூற்றுக்கு 42 வீதமாகும். இதன்படி நூற்றுக்கு 81 வீதத்தினர் ரூபா.2000க்கு குறைவான வருமானத்தையே பெறுகின்றனர். குறைந்த வருமான மட்டத்தினாலும் விலைவாசி உயர்வினாலும் சம்பளத்தில் பெரும் பங்கு உணவுக்கே செலவாகின்றது. குறைந்த பட்ச போஷாக்குடைய உணவு இல்லாமல் தோட்டத் துறையில் நூற்றுக்கு 41 வீதத்துக்கும் அதிகமானோர் உள்ளனர். குறைந்த பட்ச பலத்துக்கான 2500கலோரி உணவு இல்லலாமல் தோட்டத் துறை ஜனத்தொகையில் நூற்றுக்கு 79 வீதமானோர் உள்ளனர். தாயின் வயிற்றில் போஷாக்கின்மைக்கு பலியாகும் குழந்தைகளின் எண்ணிக்கை நூற்றுக்கு 10 வீதமாகும். அவர்களின் நிறை 500-1000 கிராம்களுக்கு இடைப்பட்டதாக உள்ளது. பிறப்பில் இருக்க வேண்டிய குறைந்தபட்ச நிறையான 2.5.கிலோ கிராம்களைத் தன்னும் கொண்டிராத குழந்தைகளின் எண்ணிக்கை நூற்றுக்கு 40 வீதமாகும்.

இந்தக் குழந்தைகளுக்கு ஒழுங்கு முறையான பாடசாலைகள் கிடையாது. சுகாதார வசதிகள் கிடையாது. பெரும்பாலானவர்களுக்கு மின்சார வசதியோ அல்லது குடிப்பதற்கு உகந்த நீரோ கிடையாது.

உள்ளூராட்சி சபை தேர்தல் சமயத்தில் தோட்டத் துறையில் வாக்குக்களைச் சூறையாடுவதற்காக வீட்டுப் பிரச்சினையை தீர்த்துவைக்கும் தோரணையில் இ.தொ.கா.அதிகாரத்துவமும் அரசாங்கமும் படுமோசடியில் ஈடுபட்டன. அதன்படி அரசாங்கமும் இ.தொ.கா.வும் 200,000 லயின் அறைகளை தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்குவதாக பிரச்சாரம் செய்தனர். ஆனால் நடந்தது என்ன? தொழிலாளர்களுக்கு கூட்டுறவு அடிப்படையில் லயின் அறைகளை வழங்குவதாகக் கூறிக் கொண்டுள்ளார்கள். கூட்டுறவு திட்டத்தின் தலைவர் தோட்டக் கம்பனியின் முகாமையாளர். இவை காலனித்துவ காலம் தொட்டு இருந்து வரும் மாட்டுத் தொழுவத்தினை ஒத்தவையாகும். வீடுகளைக் கட்டிக் கொள்ள வேண்டுமானால் தொழிலாளர்கள் தமது சம்பளத்தில் இருந்து ஒரு பங்கினையும் சேமலாப நிதியையும் தியாகம் செய்து கடன் பெற வேண்டியிருக்கும். உண்மையில் இது வீடில்லாப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதல்ல. தொழிலாளர்களை கடனாளிகளாக்கி வங்கிகள் பணம் சுரண்டிக் கொள்ளும் மற்றொரு மோசடியாகும்.

தோட்டத் துறையினுள் நடைமுறைக் கிடப்படுவது உலக வங்கியினாலும் சர்வதேச நாணய நிதியத்தினாலும் சிபார்சு செய்யப்பட்டு முழுத் தொழிலாளர் வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிராக நடைமுறைக்கிடப்படும் வேலைத் திட்டமாகும். ஏகாதிபத்திய நாடுகள் தொடக்கம் பின்தங்கிய நாடுகள் வரை நடைமுறைக்கிடப்படுவது ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளினால் இலாபம் சுரண்டும் கொடிய வேலைத் திட்டமாகும். இலங்கையினுள் யூ.என்.பி அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டு இப்போது பொதுஜன முன்னணி அரசாங்கத்தினால் முன்னெடுக்கப் படுவது இந்த வேலைத்திட்டமேயாகும்.

இந்தத் திட்டத்தின் கீழ் தோட்டத்துறையை தனியார்மயமாக்கி மிகவும் உக்கிரமான ஒரு தொகை தாக்குதல்களுக்கு தோட்டத் தொழிலாளர்களை உள்ளாக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. தேயிலைத் தோட்டத் தனியார்மயம் ஏற்கனவே ஆரம்பமாகியுள்ளது. இறப்பர். தெங்குத் தோட்ட தனியார்மயம் வெகு வரைவில் ஆரம்பமாக உள்ளது. உலக தேயிலை சந்தையில் இலாப பொதி சண்டைக்கு முகம் கொடுக்கும் இலங்கை தேயிலை கைத்தொழில் முதலாளிகள் தொழிலாளர்களை எலும்புவரை உறிஞ்சிக் கொள்ளவும் இலாப வீதத்தினை அதிகரித்துக் கொள்ளவும் போட்டியிட்டுக் கொண்டுள்ளனர்.

இலங்கை தேயிலைக் கைத்தொழிலைப் பற்றிய சிபார்சுகளை செய்யும் பொருட்டு யூ.என்.பி.அரசாங்கம் 1994ல் ஜயந்த கலேகம ஆணைக்குழுவை நியமித்தது. அந்த ஆணைக்குழுவிற்கு அனுப்பிய அறிக்கையில் தோட்ட முதலாளிகள் சம்மேளனம் பின்வருமாறு குறிப்பிட்டது: "தோட்டத்துறையின் நடைமுறையில் சுதந்திர சந்தை நிலைமை ஏற்படுவதற்கு சம்பளம் , உழைப்பு பற்றிய இனங்காணல் அதற்கு முன்னதாக உள்ளடங்க வேண்டும். சம்பளத்தைக் குறைப்பதற்கும் உபரி உழைப்பை வெளியேற்றுவதற்கும் உழைப்பாளர்களுக்கு ஒரு கிழமைக்கு வழங்கும் வேலை நாள் எண்ணிக்கையை ஒழுங்கு செய்யவும் தோட்டத் துறைக்கு சுதந்திரம் இருக்க வேண்டும்."

ஒரு கிலோ தேயிலையை உற்பத்தி செய்ய செலவாகும் செலவில் நூற்றுக்கு 67 வீதம் செலவாகுவது தொழிலாளர் உழைப்புக்கு ஆதலால் தொழிலாளர் செலவைக் குறைக்க வேண்டும் எனவும், "உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டும்" எனவும்- அதாவது வேலையைத் துரிதப்படுத்த வேண்டும் எனவும் இந்த ஆணைக்குழு சிபார்சு செய்துள்ளது.

தோட்டச் சொந்தக் காரர்களும் அரசாங்கத்தின் ஆணைக்குழுவும் கூறுவது என்ன? மனம்போன போக்கில் தோட்டத்துறை தொழிலாளர்களை ஆயிரக்கணக்கில் வேலைநீக்கம் செய்ய வேண்டும். சம்பளத்தை வெட்ட வேண்டும். எஞ்சிய தொழிலாளர்களிடம் உயிர்வாங்கும் விதத்தில் வேலை வாங்க வேண்டும் என்பதாகும். மறுபுறத்தில் தோட்டத்துறையில் இருந்து வெளியேற்றும் தொழிலாளர்களை வேறு கைத்தொழில்களில் இரண்டு துட்டுக்கு சுரண்டும் நிலைமையைச் சிருஷ்டிக்க வேண்டும். தோட்டத் தொழிலாளர்கள் மீது இப்போது கட்டவிழ்க்கப்பட்டு வருவது இந்தக் காட்டுமிராண்டி வேலைத் திட்டமாகும்.

இந்த விதத்தில் முழு தொழிலாளர் வர்க்கத்தையும் ஒடுக்கப்படும் மக்களையும் மிலேச்ச நிலைமைகளுக்கு உள்ளாக்க பொதுஜன முன்னணி அரசாங்கமும் யூ.என்.பி.யும் மற்றும் பிற்போக்குச் சக்திகளும் செயற்பட்டு வருகின்றன. இனவாத யுத்தம், இராணுவ-பொலிஸ் அடக்குமுறையை உக்கிரமாக்குவதும் குண்டர் சக்திகளை சிருஷ்டிப்பதும் இந்தப் பிற்போக்கு தயாரிப்பின் ஒரு பாகமாகும். சுருக்கமாகச் சொன்னால் ஆளும் வர்க்கம் இராணுவ-பொலிஸ் சர்வாதிகாரத்துக்குத் தயார் செய்வதாகும். ஏனெனில் தமது உரிமைகளுக்கான போராட்டங்களுக்குக் கிளர்ந்து கொண்டுள்ள தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை நசுக்கித் தள்ளுவதற்கேயாகும்.

தோட்டத் துறையில் தொண்டமான் உள்ளடங்கலான தொழிற்சங்க அதிகாரத்துவங்களும் சமசமாஜ ,கம்யூனிஸ்ட், நவசமசமாஜ கட்சிகளும் ஏனைய தொழிற் சங்கங்களும் நேரடியாக முதலாளி வர்க்கத்துடன் கூட்டுச் சேர்ந்து கொண்டிருப்பது தொழிலாளர் வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் எதிரான இந்த அலுகோசு வேலைத் திட்டத்தினை நடைமுறைக் கிடுவதற்கேயாகும்.

இந்த நிலைமையினுள் இ.தொ.கா. அதிகாரத்துவத்துக்கு தொழிலாளர்களிடம் இருந்து கால் உதை கிடைத்திருப்பது உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மட்டும் அல்ல. புள்ளி விபரங்களின்படி 1970பதுகளின் கடைப்பகுதியில் அங்கத்தவர்களின் எண்ணிக்கை சுமார் 300,000 ஆக இருந்தது. 1987-88 பகுதியில் அங்கத்தவர் தொகை 164300 ஆக வீழ்ச்சி கண்டது. 1995 ஜூலை புள்ளி விபரங்களின்படி இ.தொ.கா. அங்கத்தவர் எண்ணிக்கை 80756 ஆக மேலும் வீழ்ச்சி கண்டது. தோட்டத் தொழிலாளர்கள் இந்த அதிகாரத்துவம் தொடர்பாக அந்தளவுக்கு தமது வெறுப்பைக் காட்டிக் கொண்டுள்ளனர். இ.தொ.கா.வை விட்டு வெளியேறிய இலட்சக் கணக்கான தொழிலாளர்கள் ஏனைய தொழிற்சங்கங்கள் பக்கம் ஈர்க்கப்பட்டு விடவில்லை. காரணம் அவர்களும் இ.தொ.கா.அதிகாரத்துவத்தில் இருந்து வேறுபடாத விதத்தில் தொழிலாளர்களைப் பலிகொடுப்பவர்கள் என்பதை அவர்கள் புரிந்து கொண்டு இருப்பதாலேயேயாகும்.

சோசலிச சமத்துவக் கட்சி தோட்டத் தொழிலாளர்களிடம் தோழமையான முறையில் கூறிக் கொள்வது இந்தக் கடைகெட்ட அதிகாரத்துவம் தொடர்பாக எதிர்ப்புக் காட்டுவது எந்த விதத்திலும் போதியதல்ல . தெளிவான முன்நோக்கும் தலைமையும் இல்லாமல் தொழிற்பட்டால் தொழிலாளர் மோசமான சங்கடங்களுக்குள் மாட்டிக் கொள்ள நேரிடும். தொழிலாளர்களுக்குத் தெளிவான வேலைத்திட்டம் இல்லாது போனதன் காரணமாக அவர்கள் பொதுஜன முன்னணி அரசாங்கத்துக்கு முன்னர் ஆட்சியில் இருந்த யூ.என்.பி.அரசாங்கத்தின் பிற்போக்காளர்கள் தோட்டத்துறையின் கணிசமான அளவு வாக்குக்களை சுரண்டிக் கொள்ள முடிந்தது.

தொண்டமானுடன் ஒரே தட்டில் சாப்பிட்டுக் கொண்டு தோட்டத் தொழிலாளர்களை பலியெடுக்க தொழிற்பட்டு வந்த செல்லச்சாமி பின்னர் பொதுஜன முன்னணிக்குள் நுழைந்து கொண்டதோடு, மீண்டும் யூ.என்.பி.க்கு முண்டு கொடுக்கவும் தொடங்கினார். இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் என்ற தமது அமைப்பினூால் யூ.என்.பி.நிறுத்திய 25 வேட்பாளர்களில் 20 வேட்பாளர்கள் வெற்றி பெறமுடிந்ததாக செல்லச்சாமி வாயடித்துக் கொள்கின்றார். தொண்டமான் போலி வேடத்தில் தொழிலாளர்களை ஏமாற்றச் சகல சக்தியையும் பயன்படுத்தப் போவதாக கூச்சலிட்டுக் கொள்ளத் தொடங்கி உள்ளார். ஆதலால் தொழிலாளர் வர்க்கம் இந்தச் சகல சக்திகளையும் தமது பயங்கர எதிரிகளாகக் கணக்கெடுத்து செயற்பட வேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களேஎ தொழிலாளர் வர்க்கத்தின் எஞ்சிய பகுதியினருக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் அவ்வாறே உங்களுக்கும் பலம் வாய்ந்த வேலைத்திட்டமும் தலைமையும் அவசியம். ஏனைய சகல இடங்களில் போலவே தோட்டத் துறையின்

(14ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com

# பொதுஜன முன்னணி -யூ.என்.பி. ஒப்பந்தம் தேசிய அரசாங்கத்துக்கான ஒரு முயற்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி

பிடுங்கிக் கொள்! தொழிலாளர்களின் உழைப்பை மனம்போன போக்கின்படி சுரண்டி, வளங்களை சூறையாடுவதற்கான நிலைமைகளை மேலும் சிருஷ்டி! முதலாளிகள் அரசாங்கத்துக்கு இந்தச் சிபார்சுகளை முன்வைக்கின்றார்கள். அனைத்துலக மூலதனத்தினைப் பரந்த அளவில் தருவித்து, சுரண்டலுடன் இணைந்து கொண்டு இலாபத்தினால் மடியை நிரப்பும் அவசியத்தினாலேயே அவர்கள் இங்ஙனம் செய்கின்றனர்.

யூ.என்.பி.அரசாங்கம் அனைத்துலக மூலதனத்தின் அவசியங்களை நிரப்பி, 17 ஆண்டுகளாக நடாத்திய கொலைகார ஆட்சிக்கு எதிராக பொதுஜன எதிர்ப்பு வளர்ச்சி காணும் நிலைமையினுள் 1994ல் பொதுஜன முன்னணி அரசாங்கத்தினை ஆட்சிக்குக் கொணர ஏகாதிபத்திய வாதிகளுக்கும் இலங்கை முதலாளிகளுக்கும் நேரிட்டது. சமசமாஜ-கம்யூனிஸ்ட்-நவசமசமாஜ- இ.தொ.கா. துரோக அமைப்புக்களதும் ஜே.வீ.பி. போன்ற குட்டி முதலாளித்துவ அமைப்புக்களதும் முண்டுகோலுடன் பொதுஜன முன்னணி அரசாங்கத்தை பாவித்து பொதுமக்களை நசுக்கி, அவர்களின் உரிமைகளை தவிடுபொடியாக்குவதும் இராணுவ-பொலிஸ் சர்வாதிகாரத்துக்கான நிலைமைகளை சிருஷ்டிப்பதும் ஆளும் வர்க்கத்தின் மூலோபாயமாகியது.

விடுதலைப் புலிகள் பொதுஜன முன்னணியை ஆட்சிக்குக் கொணர முண்டு கொடுத்ததோடு மட்டுமல்லாது, இலங்கையின் ஆளும் வர்க்கம் அந்த அமைப்பையும் பொதுஜன முன்னணியில் சேர்த்துக் கொண்டு, வடக்கு-தெற்கில் பிற்போக்கு சக்திகளை பரந்த அளவில் அணிதிரட்டும் நடவடிக்கையிலும் ஈடுபட்டது. ஏகாதிபத்தியவாதிகள் அதற்கு முண்டு கொடுத்தனர்.

## பொதுமக்கள் எதிர்ப்பு

பொதுஜன முன்னணி அரசாங்கம் யூ.என்.பி. அரசாங்கத்தினால் பூர்த்தி செய்ய முடியாது போன ஒரு தொகை தாக்குதல்களை யூ.என்.பி.யினதும் சந்தர்ப்பவாதிகளதும் ஆதரவுடன் முடித்துவைக்க முயன்றது உண்மை. ஆனால் இலங்கையின் முதலாளிகள் சிங்கள இனவாதத்தின் ஆளுமையை கையில் கொண்டு விடுதலைப் புலிகளுடன் சமரசம் செய்து கொள்ள எடுத்த முயற்சி சறுகிப் போனது. இதைத் தொடர்ந்து மீண்டும் இனவாத யுத்தம் வெடித்தது. யுத்தத்தில் ஈடுபட்டுள்ள அதே வேளையில் தனியார்மயத்தின் மூலம் தொழில், வாழ்க்கைத் தரம், சேமநலன், ஜனநாயக உரிமைகளை ஒழித்துக் கட்ட அரசாங்கம் நடாத்திவரும் தாக்குதல்களை எதிர்த்து தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்கள், மாணவர்களின் போராட்டத்துக்கு முகம் கொடுக்க நேரிட்டது.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் முக்கிய இரண்டு முதலாளித்துவக் கட்சிகளதும் வாக்குக்கள் 634000 ஆல் வீழ்ச்சி கண்டது. அவ்வாறே வாக்களிப்பைப் பகிஷ்கரித்தோர் எண்ணிக்கை 30 வீதமாகவும் செல்லுபடியற்றுப் போன வாக்குக்களின் எண்ணிக்கை 7வீதமாகவும் அதிகரித்தது. இது முதலாளித்துவக் கட்சிகளின் பேரில் மக்களிடையே வளர்ச்சி கண்டுவரும் எதிர்ப்பைக் காட்டிக் கொண்டுள்ளது. கொழும்பிலும் அயல் பிரதேசங்களிலும் மக்கள் யூ.என்.பி.க்கு வாக்களிப்பதை நிராகரித்துள்ளார்கள். அந்த விதத்தில் தமிழ் மக்கள் 1994 தேர்தலில் யுத்தத்தை நிறுத்தி சமாதானத்தை ஏற்படுத்துவதாக வாக்குறுதியளித்த பொதுஜன முன்னணி இனவாத யுத்தத்தினை தொடுத்து தம்மை மோசடி செய்ததையிட்டு கடும் கோபம் கொண்டுள்ளார்கள்.

இந்த நிலையிலேயே பொதுமக்களின் உரிமைகளைத் தாக்க ஏகாதிபத்திய சார்பு முதலாளிகளைக் கொண்ட பழைய அமைப்புக்கள் குழுறி வருகின்றன. தோட்டத் தொழிலாளர்களை கட்டுப்படுத்த பயன்படுத்தி வந்த இ.தொ.கா. இந்தத் தேர்தலில் படுதோல்வி கண்டதோடு இன்று அதன் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 1970பதுகளின் கடைப்பகுதியில் இருந்த எண்ணிக்கையின் கால்பங்குக்கும் குறைவாக வீழ்ச்சி கண்டுள்ளது. முதலாளித்துவ வர்க்கத்தினுள் குழிபறிந்து போன சமசமாஜ, கம்யூனிஸ்ட், நவசமசமாஜ கட்சிகள் பொதுமக்களின் வெறுப்புக்கு இலக்காகியுள்ளன.

இந்த நிலைமையானது இலங்கை ஆளும் வர்க்கமும் பொதுஜன முன்னணி அரசாங்கமும் என்னதான் ஜம்பம் அடித்துக் கொள்ள முயற்சித்தாலும் மிகவும் பயங்கரமான அரசியல் நெருக்கடிக்குள்ளும் அரசியல் ஈடாட்ட நிலைமைக்குள்ளும் தலைமூழ்கிப் போயுள்ளதை எடுத்துக் காட்டுகின்றது. பழைய அரசியல் இயந்திரங்களால் அரசியல் பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாத நிலைமைக்கு ஆளும் வர்க்கம் வந்துள்ளது. அனைத்துலக மூலதன இலாப உழைப்புச் சுரண்டலுக்காகவும் வளங்களின் கொள்ளைகளுக்காகவும் - சுருங்கச் சொன்னால் காலனித்துவத்தை திணிப்பதற்காக- புதிய அணிதிரள்வுக்கு செல்லுமாறு ஆளும் வர்க்கம் தள்ளப்பட்டுள்ளது. பொதுமக்களை நசுக்கித் தள்ளுவதற்கான வேலையைப் பகிர்ந்துகொண்டு, இருதரப்பு முதலாளிகள் கும்பல்களதும் மடிகளை நிரப்பிக் கொள்வதற்கு ஆளுக்காள் போட்டியிட்டுக் கொண்டுள்ளனர். முதலாளித்துவ அமைப்பைப் பாதுகாக்க செயற்பட்ட முக்கிய இரண்டு முதலாளித்துவக் கட்சிகளும் ஒரு தேசிய அரசாங்கத்தினை அமைக்கச் செய்யும் முயற்சியானது ஏகாதிபத்தியவாதிகளதும் இலங்கை முதலாளி வர்க்கத்தினதும் இந்தப் புதிய அவசியத்தை காட்டிக் கொண்டுள்ளது. தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் மீது வேறு புதிய காட்டுமிராண்டிப் பாய்ச்சல்கள் இதன் மூலம் தயாராகி வருகின்றது.

## ஏகாதிபத்தியத் தலையீடுகள்

பொதுஜன முன்னணி-யூ.என்.பி.உட்ன்படிக்கையை திணிக்க ஏகாதிபத்தியவாதிகள் தோளில் கைபோட்டுக் கொண்டு தொழிற்பட்டதற்குக் காரணம், அவர்களின் தரப்பில் இந்த எதிர்புரட்சி அணிதிரள்வினை இனியும் தாமதிக்க முடியாது போய்விட்டதேயாகும். அவ்வாறே இந்த ஏகாதிபத்திய சார்பு முதலாளித்துவக் கட்சிகள் இரண்டும் தமது கட்டளைகளை நன்கு கடைப்பிடிக்கும் என்பதை அறிந்துகொண்டேயாகும்.

பிரித்தானிய வெளிநாட்டமைச்சர் மல்கம் ரிப்கின்ட் தனிப்பட்ட விஜயமாக இலங்கைக்கு விரைந்து வந்து பொதுஜன முன்னணி, யூ.என்.பி.தலைவர்களை தனித்தனியாகச் சந்தித்தார்.

இதன்பின்னர் இலங்கையின் வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை பிரித்தானியாவுக்கு அழைத்து பேச்சுவார்த்தை நடாத்தினர். மீண்டும் பிரித்தானிய பிரதி வெளிநாட்டமைச்சர் கலாநிதி லியம் பக்ஸ் இலங்கைக்கு வருகை தந்து, பொதுஜன முன்னணி-யூ.என்.பி. தலைவர்களைச் சந்தித்து ஒரு "நல்லெண்ண சூழ்நிலையை" உருவாக்கினார்.விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகள் திரைமறைவில் நடந்தன. எனினும் இலங்கையினுள் பிற்போக்கு அணிதிரள்வு மிகவும் முக்கியமான மூன்றாம் தரப்பாக விடுதலைப் புலிகளைக் கணித்துக் கொண்டது.

ஐரோப்பாவில் உள்ள விடுதலைப் புலிகளின் தலைவர் லோரன்ஸ் திலகருடன் பிரித்தானிய வெளிநாட்டு அமைச்சின் இரகசியப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் ஏகாதிபத்தியவாதிகளின் சிபார்சுகளை சுமந்துகொண்டு அவர் பிரபாகரனை சந்திக்க இலங்கையின் வன்னி பகுதிக்கு இந்தியா ஊடாக வருகை தந்தார். பிரபாகரனின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு திரும்பிய திலகர் பிரித்தானிய வெளிநாட்டு அமைச்சு அலுவலகத்துக்கு சென்றதாக அறிக்கைகள் கூறுகின்றன. அன்டன் பாலசிங்கம் தற்சமயம் ஐரோப்பா சென்றுள்ளார். சகலவற்றின் இறுதியிலும் ஒப்பந்தத்தின் சரத்துக்களை பிரித்தானிய பிரதி வெளிநாட்டு அமைச்சர் பக்ஸ் தயார் செய்தார்.

பொதுஜன முன்னணி-யூ.என்.பி. கூட்டின் பின்னணியில் ஏகாதிபத்தியவாதிகள் ஒரே அணியில் கொண்டு நடாத்திய இராஜதந்திர சூழ்ச்சி நடவடிக்கைகள் அத்தகையதாக விளங்கின. கன்சர்வேடிவ் கட்சி அரசாங்கம் எதிர்வரும் பொதுத் தேர்தலில் வீழ்ச்சி காணும் ஒரு நிலையில் டோனி பிளேயரின் தொழிற்கட்சி அரசாங்கத்தின் வெளிநாட்டு விவகார அமைச்சராகக் கூடிய ரொபின்குக் இலங்கையில் நடாத்தும் கொடுக்கல் வாங்கல்களின் தகவல்கள் கன்சர்வேடிவ் அரசாங்கத்தினால் தெளிவுபடுத்தப்படும்.

விடுதலைப் புலிகளினால் ஒரேயடியாகக் கேட்கப்பட்டுள்ளதன்படி ஏகாதிபத்திய வாதிகளின் தலையீட்டினால் செய்யப்படும் சமரசங்களின் கரங்களைப் பற்றிக் கொள்ள சமூக ஏகாதிபத்திய தொழிற் கட்சி தலைவர் டோனி பிளேயர் உஜாராக இருப்பார். அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனால் பீ.எல்.ஓ. அமைப்புக்கும் இஸ்ரேலுக்கும் இடையே செய்து கொண்ட பிற்போக்கு ஒப்பந்தம் போல பொதுஜன முன்னணி-யூ.என்.பி.-விடுதலைப் புலிகள் இடையே ஒரு எதிர்ப்புரட்சிச் சமரசத்தினை ஸ்தாபிதம் செய்ய இவர்கள் முழு முயற்சி செய்வர் என்பது நிச்சயம்.

பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள் இலங்கையினுள் இந்த முன்னணிப் பாத்திரத்தை வகிப்பது, பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததில் இருந்து அமெரிக்க, ஐரோப்பிய மற்றும் ஏகாதிபத்திய நாடுகள் இலங்கையின் முக்கிய முதலாளித்துவக் கட்சிகளை ஒரு கூட்டுக்கு கொணர்வதற்கு நடாத்தி வந்த கயிறிளுப்பு வேலைத்திட்டத்தின் ஒரு பாகமாக ஆகும்.

ஏகாதிபத்திய அரசாங்கங்கள் இப்போது ஒரேயடியாக தமது பொதுஜன முன்னணி-யூ.என்.பி. கைக்கூலிகளின் உடன்படிக்கைக்கு கரகோஷம் செய்கின்றனர். ஏப்பிரல் 5ம் திகதி அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் விநியோகித்த அறிக்கை பின்வருமாறு குறிப்பிடுகின்றது: "பரந்த தேசிய அவசியங்களின் பேரில் கட்சிச் சார்பு அரசியல்களை ஒதுக்கிவிட ஜனாதிபதியும் எதிர்க்கட்சித் தலைவரும் காட்டியுள்ள விருப்பினை நாம் பெரிதும் மதிக்கின்றோம்." ஐரோப்பிய ஒன்றியமும் ஜப்பானிய, அவுஸ்திரேலிய அரசாங்கங்கள் வெளியிட்டுள்ள அறிக்கைகளும் இதே வார்த்தைகளையே மீள உச்சரித்துக் கொண்டுள்ளன. ஏகாதிபத்தியவாதிகள் குறிப்பிடும் "பரந்த தேசிய அவசியங்கள்" எனப்படுவது அனைத்துலக மூலதனத்தின் கொடிய சுரண்டலுக்காக இலங்கையினுள் பொதுமக்களை நசுக்குவதேயன்றி வேறொன்றும் அல்ல.

பொதுஜன முன்னணி-யூ.என்.பி.உடன்படிக்கை "இனக்குழுப் பிரச்சினையைத் தீர்க்கும் அவசியத்தினை" கொண்டது என்பது ஒரு மோசடியாகும். பின்தங்கிய நாடுகளில் முதலாளி வர்க்கத்தினால் தேசிய இனப் பிரச்சினையையும் சரி ஒடுக்கப்படும் மக்களின் வேறு ஜனநாயகப் பிரச்சினையையும் சரி உத்தரவாதம் செய்ய முடியாது என்பதை கடந்த நூற்றாண்டின் ஆரம்பம் தொடக்கம் இறுதி வரையிலுமான நிகழ்வுகள் எடுத்துக் காட்டியுள்ளன. இலங்கையின் ஆளும் வர்க்கம் குறைந்தது கடந்த அரைநூற்றாண்டு காலமாக இதை தமிழ் சிறுபான்மை தேசிய இனத்தினருக்கு எதிராக சிங்களப் பெரும்பான்மையினரின் இனவாதத்தினை தூண்டிவிட்டும் சிங்களம்-தமிழ் பேசும் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை பிளவுபடுத்தியும் இறுதியில் இனவாத யுத்தத்தின் பேரில் முழு இலங்கையும் இரத்தக் களரியாகும் ஒரு நிலைமையையும் சிருஷ்டித்ததன் மூலம் நிரூபித்தது.

இன்று இந்த ஆளும் வர்க்கம் ஏகாதிபத்திய மூலதனத்தின் பிடியை இறுக்கி, காலனித்துவத்தின் கைப்பொம்மைகளாக மாறி உள்ளது. இனவாத பிளவுகள் அதற்குப் பயன்படுத்தப்பட்ட கடைகெட்ட ஆயுதங்களாகியது. நாடு முழுவதிலும் காலனித்துவப் பிடியை இறுக்குவதற்கு முண்டு கொடுத்து வரும் ஆளும் வர்க்கம் தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகளை உத்தரவாதம் செய்யப் போகின்றதாம் என்ற கதையை விட வேறு கேவலமான ஒரு கதை இருக்க முடியுமா? அத்தோடு இனவாத, பிரிவினைவாத அடிப்படையில் நின்று கொண்டுள்ள விடுதலைப் புலிகள் அமைப்புடனோ அல்லது வேறு தமிழ் முதலாளித்துவ குழுக்களுடனோ சமரசத்துக்குச் செல்ல பொதுஜன முன்னணி-யூ.என்.பி. முதலாளிகள் தயாராகுவது சகல பிற்போக்குச் சக்திகளையும் ஒன்றுபடுத்தி, வடக்கிலும் தெற்கிலும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களையும் ஒடுக்கித் தள்ளுவதற்குத் தூண்டுவதற்கேயாகும்.

## விடுதலைப் புலிகளின் தொழிற்பாடு

ஏகாதிபத்தியவாதிகளின் கண்காணிப்பின் கீழ் பொதுஜன முன்னணி அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தைக்குச் செல்ல விடுதலைப் புலிகள் எதிர்பார்த்துள்ளனர்.யாழ்ப்பாணக் குடாநாட்டிலும் பின்னர் கிளிநொச்சி, வவுனியா, மன்னார் பகுதியிலும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்கு முடிவு கட்டப்பட்டு அவை இலங்கை இராணுவத்தின் பிடிக்குள் வந்துள்ளன. இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து, யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறிய 400000 மக்களுக்கு வன்னியில் பாதுகாப்பு வழங்குவதாக விடுதலைப் புலிகள் வழங்கிய வாக்குறுதி வெறும் மோசடியானது என்பது அம்பலமாகியுள்ள ஒரு நிலையில் மக்கள் மீண்டும் யாழ்ப்பாணம் செல்லத் தொடங்கியுள்ளனர். தமது முதலாளித்துவ தேசியவாத வேலைத் திட்டம் வங்குரோத்தடைந்து போன ஒரு நிலையில் விடுதலைப் புலிகள் ஏகாதிபத்திய வல்லரசுகளதும் ஐ.நா.வினதும் தலையீட்டினால் உருவாகும் ஒரு சமரசத்துக்காக வாதிடத் தொடங்கி உள்ளனர்.

பொதுஜன முன்னணி-யூ.என்.பி. உடன்படிக்கை வெளியான வேளையில் ஐரோப்பாவில் விடுதலைப் புலிகள் இயக்கப் பேச்சாளரான அன்டன் ராஜா தாம் மீண்டும் "அனைத்துலக தலையீட்டை" பற்றி "வலியுறுத்துவதாக" குறிப்பிட்டார். விடுதலைப் புலிகள் ஏகாதிபத்தியவாதிகளின் கைக்கூலி நிலைமைக்கு பரிணாமம் கண்டுவிட்டது. ஒன்றில் ஏகாதிபத்திய வாதிகளின் ஆதரவுடன் தனி அரசு ! இல்லையேல் அவர்களின் தலையீட்டின் கீழான சமரசம் ! விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு இதுதான். ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் சுரண்டலுக்காக தமிழ் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை விற்றுத்தள்ளுவதற்கு காத்துள்ள இந்தப் பிற்போக்கு அமைப்புக்களில் இருந்தும் எஞ்சிய தமிழ் முதலாளித்துவ கட்சிகளிடம் இருந்தும் தமிழ் மக்களுக்கு கிடைக்கப் போவது விடுதலை அல்ல காலனித்துவ ஒடுக்குமுறையே.

சகல ஏகாதிபத்தியக் கைக்கூலிகளும் இந்திய முதலாளித்துவ ஆட்சியாளர்களும் இலங்கையில் இருக்கும் சகல முதலாளித்துவக் கட்சிகளும் பொதுஜனத் தொடர்புச் சாதனங்களும் பொதுஜன முன்னணி-யூ.என்.பி.கூட்டை பொதுமக்களுக்கு உள்ள ஒரே மார்க்கமாக காட்டும் காதடைக்கும் பிரச்சாரங்களில் ஈடுபட்டுள்ளனர்.இந்தப் பிரச்சாரங்களால் ஏமாந்து போகாது பிற்போக்கு சக்திகள் தேசிய அரசாங்கத்தினுள் புகுந்து கொண்டு தமக்கு தொடுக்கப் போகும் தாக்குதலையிட்டு தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்கள் விழிப்படைய வேண்டும்.

தேசிய அரசாங்கத்தின் வடிவத்தை

www.padippakam.com

சிருஷ்டிப்பதிலும் அரச இயந்திரத்தினை பலப்படுத்துவதிலும் பொதுஜன முன்னணி-யு.என்.பி.கூட்டு உடன்படிக்கை வெளிவரும் ஒரு நிலையிலும் இந்தக் கட்சிகளின் பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் கலந்துரையாடி அரசியலமைப்பு சீர்திருத்த பிரேரணைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதில் ஒரு பிரேரணை புதிய அரசியலமைப்பு சீர்திருத்தத்தின் கீழ் அமைக்கப்படும் பிராந்திய சபைகளின் நிர்வாகத்தினை சகல கட்சிகளதும் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு நிறைவேற்றுக் குழுவிடம் கையளிக்க வேண்டும் என்பதாகும். இந்தச் சீர்திருத்தங்களின் ஒரு பாகமாக அரசின் உயர் மட்டங்களின் செயற்பாட்டுக்காக பிரதமர், சபாநாயகர், எதிர்க்கட்சித் தலைவர், ஏழு பாராளுமன்ற உறுப்பினர்கள் இரண்டு ஓய்வுபெற்ற நீதியரசர்களை உள்ளடக்கிய அரசியலமைப்புச் சபை அமைக்கப்படும். இதனை கடந்த ஏப்பிரல் 17ம் திகதி நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அரசியலமைப்பு, நீதி அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார். "அரசியலில் உள்ள உயர் மட்டத்தில் துருவப்படுத்தலை ஒழித்து" "சகல கட்சிகளதும் நிஜ இயந்திரத்தினை அமைத்தல்" இந்தச் சபையை அமைப்பதன் எதிர்பார்ப்பு ஆகும் என அவர் தெரிவித்துள்ளார்.

## தாக்குதலின் நிகழ்ச்சி நிரல்

இதற்கிடையே பொதுஜன முன்னணி - யூ.என்.பி.ஒப்பந்தத்தினை அதன் நிச இலக்கை நோக்கி விரைவாக முன்னெடுக்குமாறு முதலாளித்துவ வர்க்கம் நெருக்கத் தொடங்கியுள்ளது. ஏப்பிரல் 20ம் திகதி 'சன்டே டைம்ஸ்' முதலாளித்துவ பத்திரிகை வர்த்தக பகுதி ஆசிரியத் தலையங்கத்தில் பின்வருமாறு குறிப்பிட்டது: " இனக்குழு பிரச்சினை தொடர்பாக இருதரப்பு உடன்படிக்கையை உருவாக்கிக் கொள்ள அரசாங்கமும் முக்கிய எதிர்க் கட்சியான யூ.என்.பி.யும் இணங்கியதை வர்த்தகர்களும் உண்மையில் நாட்டின் அபிவிருத்தியையிட்டு அக்கறை காட்டும் சகலரும் வரவேற்றுள்ளனர்...

"கல்வி சீர்திருத்தம், சுகாதார திட்டம், பரந்த அபிவிருத்தி திட்டம், நிறுவன அபிவிருத்திகள் தொடர்பாக அரசாங்கமும் எதிர்க் கட்சியும் ஒன்றிணையுமானால் நாடு அடையக்கூடிய இன்னுமொரு நலன் உண்டு . அப்போது நாடு மிகவும் வேகமாக முன்னேற்றத்தை நோக்கிச் செல்ல முடியும்..." முதலாளித்துவ வர்க்கம் அப்பட்டமாகக் கூறுவது இதுதான்: இலவசக் கல்வியினதும் இலவச சுகாதார சேவையினதும் மிச்சசொச்சங்களை வெட்டித் தள்ளி, காட்டுமிராண்டி சுரண்டலிற்கான நிலைமைகளை சிருஷ்டிக்க உகந்த அரச நிறுவன அமைப்பினை கட்டியெழுப்ப இரண்டு முதலாளித்துவ கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதாகும். இந்த முதலாளிகள் குறிப்பிட்டுக் கொள்ளும் "முன்னேற்றம்" அனைத்துலக மூலதனத்தினதும் அதனுடன் பிணைக்கப்பட்ட இலங்கை முதலாளிகளினதும் முன்னேற்றமேயாகும். அது சகல பொதுஜனங்களையும் ஆபத்தில் மாட்டிவைக்கும்.

தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை எலும்புக் கூடு வரை சுரண்டும் பொருட்டு போட்டியிடும் கொழும்பு பங்குமுதல் சந்தையின் உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பொதுஜன முன்னணி - யூ.என்.பி. கூட்டு உடன்படிக்கையால் உத்சாகம் அடைந்துள்ளனர். இந்த ஒப்பந்தம் கைச்சாத்தான ஒரு சில நாட்களுக்குள் கொழும்பு பங்கு முதல் சந்தை பங்குகளதும் விலைச் சுட்டெண்கள் 81 புள்ளிகளால் அல்லது நூற்றுக்கு 25 வீதத்தினால் அதிகரித்தமை இதைக் காட்டுகின்றது.

இருதரப்பு உடன்படிக்கை பற்றிய கூச்சலின் பின்னணியில் ஜனாதிபதியின் ஆலோசகரான கலாநிதி.லால் ஜயவர்தன நாட்டின் "உயர்ந்த சமூகசேவை செலவினங்களையும்" அதிகரிக்கும் அரசாங்க ஓய்வூதிய செலவையும் வயோதிபர் பராமரிப்புச் சுமையையும் ஒழிப்பதற்கான வழியையும் தேட வேண்டும் என்றுள்ளார். (சன்டே டைம்ஸ் -1997ஏப்பிரல் 13) தோட்டக் கம்பனிகாரர்கள் சம்பளம், தொழில் வெட்டுக்களையும் வேலைத் துரிதப்படுத்தலையும் மனம்போனபடி செய்வதன் அவசியத்தை வெளியிட்டுள்ளார். இதற்கிடையே ஏழை விவசாயிகளை இராட்சத கம்பனிகளின் அடிமைச் சேவைக்கு இட்டுச் செல்லும் திட்டமும் வெளியாகி உள்ளது. கமத்தொழில் திணைக்களத்தின் செயலாளர் "வாழ்க்கை மட்டத்தில் விவசாயம் முற்றுப் பெறவேண்டும்-நெல் பயிர்ச் செய்கையை இலாபகரமான ஒரு இலக்காக்க வேண்டும்" என ஏப்ரல் 16ம் திகதிய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார். இலவசக் கல்வி முறையை ஒழித்து ட்ரான்ஸ்நஷனல் கம்பனிகளின் சுரண்டலுக்கு திட்டவட்டமாகச் சேவைசெய்யும் மட்டத்துக்கு கல்வியைத் தரம் இறக்கவும் கட்டண முறையைப் புகுத்தவும் திட்டம் அரசாங்கத்தின் கரங்களில் உள்ளது. எஞ்சியுள்ள அரச நிறுவனங்களையும் உள்நாட்டு, வெளிநாட்டு முதலாளிகளுக்கு கொள்ளை இலாபத்துக்கு விற்றுத் தள்ளவும் அரசாங்கம் தயாராகி வருகின்றது. வறுமையின் பிடிக்குள் தள்ளப்பட்டுள்ள மக்களின் உழைப்பை இரண்டு துட்டுக்கு கொள்ளையடிக்கும் நிலைமைகளை உருவாக்கவும் வெளிநாட்டு முதலீடுகளைத் தருவிப்பதற்குமான ஆளும் வர்க்கத்தின் நனவான திட்டங்களாக இவை இருந்து கொண்டுள்ளன.

இந்தத் தாக்குதல்களுக்கு எதிராக கிளர்ந்து எழுந்து வரும் தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்கள் , இளைஞர்களை நசுக்குவதற்கு சகல பிற்போக்கு சக்திகளும் ஒன்றுபட உள்ளன. பொதுஜன முன்னணி-யூ.என்.பி. இருதரப்பு உடன்படிக்கையின் பின்னால் உள்ள நச்சுத்தனமான நிகழ்ச்சி நிரல் இதுதான்.

## ஏகாதிபத்திய நெருக்கடி

இலங்கை முதலாளி வர்க்கம் தூண்டிவிட்டுவரும் இந்த மிலேச்ச திட்டங்களின் ஊற்றுவாயாக ஏகாதிபத்திய நெருக்கடி இருந்து கொண்டுள்ளது. ஏகாதிபத்திய ஆளும் வர்க்கங்கள் உலகளாவிய ரீதியில் இலாபப் பொதியை சுரண்டிக் கொள்வதற்கு சண்டையிட்டுக் கொள்கின்றன.அதன் உள்ளார்ந்த பாகமாக தத்தம் நாடுகளின் தொழிலாளர்களின் உரிமைகளைத் துவம்சம் செய்வது விளங்குகின்றது. அத்தோடு பின்தங்கிய நாடுகளின் முதலாளிகளை கழுத்தில் பிடித்து அந்நாடுகளின் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை அங்கவீனர்களாக்கித் தள்ளும் சுரண்டலில் ஈடுபடும் நிலைமைகளையும் உருவாக்கிக் கொள்கின்றார்கள். அமெரிக்காவில் பில்கிளின்னின் ஜனநாயகக் கட்சி அரசாங்கம் குடியரசுக் கட்சியுடன் சேர்ந்து தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்து, சம்பள வெட்டைப் பலவந்தமாகத் திணிக்கவும் நலன்புரி சேவைகளை வெட்டவும் வேலைத் திட்டங்களையும் முன்னெடுக்கின்றனர். சயிரேயில் சீ.ஐ.ஏ.கைப்பொம்மையான மொபூட்டு ஆட்சி இன்று வெறுப்புக்கு இலக்காகி உள்ள ஒரு நிலைமையில் ஜே.வீ.பி.போன்ற மற்றொரு முதலாளித்துவ கும்பலின் தலைவரும் றோஹண விஜேவீர போல் சே குவேராவை தலைமேல் வைத்துக் கொண்டாடியவருமான லோரன்ஸ் கபலா என்ற இராணுவத் தலைவருக்கு உத்வேகம் அளிப்பவர்கள் அமெரிக்க ஏகாதிபத்திய கம்பனிக்காரர்களே. இலங்கையில் முதலாளி வர்க்க ஆட்சி நெருக்கடிக்குள் தள்ளப்படும் ஒரு நிலைமையில் அதைப் பாதுகாக்கும் பொருட்டு முதலாளி வர்க்கத்தின் இரண்டு முக்கிய கட்சிகளும் ஒன்றிணைந்த ஒரு சந்தர்ப்பம் 1971 ஏப்பிரல் கிளர்ச்சி காலகட்டமாகும். அது சுமார் 30000 இளைஞர்களை படுகொலை செய்ததோடு இன்னும் பல்லாயிரக் கணக்கானோரை சிறைக்குள் தள்ளியதோடு முற்றுப்பெற்றது. இவை இடம்பெற்றது கூட்டரசாங்கத்தின் கீழ் நடைமுறையில் இருந்து வந்த அவசரகாலச் சட்ட சர்வாதிகார ஆட்சியின் கீழாகும்.

1980பதுகளின் கடைப்பகுதியில் யூ.என்.பி. ஆட்சியின் நெருக்கடி உக்கிரமான நிலைமையின் கீழ் 1987ல் இலங்கையின் முதலாளிகள் இந்திய ஆக்கிரமிப்பு இராணுவத்தை தருவித்து, வடக்கிலும் தெற்கிலும் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான இளைஞர்களை படுகொலைக்கு உள்ளாக்கியது.

இன்று மீண்டும் புதிய மட்டத்துக்கு முதலாளி வர்க்க நெருக்கடி உச்சக் கட்டத்தை அடைந்துள்ள ஒரு நிலைமையிலேயே ஆளும் வர்க்கம் மற்றுமோர் பிற்போக்கு கூட்டுக்கு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தக் கூட்டுக்கு சமசமாஜ-ஸ்டானிச கட்சிகளின் எதிர்ப்புரட்சி ஆதரவு கிடைத்துள்ளது. ஸ்டாலினிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரான டியூ குணசேகர இருதரப்பு உடன்படிக்கை மூலம் "தீவிரவாதிகளை ஓரங்கட்ட முடியும் " என ஜம்பம் அடித்துள்ளார். இவ்விரு கட்சிகளதும் நிலைப்பாடு ஏனைய சகல சந்தர்ப்பவாதிகளதும் நிலைப்பாட்டை தெளிவுபடுத்துகின்றது. இருதரப்பு உடன்படிக்கைக்கும் அதன் கீழ்த் தொடுக்கப்பட்டுள்ள தாக்குதல்களுக்கும் எதிராகக் கிளர்ந்து எழும் தொழிலாளர்களையும விவசாயிகளையும் தமிழ் ஒடுக்கப்படும் மக்களையும் இளைஞர்களையும் "தீவிரவாதிகள்"எனச் சேறடித்து வேட்டையாடுவதற்கு இத்துரோகிகள் ஆயத்தமாகி வருகின்றார்கள்.

ஜே.வீ.பி.யின் செயலாளர் ரில்வின் சில்வா கடந்த ஏப்பிரல் 6 ஞாயிற்றுக்கிழமை ஐலன்ட் பத்திரிகைக்கு அளித்த ஒரு பேட்டியில் பொதுஜன முன்னணியும்-யூ.என்.பி.யும் உடன்படிக்கை செய்து கொள்ள உள்ள உரிமையை அங்கீகரிப்பதாகவும் எனினும் யூ.என்.பி.யை நம்ப முடியாது எனவும் குறிப்பிட்டுள்ளார். உள்ளூராட்சி சபை தேர்தல் காலத்தில் அமெரிக்க தூதரகத்தினுள் நுழைந்த இந்த பிற்போக்கு அமைப்பு, "நவீன தொழில் நுட்பங்களை தருவிக்கும்" பேரில் வாயில் நீர் ஊற வைத்துள்ளார்கள். இலங்கை முதலாளிகளின் பிற்போக்கு கூட்டுக்கு ஒரு பாசிச ஊன்றுகோல் என்ற விதத்தில் விடுதலைப் புலிகளைப் போல் இவர்களும் ஒத்துழைப்பு வழங்கத் தயாராக உள்ளனர்.

இந்தச் சகல அபிவிருத்திகளும் நெருக்கடியின் நிழலாட்டமானது இலங்கை முதலாளி வர்க்கத்தை படுமோசமான பிற்போக்கு தலைமையை பெற்றுக் கொள்ள முயற்சித்துக் கொண்டுள்ளதைக் காட்டியுள்ளது. முதலாளித்துவ கையாட்களின் "சக்தி"யாக மாறியுள்ளது தொழிலாளர் வர்க்கத்தினுள் நிலவும் அரசியல் பலவீனமேயாகும். அது முன்நோக்கும் தலைமையும் இல்லாததால் உருவான ஒரு பலவீனமே தவிர தொழிலாளர் வர்க்கத்தின் ஒரு நிஜ நிலைமை அல்ல. தொழிலாளர் வர்க்கத்தின் தீர்க்கமான போராட்டங்கள் வெடிப்பதையிட்டே ஆளும் வர்க்கம் இடைவிடாத பீதிக்கு உள்ளாகியுள்ளது. தமது எதிரில் உள்ள சகல ஆபத்துக்களையும் புரிந்து கொண்டு தொழிலாளர் வர்க்கம், ஏனைய ஒடுக்கப்படும் மக்களின் தலைமையை பொறுப்பேற்று, முதலாளி வர்க்கத்தின் எதிர்ப்புரட்சி மூலோபாயத்துக்கு எதிராக தனது தொழிலாளர் வர்க்க மூலோபாயத்தினால் ஆயுத பாணியாக்க வேண்டும் என சோசலிச சமத்துவக் கட்சி கூறுகின்றது.

உலக ஏகாதிபத்திய சக்திகள் இலங்கையில் உள்ள தமது கையாட்களை கொண்டு உலகளாவிய ரீதியில் முன்னெடுக்கும் எதிர்ப்புரட்சி வேலைத் திட்டத்தின் ஒரு பாகமாக இலங்கையில் கைபோட்டுக் கொண்டுள்ள பாணியை பொதுஜன முன்னணி-யூ.என்.பி. இருதரப்பு உடன்படிக்கை மீண்டும் ஒருமுறை சக்திவாய்ந்த முறையில் வெளிக் கொணர்ந்துள்ளது.

சகல வர்க்க சமரசக்காரர்களும் தீவிரவாதிகளும் தேசிய ரீதியில் தோன்றும் பிரச்சினைக்கு தேசிய ரீதியில் தீர்வு தேடவேண்டும் எனக் கூறிக்கொண்டு அணிதிரள்கின்றார்கள். உண்மையில் இவர்கள் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளின் பின்னாலேயே அணிதிரள்கின்றனர். இந்தச் சகல தேசியவாதிகளும் இந்த உலக ஏகாதிபத்தியவாதிகளின் நூலிழையை பிடித்துக் கொண்டே செயற்பட்டு வருகின்றார்கள். ஏகாதிபத்தியத்துக்கும் அதன் காலனித்துவ வேலைத் திட்டத்துக்கும் எதிராக அனைத்துலக தொழிலாளர் வர்க்கம் ஒன்றிணைந்து அனைத்துலக சோசலிசத்துக்குச் செய்யும் போராட்டத்தின் ஊடாக மட்டுமே இலங்கையிலாகட்டும் அல்லது வேறு எந்த ஒரு நாட்டில் ஆகட்டும் தொழிலாளர் வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் முதலாளித்துவ பேரழிவுகளில் இருந்து மீட்சி பெறுவதற்கான மார்க்கம் இருந்து கொண்டுள்ளது. இப்போராட்டத்தில் நெருக்கடிக்குள் புதையுண்டு போன முதலாளித்துவ ஆட்சியின் கீழ் நசுங்குண்டு வரும் இந்தியத் துணைக்கண்ட தொழிலாளர் வர்க்க, ஒடுக்கப்படும் மக்களுடன் இணைந்து முதலாளித்துவப் பிற்போக்கு ஆளும் வர்க்கங்களுக்கு எதிரான போராட்டத்தை அபிவிருத்தி செய்யும பொருட்டு சோசலிச சமத்துவக் கட்சி முன்வைத்துள்ள வேலைத் திட்டத்தின் நடைமுறை அவசியம் இந்நாட்டு முதலாளித்துவ, பிற்போக்கு சக்திகளின் புதிய அணிதிரள்வின் மூலம் மீண்டும் ருசுப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழ் ஒடுக்கப்படும் மக்களுக்கு தமக்கெனத் தனியான ஒரு தேசியவாத விடுதலைப் பாதை கிடையாது எனவும் பிரிவினைவாதம் அவர்களின் குரல்வளை புதையுண்டு போகச் செய்யும் படுகுழி எனவும் சோசலிச சமத்துவக் கட்சி சுட்டிக் காட்டியது. தமிழ், சிங்களம் பேசும் தொழிலாளர் வர்க்கம் ஒன்றிணைந்து, ஏனைய ஒடுக்கப்படும் மக்களை தம்மைச் சூழ ஒன்றிணைத்து, சிங்கள முதலாளி வர்க்கத்தினை முன்னணியில் கொண்ட வர்க்க ஆட்சியை ஒழிப்பதும் விடுதலைப் புலிகளின் பிரிவினைவாத பிடியை உடைத்து எறிவதும் சிறீலங்கா-ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தினுள் கொணர்வதே இனவாத யுத்தத்துக்கு முடிவு கட்டுவதற்கும் சமாதானத்தை உருவாக்குவதற்கும் சமூக சமத்துவத்தை ஸ்தாபிதம் செய்வதற்கும் உள்ள ஒரே வழியாகும். ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களின் பிடியின் கீழ் பொருளாத[illegible] பூகோளமயமாக்கமானது மக்களின் சகல பிரிவினருக்கும கொணர்வது பேரழிவும் காட்டுமிராண்டித்தனமுமேயாகும். இதன் மூலம் பெரும் நலன் பெறுவது ஏகாதிபத்தியவாதிகளும் அவர்களுடன் இணைந்த முதலாளிகளுமே. முதலாளித்துவ பூகோளமயமாக்கத்துக்கு எதிராக அனைத்துலக சோசலிசம்! உலகளாவிய தொழிலாளர் வர்க்க ஆட்சியின் பொருளாதாரத்தை திட்டமிட்டு சமூக நீதி! இந்தப் போராட்டத்தின் ஒரு பாகமாக ஏகாதிபத்தியவாதிகளும் ஏகாதிபத்தியச் சார்பு முதலாளிகளும் தூண்டிவிட்டுவரும் தாக்குதல்களுக்கும் ஏதிராக இந்நாட்டினுள் சோசலிச வேலைத்திட்டத்தினை நடைமுறைக்கிடும் தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கம்-சிறீலங்கா-ஈழம் சோசலிச குடியரசு!

ஆளும் வர்க்கத்தின் புதிய பிற்போக்கு அணிதிரள்வும் ஏகாதிபத்தியவாதிகளின் தலையீடும் இந்த வேலைத்திட்டத்துக்கான போராட்டத்தின் அவசியத்தினை தோற்றுவித்துள்ளது. அந்த வேலைத் திட்டத்தினையும் தலைமையையும் உருவாக்கும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் இலங்கைப் பகுதியான சோசலிச சமத்துவக் கட்சியைக் கட்டியெழுப்ப போராடுவோம். ஆளும் வர்க்கத்தின் மிலேச்சத் தாக்குதல்களுக்கு எதிராக நிச்சயம் போராட்டத்தினுள் தள்ளப்பட்டுள்ள தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்கள், இளைஞர்களுக்கு அவசியமான கட்சி அதுவே.

× பொதுஜன முன்னணி -யூ.என்.பி. பிற்போக்கு அணிதிரள்வு ஒழிக!

× சோசலிச சமத்துவக் கட்சியை கட்டியெழுப்பு!

× சிறீலங்கா-ஈழம் சோசலிச குடியரசை நோக்கி முன்னேறு!

படிப்பகம்

www.padippakam.com

# ஜேர்மன் ட்ரொட்ஸ்கிஸ்டுகள் சோசலிச சமத்துவ கட்சியை நிறுவினர்

நான்காம் அகிலத்தின் ஜேர்மன் பகுதியான பண்ட் சோசலிஸ்ட் ஆர்பைட்டர் அமைப்பின் அங்கத்தவர்கள் கடந்த மார்ச் 28-31ம் திகதிகளில் டாம்ஸ்டாட்டில் நடாத்திய தேசிய மகாநாட்டில் சோசலிச சமத்துவக் கட்சியை அமைக்க ஏகமனதாக தீர்மானம் செய்தனர். இந்தத் தீர்மானம் அனைத்துலகப் பொருளாதார, அரசியல் நெருக்கடியையும் ஜேர்மன், ஐரோப்பா தொடர்பான அதன் தாக்கங்களையும் கலந்துரையாடிய மூன்று நாள் மகாநாட்டின் இறுதியில் எடுக்கப்பட்டது.

நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் செயலாளர் பீட்டர் சுவார்ட்ஸ் மாநாட்டின் ஆரம்ப அரசியல் அறிக்கையை வழங்கினார். அமெரிக்க ஐக்கிய அரசுகள், அவுஸ்திரேலியா, பிரித்தானியா, இலங்கை முதலிய நாடுகளில் சோசலிச சமத்துவக் கட்சி அமைக்கப்பட்டதன் பின்னர் ஜேர்மனியில் சோசலிச சமத்துவக் கட்சி அமைக்கப்படுவது ஜேர்மன் பகுதியின் மட்டுமல்லாது முழு நான்காம் அகிலத்தின் வரலாற்றிலும் ஒரு புதிய சகாப்தத்தை ஆரம்பித்து வைத்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

சுவார்ட்ஸ் தமது அரசியல் அறிக்கையில் மேலும் கூறியதாவது: 1938ல் நான்காம் அகிலம் அமைக்கப்பட்டமை சமூக ஜனநாயக, ஸ்டாலினிச கட்சிகளது சீரழிவினாலும் காட்டிக் கொடுப்பினாலும் நிர்மாணிக் கப்பட்ட வரலாற்றினுள் தொழிலாளர் வர்க்கம் அனுபவித்த பிரமாண்டமான தோல்விகளுக்கு அவசியமான பதிலாகியது. யுத்தத்தினதும் பாசிசத்தினதும் நிலைமைகளின் கீழ் இந்தத் தோல்விகளின் தாக்கங்கள் தொழிலாளர் வர்க்கத்தின் சிந்தனையினுள் பிரதிபலித்ததால் அவற்றை திட்டவட்டமான முறையில் வெற்றி கொள்வது முடியாததாகியது. சமூக ஜனநாயக, ஸ்டாலினிச அதிகாரத்துவங் களுக்கான புதியதொரு பொருளாதார அடிப்படையையும் சிருஷ்டித்தது.

1970பதுகளிலும் சிறப்பாக 1980பதுகளிலும் இந்தப் பொருளாதார அடிப்படை வீழ்ச்சி காண ஆரம்பித்தது. உற்பத்தியின் பூகோள மயமாக்கம் சமூக ஜனநாயகத்தினதும் ஸ்டாலினிசத்தினதும் தேசிய ரீதியிலான வேலைத்திட்டங்களுக்கு குழிபறித்தது. சோவியத் யூனியனின் வீழ்ச்சி இந்தக் காரணத்தின் அப்பட்டமான வெள்ப்பாடாகியது.

உற்பத்தியின் பூகோளமயமாக்கத்தில் இருந்து பெருக்கெடுக்கும் இறுதி முடிவு என்னவெனில் வர்க்கப் போரராட்டத்தின் புதிய வெகுஜனக் கட்சி உலக அமைப்பின்- நான்காம் அகிலத்தின் வடிவத்தினுள் இருந்து மட்டுமே தோன்ற முடியும் என்பதாகும். இதை முடிவுரையாகக் கொண்டு சுவார்ட்ஸ் தமது அரசியல் அறிக்கையை நிறைவுசெய்தார்.

புதிய கட்சியை அமைக்கும் முன்னோக்குப் பிரேரணை அதன் நோக்கங்களையும் வரலாற்று அடிப்படையையும் பின்வருமாறு குறிப்பிடுகின்றது: சமூக சமத்துவம் என்ற பெயர் கட்சியின் அடிப்படை நோக்குகளை விளக்குகின்றது. இது இன்றைய சமூக அபிவிருத்திகளைச் சமரசம் செய்ய முடியாத எதிரியாகும். அது ஒரு புறத்தில் சனத்தொகையில் பெரும் பங்கினரிடையே வளர்ச்சி கண்டு வரும் வறுமையின் மூலமும் மறுபுறத்தில் சிறுபான்மையினர் இடையேயான அளப்பரிய செல்வப் பெருக்கினாலும் புலப்பட்டுள்ளது.

கட்சி சோசலிச இயக்கத்தின் நிச இலக்குகளுக்காகப் போராடுகின்றது. வர்க்க வேறுபாடுகள் அற்ற மக்களிடையே நிஜ சமத்துவத்தை அடிப்படையாகக் கொண்ட சமுதாயத்துக்காகப் போராடுகின்றது.

சமீப காலங்களில் உலகளாவிய ரீதியில் சமத்துவமின்மையில் ஏற்பட்டுள்ள பிரமாண்டமான வளர்ச்சியை ஆய்வுக்குள்ளாக்கும் ஜேர்மன் சோ.ச.க. முன்னோக்கு பின்வருமாறு குறிப்படுகிறது: "ஜேர்மனியினுள் நிலைமை மாறுபட்டது அல்ல. சுயதொழில்களில் ஈடுபட்டுள்ளவர் களின் செலவிடப்படாத வருமானம் 1980ல் இருந்து இன்று வரை 52 வீதத்தினால் அதிகரித்துள்ளதோடு அக்காலப் பகுதியினுள் தொழிலாளர்களதும் அலுவலக ஊழியர்களதும் சிவில் ஊழியர்களதும் வேலையற்றவர்களதும் வருமானம் 10வீதத்தினால் வீழ்ச்சி கண்டுள்ளது. அதே சமயம் குடியிருப்பாளர்களில் செல்வந்தர் களான 10 வீதத்தினர் சகல தேசிய செல்வத்தில் சரி அரைப் பங்கினை உடமையாக்கிக் கொண்டுள்ளனர். ஆனால் ஒவ்வொரு குழந்தைகள் எட்டு பேருக்கும் ஒருவர் வறுமையிலேயே வளர்கின்றனர். பழைய கிழக்கு ஜேர்மனியினுள் இது ஒவ்வொரு 4 குழந்தைக்கும் ஒருவராக உள்ளது.


இன்றுள்ள சகல அரசியல் கட்சிகளும் ஒரே கோரிக்கையை முன்வைப்பதாகப் பத்திரம் குறிப்பிடுகின்றது. இலட்சோப இலட்சம் வாக்காளர்களுக்கு ஒரு பாதுகாப்பு வலையாக உள்ள சமூகத் தேட்டங்கள் ஒழிக்கப்பட வேண்டும். யுத்தத்தின் பின்னைய பொருளாதார சேழிப்புக் காலத்தின் உச்சக் கட்டத்தில் கன்சர்வேட்டிவ் வட்டாரங்களில் கூட சமூக சீர்திருத்தங்களுக்கான கோரிக்கை பொதுவாகக் காணப்பட்டது. இன்று சமூக சமத்துவமின்மை மகத்துவமானதாகத் தூக்கிக் காட்டப்படுகின்றது.

"சீர்திருத்தம்" என்ற பதம் கூட அதன் நேரிடையாக மாற்றப்பட்டுள்ளது. இது தொடர்ந்தும் சமூக அபிவிருத்தியை அல்லாது சமூக வீழ்ச்சியை குறிக்கின்றது. "ஓய்வூதியம் சீர்திருத்தம்" என்பது வயோதிபர்கள் பராமரிப்புக்கான சாத்தியத்தினை நாசமாக்குவதாக உள்ளது. "சுகாதார சீர்திருத்தம்" என்பது நோயால் பீடிக்கப்பட்ட போதான கண்காணிப்பு உரிமையை நாசமாக்குவதாக உள்ளது. ஊகக்காரர்களும் பங்குமுதல் சந்தை சூதாட்டக்காரர்களும் 'சமூக சாதனை யாளர்கள்' என அழைக்கப்படுகின்றனர். அதே சமயம் வேலையற்றோர் சமூக ஒட்டுண்ணிகள் என திட்டப்படுகின்றனர்.

சோசலிச சமத்துவக் கட்சியின் முன்நோக்குப் பத்திரம் இவை பற்றிக் குறிப்பிடுகையில் கூறுவதாவது: சோசலிச சமத்துவக் கட்சியின் ஸ்தாபிதம் உத்தியோகபூர்வமான தொழிலாளர் இயக்கத்தின் அரசியல் வங்குரோத்திற்கான புண்ட் சோசலிஸ்ட் ஆர்பைட்டர் வழங்கும் பதிலாகும். இன்று சமூக ஜனநாயகக் கட்சியும் தொழிற் சங்கங்களும் தொழிலாளர் வர்க்கத்தின் அப்பட்டமான எதிரிகளாகி விட்டன. வாக்காளர்களும் அங்கத்தவர்களும் இவற்றைவிட்டு விலகி வருகின்றனர். மிகவும் குறைந்தபட்சக் கோரிக்கைகளும் கூட தொழிலாளர் வர்க்கத்துக்கு ஒரு புதிய கட்சியினால் மட்டுமே தீர்த்து வைக்கப்பட முடியும் என்பதை தோற்றுவித்துள்ளது. அத்தகைய ஒரு கட்சி பழையதும் அரசியல் ரீதியில் வங்குரோத்தடைந்ததுமான அமைப்புக்களின் அழிபாடுகளில் இருந்து தோன்ற முடியாது. நான்காம் அகிலத்தின் வருலாற்று ரீதியில் அபிவிருத்தி செய்யப்பட்ட வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அரசியல் ரீதியில் முன்னேற்றமான தொழிலாளர்களை ஒருங்கிணைப்பதன் மூலமே இதைச் சாதிக்க முடியும். எனவேதான பீ.எஸ்.ஏ. இந்தக் கட்சியை அமைக்கும் பணியை ஆரம்பித்து வைத்துள்ளது.

சோசலிச சமத்துவக் கட்சி சமூக செலவினங்களிலான வெட்டுக்களுக்கும் வேலைநீக்கங்களுக்கும் எதிரான போராட்டத்தில் ஐரோப்பியத் தொழிலாளர்களின் நெருக்கமான தொழிற்பாட்டுக்கும் அழைப்பு விடுக்கினறது. அதன் நோக்கம் ஒரு ஐக்கிய சோசலிச ஐரோப்பாவை அமைப்பதே." என்கின்றது. இறுதியில் முன்நோக்கு நான்காம் அகிலத்துக்கு போராட்டத்துக்கான ஒரு புதிய சகாப்தம் பிறந்துள்ளதையும் ஊர்ஜிதம் செய்கின்றது.

# அனைத்துலகக் குழுவின் பகுதிகள் 'இன்டர்நெட்' முறையில்




நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் அமெரிக்க ஐக்கிய அரசுகள், அவுஸ்திரேலியா, பிரித்தானியா முதலான நாடுகளின் சோசலிச சமத்துவக் கட்சிகள் 'இன்டர்நெட்' முறையில் இணைந்துகொண்டுள்ள தகவலை அறிவிப்பதில் இலங்கையின் சோசலிச சமத்துவக் கட்சியும் தொழிலாளர் பாதை, கம்கறு மாவத்த பத்திரிகைகளும் பெரு மகிழ்ச்சி அடைகின்றன.

கடந்த காலத்தில் பிரமாண்டமான செலவினப் பிரச்சினை காரணமாக ட்ரொட்ஸ்கிச இயக்கத்துக்கு வானொலி, தொலைக்காட்சி போன்ற பொதுஜனத் தொடர்புச் சாதனங்களில் நுழைவதற்கான வசதிகள் இல்லாதிருந்தன. கணனி முறையிலும் தொடர்புச் சாதன தொழில்நுட்பங்களிலும் ஏற்பட்டுள்ள புரட்சிகரமான அபிவிருத்திகள் காரணமாக அனைத்துலக தொடர்புச் சாதனங்கள் மீது இராட்சத ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களுக்கு இருந்து வந்த ஏகபோகங்கள் ஒழிந்து போய்விட்டது.

இன்றைய கணக்கீடுகளின்படி உலகளாவிய ரீதியில் நான்கு கோடிகளுக்கு அதிகமான மக்கள் இன்டர்நெட் முறையை பாவிப்பதாகவும் தொடர்புச் சாதன போக்குவரத்து ஆண்டொன்றுக்கு நூற்றுக்கு 300 வீதத்தினால் அதிகரித்துச் செல்வதாகவும் தெரியவந்துள்ளது. இன்டர்நெட் இன்று அன்றன்றாட வாழ்க்கையின் ஒரு தினசரிப் பண்பாகி உள்ளதோடு உலகில் கோடிக் கணக்கான மக்கள் அதைக் கையாளவும் முடிந்துள்ளது.

அனைத்துலகக் குழுவின் அமெரிக்க ஐக்கிய அரசுகள், அவுஸ்திரேலியா, பிரித்தானிய பகுதிகளின் புதினப் பத்திரிகைகள், கட்டுரைகள், வெளியீடுகளும் அவற்றின் பிரச்சாரங்கள், தொழிற்பாடுகள் சம்பந்தமான விபரங்களும் திட்டவட்டமான முறையில் இந்த இன்டர்நெட் முறையின் ஊடாக வாசகர்களை சென்றடைய முடியும். அவ்வாறே அனைத்துலகக் குழுவின் கிளைகளுடனான தொடர்புகளை இதன் மூலம் உறுதி செய்து கொள்ளவும் முடியும்.

இன்று திட்டவட்டமான அரசியல் பிரச்சினை தொடர்பாக ஒருவர் மற்றவருடன் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்வதற்கு தேசிய எல்லைகளைக் கடந்தும் மற்றும் அரச சட்டங்கள் மூலம் தொழிலாளர்கள் மீது விதிக்கப்பட்டிருந்த எல்லைகளை இன்டர்நெட் முறையின் மூலம் தாண்டிச் செல்லவும் இப்போது வழி பிறந்துள்ளது. அனைத்துலகக் குழுவின் பகுதிகள் மார்க்சிச இயக்கத்தின் சகல மரபுரிமைகளையும், கலை, இலக்கியம், விஞ்ஞானம் உட்பட்ட துறைகளையும் உள்ளடக்கிய ஆய்வுகளையும் கொண்டுள்ளதோடு, அது தொடர்பான கடிதங்கள், பத்திரங்கள் இன்டர்நெட் முறை மூலம் கிடைக்கிறது. எமது சகோதர பகுதிகள் புதிய தொழில்நுட்பத்தை இந்த விதத்தில் பயன்படுத்துவது மார்க்சிச முன்நோக்கினதும் ஆய்வினதும் அடிப்படையில் நிஜ உலக ரீதியிலான தொழிலாளர் இயக்கத்தை அபிவிருத்தி செய்வதற்கு சக்தி வாய்ந்த ஒரு ஆயுதமாகும்.

இலங்கையினுள் இன்டர்நெட் முன்னேறிய முதலாளித்துவ நாடுகளின் அளவுக்கு பிரபல்யம் அடையாது போனாலும் அதைப் பயன்படுத்துவது வேகமாக வளர்ச்சிபெறும். இந்த வசதி இலங்கையில் பிரபல்யம் அடையும் நாள் அதிக தூரத்தில் இல்லை.

அனைத்துலகக் குழுவின் பகுதிகள் ஆரம்பித்துள்ள இன்டர்நெட் தொடர்புச் சாதனத்துடன் தொடர்புகளை உருவாக்கிக் கொள்வதன் மூலம் அவசியமான கடிதங்கள், பத்திரங்களை வாசிக்கவும் ஆயவும் இணையுமாறு இந்த வசதிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடிய இலங்கையின் தொழிலாளர்கள், ஒடுக்கப்படும் மக்கள், புத்திஜீவிகளை நாம் வேண்டுகின்றோம்.

×அமெரிக்க ஐக்கிய அரசுகளின் சோசலிச சமத்துவக் கட்சியின் இன்டர்நஷனல் வேர்க்கர்ஸ் புலட்டீன் ஒன் லைன்:

**http://www.socialequality.com**

×அவுஸ்திரேலிய சோசலிச சமத்துவக் கட்சியின் வேர்க்கர்ஸ் நியூஸ் ஒன் லைன்:

**http:www.workersnews.com.au**

×பிரித்தானிய சோசலிச சமத்துவக் கட்சியின் இன்டர்நஷனல் வேர்க்கர் ஒன் லைன்:

**http://dialspace.dial.pipex.com/sep/**

படிப்பகம்

www.padippakam.com

# இனவாத யுத்தத்தை .....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மக்களின் எண்ணிக்கை 500000 ஆகும். இராணுவ நடவடிக்கை இடம்பெறும் பகுதிகளில் அங்குள்ள மக்களுக்கு மேலதிகமாக இராணுவத்தினால் யாழ்ப்பாணமும் கிளிநொச்சியும் கைப்பற்றப் பட்டதைத் தொடர்ந்து இடம்பெயர்ந்து வந்த இலட்சக் கணக்கான மக்களும் வாழ்கின்றார்கள். இராணுவ தாக்குதல்களில் இருந்து தப்பவும் விடுதலைப் புலிகளின் அடக்குமுறைகளில் இருந்து தப்பவும் இம்மக்களில் ஒரு பகுதியினர் திரும்பவும் வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் தப்பிச் சென்றாலும் இன்னமும் இலட்சக் கணக்கானவர்கள் இராணுவத் தாக்குதல் இடம்பெறும் பகுதியில் இருந்து கொண்டுள்ளனர். அவர்கள் அங்கு பட்டினி நிலைமைகளுக்கும் உயிரைப் பலிகொள்ளும் தொற்று நோய்களுக்கும் உள்ளாகிய நிலையில் தற்காலிகக் கொட்டில்களில் அகதிகள் வாழ்க்கையை ஓட்டிக் கொண்டுள்ளனர். இந்த மக்களின் தலையில் மீண்டும் ஒரு தடவை யுத்தம் கட்டியடிக்கப்பட்டுள்ளது. மீணடும் ஒரு தடவை அவர்களுக்கு இருப்பிடங்கள் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தரவுகளின்படி இந்த இராணுவ நடவடிக்கையின் முதல் நாளில் தப்பி ஓடிவந்த 500 குடும்பங்கள் கிளிநொச்சிக்கு வந்துள்ளன. மன்னாருக்குச் சென்ற குடும்பங்களின் எண்ணிகை 250. வவுனியாவுக்கு பல்வேறு கருமங்களுக்காக வந்த 750 பேர் அங்கு அடைபட்டுக் கிடக்கின்றனர். மருதங்குளம், புளியங்குளம் ஓமந்தை ,கல்மடு , கற்சிலைமடு முதலான கிராமங்களில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் உயிர்தப்ப ஓட்டமெடுத்துள்ளனர். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் கெரேரா பெட்ரிக்நெட் வெளியிட்ட அறிக்கையின்படி அடுத்த சில நாட்களில் தப்பி ஓடிவந்த மக்கள் மல்லாவி, ஒட்டிச்சுட்டான், புதுக்குடியிருப்பு வீதிகள் நெடுகிலும் குவிந்து போயுள்ளனர். கொலைகளுக்கும் காயங்களுக்கும் உள்ளான மக்கள் பற்றிய விபரங்கள் மூடி மறைக்கப்பட்டுள்ளன. எனினும் முல்லைத்தீவு கடற்கரையோரப் பகுதியில் கடற்படையினர் நடாத்திய துப்பாக்கிப் பிரயோகங்களினால் 7 மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. முன்கூட்டியே மக்கள் வீடுகளைத் துறந்து ஓட்டமெடுத்த செம்மாலை, அலம்பில் முதலான கிராமங்களின் மீது கடற்படையினர் நடாத்திய தாக்குதலினால் வீடுகள் தகர்ந்து போயுள்ளன. 'ஜயசிக்குரு' இராணுவ நடவடிக்கை காரணமாக 12 உணவு லொறிகள் சேதமடைந்ததோடு வன்னி பகுதியில் பெரும் உணவுப் பஞ்சம் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே கொழும்பில் வாழும் தமிழ் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறையும் உக்கிரம் கண்டுள்ளது. மே 23ம் திகதி 200க்கும் அதிகமான தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டதாகத் தெரிகின்றது.

யுத்தம் விடுதலைப் புலிகளின் பிடியில் இருந்து பொதுமக்களை விடுவித்து நாட்டின் சுயாதிபத்தியத்தை காக்கவே நடைபெறுகின்றது என்ற பொய்யை அரசாங்கமும் முதலாளித்துவ வெகுஜனத் தொடர்புச் சாதனங்களும் பல்வேறுபட்ட சந்தர்ப்பவாதிகளும் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

பொதுஜன முன்னணி தெற்கில் முதலாளித்துவ வர்க்க ஆட்சி அதிகாரத்தில் மூழ்கிப் போன பகுதிகளை மீண்டும் கைப்பற்றிக் கொள்ளும் இனவாத யுத்தத்திலும் விடுதலைப் புலிகள் தனிநாடு வேலைத்திட்டத்தின் கீழும் இராணுவ இயக்கத்தில் ஈடுபட்டுள்ளன. எனினும் யுத்தத்தின் உள்ளடக்கம் ஆழமானது. விரிவானது.

இலங்கையில் முதலாளி வர்க்கம் இனவாத யுத்தம் வரை விஸ்தரிக்கப்பட்டுள்ளமை இலங்கைத் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை இனவாத கோட்டின் ஊடாக மோதுதலுக்கு இழுத்துச் சென்று, முதலாளி வர்க்க ஆட்சியை காத்துக் கொள்ளும் பொருட்டு முன்னெடுத்த நீண்டகால இனவாத அரசியல் மோசடியாகும். இன்று இந்த முதலாளிகள் வடக்கு-கிழக்கு மாகாணங்களைத் திரும்பவும் தமது பிடிக்குள் இழுத்துக் கொண்டு இலங்கை ட்ரான்ஸ்நஷனல் கூட்டுத்தாபனங்களிற்கு விற்றுத் தள்ளுவதற்கு ஏகாதிபத்தியவாதிகள் வேண்டும் "அரசியல் ஸ்திரப்பாட்டை" உருவாக்கும்- அதாவது தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களை இராணுவ - பொலிஸ் இரும்பு சப்பாத்துக்களின் கீழ் கொணர்வதை ஒரே இலக்காகக் கொண்டுள்ளனர்.

## அரசியல் அபிவிருத்தி

இந்த யுத்தத்தில் ஒன்றில் விடுதலைப் புலிகளின் எலும்பை உடைத்து தம்முடன் சமரசத்துக்கு கொணரவேண்டும். அல்லது விடுதலைப் புலிகளை முடிந்தால் அடியோடு தோற்கடித்து தமது ஆணையின் கீழ் கொணர வேண்டும். இலங்கையின் முதலாளிகளும் பொதுஜன முன்னணி அரசாங்கமும் தொழிற்படுவது இந்த இலக்கிலேயே. விடுதலைப் புலிகளின் பிற்போக்கு சக்திகளையும் முடிந்தால் தம்முடன் இணைத்துக் கொள்வதற்கும் அதற்குப் பந்தயம் பிடிக்கவும் முதலாளி வர்க்கம் ஆயத்தமாக உள்ளது. ஏகாதிபத்திய வாதிகள் நேரடியாகக் கைபோட்டு, பொதுஜன முன்னணி அரசாங்கத்தையும் யூ.என்.பி.யையும் இணைத்துக் கொண்ட உடன்படிக்கைக்கு விடுதலைப் புலிகளையும் இழுத்துக் கொண்டு செல்ல தயார். இன்று கண்டுள்ள அரசியல் அபிவிருத்திகளும் தொடுக்கப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கை களும் சிங்கள-தமிழ் தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களுக்கு எதிராக அபிவிருத்தி செய்யப்படும் நச்சுத்தனமான எதிர்ப்புரட்சி வேலைத் திட்டமாகும்.

தொழிலாளர்களதும் ஒடுக்கப்படும் மக்களதும் போராட்டம் அபிவிருத்தி காணும் இன்றைய நிலையில் இனவாத யுத்தத்தின் "தீர்க்கமான சந்தர்ப்பமாக" முதலாளி வர்க்கத்தினாலும் அவர்களின் விமர்சகர் களாலும் வருணிக்கப்படும் இந்த யுத்த நடவடிக்கை தொடுக்கப்பட்டது தற்செயலானது அல்ல. பல்கலைக் கழகங்கள், துறைமுகம், தோட்டத்துறை போன்ற அரசாங்கத் துறைகளிலும் சிங்கர், கொக்கா கோலா, றிச்சர்ட் பீரிஸ் போன்ற தனியார் கம்பனிகளிலும் ஒரு தொகை தொழிலாளர் வேலைநிறுத்தங்களும் பிரச்சாரங்களும் ஆரம்பித்துள்ளன. இவை பிரமாண்டமான வர்க்கப் போராட்டங்களுக்கான நிலைமைகள் குமுறிக் கொண்டுள்ளதை எடுத்துக் காட்டிக் கொண்டுள்ளன. பொதுஜன முன்னணி அரசாங்கமும் இலங்கையின் முதலாளிகளும் அவர்கள் அரவணைத்துக் கொண்டுள்ள ஏகாதிபத்தியவாதிகளும் வர்க்க நிலைமையின் அபிவிருத்திகளையிட்டு குழப்பம் கண்டு, முன்கூட்டியே தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களை நசுக்கித் தள்ளும் திட்டங்களைத் தேடிக் கொண்டு உள்ளனர்.

இந்த யுத்தத்தின் மத்தியில் விடுதலைப் புலிகளதும் ஏனைய தமிழ் முதலாளித்துவ அமைப்புக்களதும் வங்குரோத்தும் பிற்போக்கும் வெளியரங்குக்கு வந்துள்ளது. விடுதலைப் புலிகளின் பிரிவினைவாதம் இப்போது ஏகாதிபத்தியவாதிகளின் அபிலாசைகளுக்கு சேவை செய்யும் அளவுக்கு குழிபறிந்து போயுள்ளது. இராணுவ ரீதியிலான தமது பின்னடைவு களுக்கு மத்தியில் தமிழ் முதலாளித்துவ வர்க்கத்தின் தேவைகளை பேணிக்கொள்ள ஏகாதிபத்தியவாதிகளிடம் அடைக்கலம் தேடுவதற்கு விடுதலைப் புலிகள் சென்றுள்ளனர். மூன்றாம் தரப்பின் தலைமீட்டுடன் இலங்கை அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தத் தாம் தயார் என விடுதலைப் புலிகள் கூறிக்கொள்கின்றது. பிரிவினைவாதம் ஏகாதிபத்தியத்தின் கீழ் தமிழ் முதலாளி வர்க்கத்தின் வசதி வாய்ப்புக்களை பேணிக்காக்கும் பிறபோக்கு அரசியல் வேலைத்திட்டமே தவிர தமிழ் தேசியஇனத்தின் தேசிய ஜனநாயக உரிமைகளைக் காக்கும் வேலைத்திட்டம் அல்ல .இது இனவாத யுத்தத்திற்கு பலியான தமிழ் மக்களின் இரத்தத்தின் மூலம் நிரூபிக்கப்பட்டு விட்டது. கடந்த பல ஆண்டுகளாக கொழும்பு அரசாங்கத்தின் காட்டுமிராண்டி இனவாத யுத்தத்தின் மத்தியில் விடுதலைப் புலிகள் தமிழ் மக்களுக்கு இடையே மேலும் மேலும் வெறுப்புக்கும் ஆத்திரத்துக்கும் உள்ளாகி வருகின்றது.பிற்போக்கு பிரிவினைவாத வேலைத்திட்டத்தின் கீழ் அது தம்மீது ஒடுக்குமுறை ஆட்சியை திணிக்கின்றது என்பது மக்களுக்கு அன்றன்றாடைய வாழ்க்கையில் தெளிவாகியுள்ளது.

பொதுஜன முன்னணி அரசாங்கத்திற்கும் யூ.என்.பி.க்கும் பின்னால் வயிறளந்து வந்த ஏனைய முதலாளித்துவ தமிழ் கட்சிகளின் தலைவர்கள் தமது நாற்மெடுப்பை வெளிக்காட்டிக் கொண்டுள்ளனர். "இத்தடவை இராணுவ நடவடிக்கையை மக்களை வெளியேறு என்று தன்னும் அறிவிக்காது செய்துவிட்டனர்." என அவர்கள் கூச்சல் போடுகின்றனர்.

அவர்கள் அக்கறை கொண்டிருப்பது தமது முதலாளித்துவ நலன்களைக் காக்கும் முறையைத் தேடிக் கொள்ளுவதை யிட்டேயாகும்.

சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகள் யுத்தத்துக்கு முழுமனே தோள்கொடுக் கின்றனர். யூ.என்.பி.யுடனான பொதுஜன முன்னணியின் சமரசத்தை யுத்தத்தை தொடர்ந்து முன்னெடுத்து செல்வதற்கு அவசியமான ஒரு நிலைமையாக சமசமாஜ கட்சிப் பத்திரிகையான 'சமசமாஜய' அறிக்கை செய்திருந்தது.யுத்தத்துக்கு முன்னுரிமை வழங்குவதன் மூலம் இவர்கள் இராணுவ-பொலிஸ் சர்வாதிகாரத்தைச் சிருஷ்டிக்கும் முதலாளி வர்க்கத்தின் பணிகளில் இந்த விதத்தில் தோள் கொடுத்தனர்.

ஜே.ஆர்.ஜயவர்தனாவின் வட்டமேசை மாநாட்டில் கலந்து கொண்டு, வலதுசாரி தமிழ் முதலாளித்துவக் கட்சிகளின் வேலைத் திட்டத்துக்கு உஜார் வழங்கிய நவசமசமாஜக் கட்சியினர் அடுத்து இன்றைய அரசாங்கத்தின் 'அரசியல் தீர்வுக்கு' முண்டு கொடுத்தனர். இன்று அது விடுதலைப் புலிகளது வேலைத்திட்டங்களுக்கு ஆதரவு வழங்குகின்றது.

ஜே.வீ.பி. இனவாத யுத்தத்தின் கடைகெட்ட பந்தம் பிடிப்பாளராக விளங்கியது. 1987ல் ஜயவர்தன-காந்தி ஒப்பந்தம் நாட்டை பிரிக்கும் பொறி என்ற பொய்யை கட்டவிழ்த்து விட்டதன் மூலம் சிங்கள-தமிழ் மக்களை நசுக்கும் எதிர்ப்புரட்சி இலக்குகளை மூடிமறைக்கும் பிற்போக்கு இயக்கத்தில் ஈடுபட்ட இந்த அமைப்பு, பொதுஜன முன்னணியின் அரசியல் தீர்வைப் பற்றியும் அத்தகைய ஒரு பிற்போக்கு கூச்சலை ஆரம்பித்துள்ளது.

இனவாத யுத்தத்தினால் தயார் செய்யப்படும இராணுவ சர்வாதி காரத்துக்கான நிலைமைகளில் இருந்து பொதுமக்களை தலையெடுக்கச் செய்வதற்கு புதிய முன்னோக்கினாலும் புதிய வேலைத் திட்டத்தினாலும் புதிய தலைமையினாலும் ஆயுதபாணியாக்கப்படும் அவசியம் தலைதூக்கி உள்ளது. கடந்த 25 வருட கால இனவாத யுத்தத்தின் அபிவிருத்தியின் பக்கம் நுணுக்கமாக ஆயும் எவரும் அது முழு தொழிலாளர், ஒடுக்கப்படும் மக்களை உக்கிரமான பொருளாதார், சமூக பேரழிவுகளுக்குப் பலிகடாக்களாக்கவும் இராணுவ பொலிஸ் ஒடுக்குமுறையை உக்கிரமாக்கவும் இடம்பெற்றுள்ளது என்பது புரியும்.

யுத்தத்துக்கு முடிவுகட்டி, தமிழ் தேசிய இனத்தின் தேசிய ஜனநாயக உரிமைகளை ஊர்ஜிதம் செய்வதும் சிங்கள-தமிழ் இரண்டு தேசிய இனங்களதும் தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களும் சமத்துவமாக வாழ்வதற்கான நிலைமைகளை உருவாக்குவதும் இந்நாட்டின் சிங்கள-தமிழ் முதலாளிகளின் எதிர்ப்புரட்சி வேலைத்திட்டங்களுக்கு எதிராக பொதுமக்களை அணிதிரட்டுவதன் மூலமேசாத்தியாகும். அது ஏகாதிபத்திய த்துக்கும் அதனுடன் சேர்ந்து கொண்டு எதிர்ப்புரட்சி திட்டங்களைத் தூண்டிவிட்டுக் கொண்டுள்ள இந்திய முதலாளி வர்கக்த்திற்கு எதிராகவும் அனைத்துலகத் தொழிலாளர் வர்க்கத்துடன் கைகோர்த்துக் கொள்வதன மூலம் நடாத்தும் ஒரு போராட்டமாகும்.

இந்தியத் துணைக் கண்டத்தில் சோசலிச குடியரசு ஒன்றியத்தின் ஒரு பாகமாக சிறீலங்கா-ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியத்தை ஸ்தாபிதம் செய்வதைத் தவிர இனவாத யுத்தத்துக்கும் பிரிவினை வாதத்துக்கும் எதிரான வேறு பாதை தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களுக்கு கிடையாது.பொதுஜன முன்னணி அரசாங்கத்தை வெளியேற்றி தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை ஆட்சிக்குக் கொணர சோசலிச சமத்துவக் கட்சி முன்வைக்கும் சோசலிச குடியரசு ஒன்றியமே ஒரே மார்க்கமாகும். இந்த வேலைத்திட்டத்தினை முன்வைத்துப் போராடும் சோசலிச சமத்துவக் கட்சியில் சேர்ந்து அதைக் கட்டியெழுப்ப சபதம் பூணுங்கள்.

# இலங்கை தற்கொலையில் முதலிடம்

உலக சுகாதார அமைப்பின் 1991-1992 அறிக்கைகளின் படி உலகில் அதி உயர்ந்த தற்கொலை வீதாசாரத்தைக் கொண்டுள்ள நாடாக இலங்கை உள்ளது. " இலங்கையில் தற்கொலைச் சம்பவங்கள் "என்ற தலைப்பில் டாக்டர்.செனரத் தென்னக்கோன் 'ஐலன்ட்' பத்திரிகைக்கு எழுதிய கட்டுரை ஒன்றில் பின்வரும் விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

1992ல் இலங்கையில் தற்கொலைச் சம்பவங்கள் 7506 ஆக விளங்கிய அதே வேளையில் அது 1994ல் 7717 ஆக உயர்ந்தது. இதன்படி ஒரு நாளுக்கு 22 பேர் தற்கொலை செய்து கொள்கின்றார்கள். இவை அறிக்கை செய்யப்படும் தற்கொலைகள் மட்டுமே. வறுமையின் பிடி பரந்து வரும் கிராமப்புறங்களிலும் தோட்டப்பகுதிகளிலும் தற்கொலைச் சம்பவங்கள் அதிகமாக உள்ளன. வேலையின்மையினதும் கல்வியினதும் வீழ்ச்சி தற்கொலையுடன் இணைந்த வறுமையுடனான ஏனைய காரணிகள் என டாக்டர் குறிப்பிடுகின்றார்.

உத்தியோகபூர்வமான புள்ளிவிபரங் களின்படி இலங்கையில் வேலையின்மை, உழைப்பு படையில் நூற்றுக்கு 15 வீதமாக உள்ளது. 1993ல் கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் எண்ணிக்கை 123,280 ஆக விளங்கியது. இதில் 59308 பேர் சித்தியடைந்தபோதிலும் பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்டோர் 9037 மட்டுமே.

தற்கொலைச் சம்பவங்கள் முதலாளித்துவ அமைப்பினுள் உக்கிரம் கண்டுவரும் சமூக நெருக்கடியின் வெளிப்பாடாகும். அது முதலாளித்துவத்துக்கு எதிரான பெரும் குற்றச்சாட்டாக உள்ளதோடு இந்த சமூக நெருக்கடியைத் தீர்த்துவைக்க இந்த அமைப்பைத் தூக்கிவீசி, மக்களின் அபிலாசைகளை இட்டுநிரப்புகின்றதும் காக்கின்றதுமான சோசலிச வேலைத்திட்டத்தினை ஊர்ஜிதம் செய்யும் பெரும் அவசியத்தினை எடுத்துக் காட்டுகின்றது.

**தேர்ந்தெடுக்கப்பட்ட சில நாடுகளில் தற்கொலை சம்பவங்கள்**

| நாடு | மொத்த தற்கொலையின் வீதாசாரம் (சனத்தொகையில் 100000 க்கு ) | |
|---|---|---|
| இலங்கை | 56.46 | ( 1992) |
| சுவீடன் | 18.6 | (1989) |
| ஐக்கிய அரசுகள் | 12.2 | (1991) |
| ஜப்பான் | 16.1 | (1991) |
| சிங்கப்பூர் | 13.1 | (1991) |
| பிரித்தானியா | 7.9 | (1991) |
| கிறீன்லாந்து | 29.8 | (1991) |
| ஹங்கேரி | 38.6 | (1991) |

ஆதாரம்: உலக சுகாதார அமைப்பு 1991-1992 ஆண்டறிக்கை

படிப்பகம்

www.padippakam.com

# இ.தொ.கா. அதிகாரத்துவத்துக்கு படுதோல்வி...

(9ம் பக்கத் தொடர்ச்சி)

உள்ளும் இந்த வேலைத் திட்டத்தினை முன்னெடுத்துச் செல்வதற்கும் தலைமையைக் கட்டி எழுப்புவதற்கும் சோசலிச சமத்துவக் கட்சி போராடுகின்றது. முன்னர் உங்கள் மத்தியில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் என்ற பெயரில் தொழிற்பட்ட அமைப்பு இன்று சோசலிச சமத்துவக் கட்சி எனப் பரிணாமம் செய்யப்பட்டுள்ளது; பலம்வாய்ந்த தலைமையை உங்களுக்கு வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

யூ.என்.பி. அரசாங்கத்தினதும் இன்று பொதுஜன முன்னணி அரசாங்கத்தினதும் தாக்குதல்களில் இருந்து தோட்டத் தொழிலாளர்களை பாதுகாக்கவும் துரோகத் தலைவர்களை அம்பலப்படுத்தவும் தொழிலாளர்களின் உரிமைகளை வென்றெடுக்கவும் உங்களின் இக்கட்சி நீண்டகாலமாகப் போராடி வந்துள்ளது. இந்தப் போராட்டத்தை விஸ்தரிக்கும் பொருட்டு சோ.ச.க. பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கம் என்ற பெயரில் ஒரு தொழிற்சங்கத்தை அமைத்துக் கொண்டு உங்கள் முன்வந்துள்ளது.

## சோ.ச.க. போராட்ட வரலாறு

சோசலிச சமத்துவக் கட்சி கடந்த மூன்று வருட காலமாக நடாத்திய போராட்டங்கள் மூலம் என்றாலும் கூட தொழிலாளர்களின் உரிமைகளைக் காக்கத் தன்னை அர்ப்பணம் செய்த ஒரே அமைப்பாக ஊர்ஜிதம் கொண்டுள்ளது.

பொதுஜன முன்னணி அரசாங்கம் ஆட்சிக்கு வந்து 3 மாதங்கள் கழிவதற்குள் அட்டன், தலவாக்கலை பகுதிகளைச் சேர்ந்த 25 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் விடுதலைப் புலிகள் என்ற பொய்க் குற்றச்சாட்டின் பேரில கைது செய்யப்பட்டனர். இந்த கைது செய்தல் பட்டியல் சந்திரசேகரன், தொண்டமான் அதிகாரத்துவங்களால் தயார் செய்யப்பட்டது என்பது அம்பலமாகி உள்ளது. பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தையும் அணிதிரட்டிக் கொண்டு பிரச்சாரத்தில் இறங்கிய சோசலிச சமத்துவக் கட்சி அந்த இளைஞர்களை விடுதலை செய்யும் போராட்டத்தில் வெற்றி கண்டது. வெலிமடை அலகொல்ல, தோட்டத் தொழிலாளர்களுக்கு மின்சாரம் வழங்குவதாக பொய் வாக்குறுதி அளித்த தோட்ட நிர்வாகிகளும் இ.தொ.கா. தலைவர்களும் நடாத்திய மோசடிக்கு எதிரான போராட்டத்தினை ஒழுங்கு செய்தது, சோசலிச சமத்துவக் கட்சியே. தொழிலாளர்களின் சம்பளத்தை வெட்டிக் குறைக்கும் விதத்தில் தொண்டமான் கடந்த வருடம் கம்பனி உரிமையாளர்களுடன் கைச்சாத்திட்ட கூட்டு ஒப்பந்தத்துக்கு எதிராக இரண்டு இலட்சம் தோட்டத் தொழிலாளர்கள் நடாத்திய வேலை நிறுத்தத்தை அட்டன், பண்டாரவளை, குருக்குந்தே, வெலிமடை அலகொல்ல தோட்டங்களில் சக்தி வாய்ந்த முறையில் ஒழுங்கு செய்யவும், வேலைத்திட்டத்தினை வழங்கவும் சோ.ச.க.வும் பெருந்தோட்ட, கைத்தொழில் தொழிலாளர் சங்கமும் முன்னெடுக்கின்றது. பிட்ட ரத்மலை தோட்டத்துக்கு அருகில் குடிசைகள் அமைத்துக் கொண்டு இருந்த சிங்கள, தமிழ் தொழிலாளர்களை அரசாங்கத்தினதும் முதலாளிகளதும் பொலிஸ் அடக்கு முறைகளில் இருந்து பாதுகாக்கும் போராட்டத்தை சோ.ச.க. ஒழுங்கு செய்தது.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளம், தொழில், நலன்புரிச் சேவை உரிமைகள் குடியுரிமையின் பேரிலான சகல ஒடுக்குமுறைகளுக்கும் இனவாத தாக்குதல்களுக்கும் எதிராகவும் சிங்கள-தமிழ் பேசும் தொழிலாளர்களை அணிதிரட்ட நடாத்திய நீண்ட போராட்ட வரலாற்றினை எமது அமைப்புக் கொண்டுள்ளது.

பொதுஜன முன்னணி அரசாங்கமும் யூ.என்.பி.உள்ளடங்கலான பிற்போக்கு சக்திகளும் தொண்டமான் தலைமையிலான தொழிற்சங்க தலைமைகளும் ஒன்றிணைந்து தோட்டத் தொழிலாளர்கள் மீது இன்று கட்டவிழ்த்து விட்டுள்ள காட்டுமிராண்டி தாக்குதல்களுக்கு எதிராகப் போராடக்கூடிய ஒரே வேலைத்திட்டத்தினை சோசலிச சமத்துவக் கட்சியே உங்களுக்கு முன்வைக்கின்றது.

நாகரீகமான வாழ்க்கையை நடாத்துவதற்கு அவசியமான விதத்தில் -அதிகரிக்கும் வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ற விதத்திலான அதிகரிக்கும் சம்பளமும் சகலருக்கும் சிறந்த சுகாதார வசதிகளும் நல்ல கல்வி வசதிகளும் மின்சாரமும் சுத்தமான நீரும் கொண்ட நாகரீகமான வாழ்வுக்கு அவசியமான வீடும், விளையாட்டு, கலாச்சார வசதிகளும் தொழிலாளர்களுக்கு அவசியம். இவை அனைத்தும் இன்று தோட்டத் தொழிலாளர்களுக்கு இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

இரண்டாம் தரமான பிரஜைகளாக தமிழ் பேசும் தோட்டத் தொழிலாளர்களை தள்ளுவதற்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டும் என நாம் கூறுகின்றோம். 1949 குடியுரிமைச் சட்டம், இந்திய தொழிலாளர் சட்டம், 1964 சிறிமா-சாஸ்திரி உடன்படிக்கை உள்ளடங்கலான சகல ஒடுக்குமுறைச் சட்டங்களையும் இனவாதப் பாகுபாடுகளையும் ஒழித்துக் கட்டி, ஏனைய சகல மக்களுடனும் சமத்துவத்துடன் வாழும் ஜனநாயக உரிமைகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு அவசியம்.

தொழிலாளர்களின் நாகரீகமான வாழ்க்கைக்கு அவசியமான குறைந்தபட்ச நிலைமைகளைத் தன்னும் உருவாக்கித்தர பணம் கிடையாது எனக் கையை விரித்துவிடும் முதலாளிகள் தொழிலாளர்களின் உழைப்புச் செல்வத்தைக் கொண்டு ஆடம்பர களியாட்டுக்களில் ஈடுபட்டுக் கொண்டே இதைக் கூறிவருகின்றனர். வெளிநாட்டு, உள்நாட்டு முதலீட்டாளர்களும் கொமிஷன் காக்கைகளும் வங்கியாளர்களும் தொழிலாளர்கள் உழைக்கும் செல்வத்தைப் பொதி கட்டிக் கொள்கின்றார்கள். கடந்த சில ஆண்டுகளில் சில தோட்டச் சொந்தக் காரர்கள் சுரண்டிக் கொண்ட இலாபம் வருமாறு :

அகலவத்தை தோட்டம் .... ரூபா.42.58 மில்லியன்

களனிவெலி தோட்டம் ... ரூபா.57.79 மில்லியன்

ஹொரணை தோட்டம் ... ரூபா.39.77 மில்லியன்

கொட்டகலை தோட்டம் ... ரூபா.67.66 மில்லியன்

பொகவந்தலாவை தோட்டம் ரூபா.89.44 மில்லியன்

கொட்டகலை தோட்டக் கம்பனி தனியார் முதலாளிகளுக்கு விற்பனை செய்யப்பட்ட வேளையில் ஜோர்ஜ் ஸ்ரூவேர்ட் முதலாளிகள் அதனை ரூபா.100 கோடிக்கு வாங்கினர். பின்னர் இதனை ஒரு சில தினங்களில் கூடிய விலைக்கு விற்றுத் தள்ளி 100 கோடி ரூபா இலாபம் தட்டிக் கொண்டனர். முதலாளிகள் இந்த விதத்தில் இலாபத்தை மலையெனக் குவிப்பது , தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை ஆதாள பாதாளத்தில் தள்ளிக் கொண்டேயாகும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு நிரந்தர சம்பளம் அவசியம் இல்லை எனவும் அவர்களுக்கு வறுமை மட்டத்திலான சம்பளம் போதுமானதெனவும் கூறும் இ.தொ.கா.தலைவர்கள் இந்த வியாபாரத்தில் சேர்ந்து அரசாங்கத்தில் அமைச்சர், பிரதி அமைச்சர் பதவிகளை சுருட்டிக் கொண்டுள்ளனர். "சௌமிய பவான்" என்ற பெயரில் கொழும்பில் கட்டி எழுப்பி இருப்பது ஒரு தொழிற்சங்க அலுவலகம் அல்ல. தொழிலாளர்களை நசுக்கித்தள்ளி, தொழிற்சங்க அதிகாரத்துவங்கள் உல்லாசம் புரிவதற்கான ஒரு மாளிகையாகும். தொழிற் சங்கத்தில் இருந்து தொழிலாளர்களை அடியோடு நீக்கினாலும் அதிகாரத்துவங்களுக்கு சுகபோகங்களுக்கு குறைச்சல் இல்லை. தொழிற்சங்கத்தின் பணத்தை நேரடியாக சுரண்டிக் கொள்வதோடு மட்டுமல்லாது பங்குமுதல் சந்தை வர்த்தகத்தினைப் பயன்படுத்தி மடியையும் நிரப்பிக் கொள்கின்றார்கள்.

ஆம், இலாபத்தை இலக்காகக் கொண்டு தொழிலாளர்களை சுரண்டிக் கொள்ளும் ஒரு அமைப்பினால் தொழிலாளர்களின் உரிமைகளை வழங்க முடியாது. தொழிலாளர்கள் வென்றெடுத்த உரிமைகளும் இந்த அமைப்பினால் தட்டிப் பறிக்கப்படுகின்றது.

ஆனால் இலாபத்தை சுருட்டிக் கொள்ளும் முதலாளிகளின் தேவைக்கு தமது உரிமைகளைக் கீழ்ப்படுத்தி அவற்றை ஒழித்துக் கட்டும் அவசியம் தொழிலாளர்களுக்குக் கிடையாது. முதலாளி வர்க்கத்தின் அவசியத்தின் அடிப்படையில் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள தாக்குதல்களுக்கு எதிராக தொழிலாளர்கள் போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டும். தொழிலாளர்கள் அனைத்துலக மூலதனத்துக்கும் அதன் கையாட்களான இலங்கை முதலாளிகள் தூண்டிவிட்டுள்ள காட்டுமிராண்டி வேலைத்திட்டங்களுக்கும் முகம் கொடுத்துள்ளனர். தோட்டத் தொழிலாளர்கள் இதற்கு வெற்றிகரமாக முகம் கொடுக்க நகர்ப்புறத் தொழிலாளர்களுடனும் அனைத்துலகத் தொழிலாளர்களுடனும் கைகோர்த்துக் கொண்டு போராட்டத்தை தொடுக்க வேண்டும்.

## நடவடிக்கை குழுக்கள்

பிற்போக்கு அதிகாரத்துவங்கள் மாட்டும் கைவிலங்குகளை உடைத்துக் கொண்டு. இந்த விதத்தில் போராட்டத்தில் ஈடுபடுவதற்கு சகல தோட்டங்களிலும் தொழிலாளர் பாதுகாப்பு கமிட்டிகளை கட்டியெழுப்ப வேண்டும். தோட்டங்களுக்கு அயலில் வாழும் கிராமப்புற மக்களை சிங்கள இனவாதத்தின் மூலம் குழப்பியடித்து தோட்டத் தொழிலாளர்களுக்கு எதிராக தூண்டிவிட முதலாளிகள் முயற்சிக்கின்றார்கள். எனினும் தோட்டத் தொழிலாளர்களும் கிராமப்புற ஏழைகளும் நசுக்கப்படுவது இந்த முதலாளிகளால் அல்லவா? இந்த வர்க்க எதிரிக்கு எதிராக தோட்டத் தொழிலாளர்களையும் கிராமப்புற ஏழைகளையும் ஓரணியில் சேர்ப்போம். அவர்களின் பிரதிநிதிகளை நடவடிக்கை குழுக்களுக்குள் திரட்டுவோம். கிராமப்புற ஏழைகளின் உரிமைகளுக்கான போராட்டத்துக்கு தொழிலாளர் நடவடிக்கை குழுக்களை வழிநடாத்துவோம்.

முதலாளித்துவ் கட்சிகளின் அரசியலுடன் பிணைந்து கொண்டு இந்த போராட்டத்தை முன்னெடுக்க முடியாது. இது நன்கு தெட்டத் தெளிவானது. யூ.என்.பி.க்கோ அல்லது பொதுஜன முன்னணிக்கோ அல்லது இ.தொ.கா.வுக்கோ அல்லது வேறு எந்த ஒரு முதலாளித்துவக் கட்சிக்கும் தொழிலாளர்கள் ஆதரவு காட்டின் அந்த முதலாளித்துவக் கட்சியால் போராட முடியாதது மட்டுமன்றி தொழிலாளர்களின் கரங்களும் கட்டிப் போடப்படுகின்றது. தொழிலாளர் வர்க்கத்தை முதலாளி வர்க்கத்தில் இருந்து அரசியல் ரீதியில் சுயாதீனமான முறையில் தொழிலாளர் வர்க்க வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிரட்ட வேண்டும்.

முதலாளிகளின் அல்லது முதலாளி வர்க்க அரசாங்கத்தின் கைகளில் இனியும் தோட்டத்துறை இருந்து வருமானால் - பொதுஜன முன்னணி அரசாங்கமோ அல்லது வேறு எந்த ஒரு முதலாளித்துவ அரசாங்கமோ ஆட்சியில் இருந்து வருமானால் தொழிலாளர்கள் தமது உரிமைகளைக் காக்கவோ அல்லது வேறு உரிமைகளை வென்றெடுக்கவோ முடியாது என்பதை இப்போராட்டத்தினுள் தொழிலாளர் புரிந்து கொள்வர். இந்த நிலைமை ஏனைய சகல கைத்தொழில்களினதும் தொழிலாளர்களைப் பொறுத்தமட்டில் பொதுவானதாகும்.

எனவேதான் பெருந்தோட்டங்களிலும் ஏனைய முக்கிய முதலாளித்துவக் கம்பனிகளிலும் நிறுவனங்களிலும் நிர்வாகத்தினை தொழிலாளர் கமிட்டிகளின் கைகளுக்குள் கொணர்ந்து, தொழிலாளர் - ஒடுக்கப்படும் மக்களின் அவசியத்துக்காக பொருளாதாரத்தை மீளமைப்புச் செய்ய வேண்டிய அவசியம் இன்று தோன்றியுள்ளது. உலகளாவிய ரீதியில் சகல நாடுகளிலும் நிலைமை இதுதான். அனைத்துலக சோசலிச வேலைத் திட்டத்தின் ஒரு பாகமாக மட்டுமே தொழிலாளர்களதும் ஒடுக்கப்படும் மக்களதும் உரிமைகளை ஊர்ஜிதம் செய்ய முடியும்.

அத்தகைய ஒரு வேலைத்திட்டத்தை பொதுஜன முன்னணி அரசாங்கத்தை வெளியேற்றி, யூ.என்.பி.க்கும் சரி வேறு எந்த ஒரு முதலாளித்துவ கும்பலதும் அரசாங்கத்துக்கும் இடம் கொடாது , தொழிலாளர்-விவசாயிகள் அரசாங்கத்தை அமைப்பதன் மூலமே நடைமுறைப்படுத்த முடியும். அது வடக்கு-கிழக்கு தமிழ் பேசும் தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் ஒன்றிணைத்த, சிறீலங்கா-தமிழ்ஈழம் சோசலிச குடியரசு ஒன்றியமாக விளங்கும். இந்தியத் துணைக்கண்டத்தின் சோசலிச குடியரசு ஒன்றியத்தின் ஒரு பாகமாக இலங்கைத் தொழிலாளர் வர்க்கத்துக்கு சோசலிச சமத்துவக் கட்சி இந்த வேலைத்திட்டத்தை முன்வைக்கின்றது.

தமது உரிமைகளைக் காக்கும் வேலைத்திட்டத்தினை தேடும் தோட்டத் தொழிலாளர்கள் "மலைநாடு" அல்லது வேறு எந்த ஒரு வகையைச் சேர்ந்த "சிறப்புரிமைவாதிகள்" முன்வைக்கும் போக்குக்களில் இருந்து காக்கப்பட வேண்டும். அவர்கள் தோட்டத் தொழிலாளர்களை ஏனைய தொழிலாளர்களில் இருந்து பிளவுபடுத்தும் முதலாளிகளும் முதலாளி வர்க்க ஏஜன்டுகளுமாவர்.

தோட்டத் தொழிலாளர்கள் பல தசாப்தங்களுக்கு முன்னர் சோசலிச வேலைத்திட்டத்தின் அடிப்படையில் ஏனைய தொழிலாளர்களிடையே முக்கிய இடம் வகித்துப் போராடியவர்கள். அது 1940பதாம் ஆண்டுகளாகும். ட்ரொட்ஸ்கிச இந்திய போல்ஷிவிக்-லெனினிஸ்ட் கட்சியும் அதன் இலங்கைப் பகுதியான லங்கா சமசமாஜக் கட்சியும் தோட்டத் தொழிலாளர்களிடையே பரந்திருந்தது. வேவஸ்ஸ. முல்லோயா போராட்டங்கள் இந்தக் கட்சிகளின் தலைமையிலேயே தொடுக்கப்பட்டது. அன்று தோட்டத் தொழிலாளர்கள் ஏகாதிபத்திய ஆட்சியாளர்களதும் ஏகாதிபத்தியச் சார்பு இலங்கை முதலாளி வர்க்கத்தினையும் ஆட்டம் காணவைத்த சக்தியாக விளங்கியது. 1949 குடியுரிமை மசோதா மூலம் தோட்டத் தொழிலாளர்களின் அரசியல் உரிமைகளை பறித்துக் கொண்டு, ஏகாதிபத்தியவாதிகளும் இலங்கை முதலாளிகளும் தாக்குதல் தொடுத்தது, இந்த பிரமாண்டமான அரசியல் சக்திக்கு எதிராகவேயாகும். போல்ஷிவிக் - லெனினிஸ்ட் கட்சி இந்தத் தாக்குதலுக்கு எதிராக போராடியது. ஒரு தசாப்தத்துக்கு அதிகமான காலம் இந்த போராட்டத்தினால் தோட்டத்துறையிலும் ஏனைய தொழிலாளர்களிடையேயும் சக்திவாய்ந்த மார்க்சிச அடிப்படை இருந்தது.

லங்கா சமசமாஜக் கட்சி அதைக் கைவிட்டுவிட்டு அதைத் தாக்ககுவதற்கு முதலாளிகளுடன் சேர்ந்தமை தொழிலாளர்களை பலவீனப்படுத்த இடமளித்தது. சோசலிச சமத்துவக் கட்சி கடந்த கால மார்க்சிச பாரம்பரியங்களுக்கு மீண்டும் உயிரூட்டுவதோடு தொழிலாளர் வர்க்கத்தை அணிதிரட்டும் புதிய தலைமையைக் கட்டியெழுப்புகின்றது. புதிய முன்நோக்கினை முன்வைக்கின்றது. தோட்டத் தொழிலாளர்களிடையே பெருந்தோட்ட கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தைக் கட்டியெழுப்பி, சோ.ச.க.வை இப்போராட்டத்தின் முன்னணிக்கு கொணர்ந்து கொண்டுள்ளது.

தொண்டமான் இ.தொ.கா. அதிகாரத்துவத்தையும் ஏனைய துரோகிகளையும் துடைத்துக் கட்டி, சோசலிச சமத்துவக் கட்சியைக் கட்டியெழுப்புங்கள். பெருந்தோட்டக் கைத்தொழில் தொழிலாளர் சங்கத்தை தோட்டத்துறை பூராவும் கட்டியெழுப்பு.

படிப்பகம்

www.padippakam.com

# இனவாத யுத்தத்துக்கு 25 ஆண்டுகள்...

(6ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டுச் சேர்ந்து கொண்டார்களேயாயின் 1972 அளவில் அந்த கூட்டரசாங்க மூலோபாயம் சிதறுண்டு போய் வந்தது. பொதுமக்கள் மீது சகிக்க முடியாத சுமைகளைத் திணிப்பது தொடர்பாக மக்களின் வெறுப்பு அன்று நிதி அமைச்சராக விளங்கிய என்.எம்.பெரேராவுக்கு எதிரானதாக விளங்கிற்று. இந்தக் குழிபறிந்து போன முண்டுகளின் துணையோடு அதிகாரத்தைக் கொண்டிருப்பது இனிப் பெரும் சிக்கலானது என்பதை முதலாளித்துவ ஆளும் வர்க்கம் புரிந்து கொண்டு வந்தது.

கூட்டரசாங்க அரசியலின் எதிர்ப்புரட்சித் தன்மையை அரசியல் ரீதியில் இன்னமும் புரிந்து கொண்டிராது விடினும் சமசமாஜ -ஸ்டாலினிஸ்ட் தலைவர்கள் அரசாங்கத்தை பாதுகாக்கப் போட்ட பிணைச்சல்களை அறுத்துக் கொண்டு தொழிலாளர் வர்க்கத்தின் கோரிக்கைகளும் பிரச்சாரங்களும் வெடித்துக் கொண்டுவந்தன. உடனடியாக ரூபா.50 சம்பள உயர்வு வழங்கும்படியும் குறுங்கால விடுமுறை வெட்டு, புகையிரத பருவச் சீட்டுக்களுக்கு விதித்த 30மைல் கட்டுப்பாடு, வேலைத்தல கன்டீன்களை மூடுதல் ஆகிய சேவை நிலைமைகள் வெட்டுக்களை நிறுத்தும்படியும் தொழிலாளர்கள் பிரச்சாரத்தில் இறங்கினர்.

அரசாங்க திணைக்களங்களை கூட்டுத்தாபனங்களாக மாற்றுவதை நிறுத்துமபடியும் அரச ஊழியர்களை 55 வயதில் கட்டாய ஓய்வுபெறச் செய்வதை நிறுத்தும்படியும் ஓய்வூதியத்தை சகல கூட்டுத்தாபன ஊழியர்களுக்கும் உத்தரவாதம் செய்யும்படியும் கோரும் ஒருதொகை கோரிக்கைகளை தொழிலாளர்கள் இதில் சேர்த்துக் கொண்டிருந்தனர்.

முதலாளித்துவ அமைப்புக்கும் அதன் ஆட்சிக்கும் முழுச் சவாலாக வெடித்துக் கொண்டுள்ள இத்தகைய தொழிலாளர் வர்க்க அணிதிரள்வுகளைக் குழப்பியடித்து, கலைத்துவிட தமக்கு 1964ல் இருந்துவந்த அரசியல் , அமைப்பு ஆளுமை சிதறுண்டு போய்விட்ட ஒரு நிலையில் தொழிலாளர்களுக்கு புதிய நச்சு வாயுக்களை ஏற்றுவதன் மூலம் அவர்களை ஸ்தம்பிக்க வைக்க வேண்டும் என்பதை சமசமாஜ-ஸ்டாலினிச துரோகிகள் நன்கு புரிந்து கொண்டிருந்தனர். எனவேதான் முதலாளி வர்க்கத்தின் பாதுகாப்புக்காக இனவாதத்தை தூண்டிவிட்டு, தொழிலாளர் வர்க்கத்தை பிளவுபடுத்துவதையும் பொதுஜன அடக்குமுறையையும் இலக்காகக் கொண்டே 1972 அரசியலமைப்புச் சட்ட வரைஞராக சமசமாஜ தலைவர் கொல்வின் ஆர்.டி.சில்வா விளங்கியமையும், அந்த அரசியலமைப்பின் முன்னணி பாதுகாவலர்களாக சமசமாஜ-ஸ்டாலினிச கட்சிகளை முதன்மையாகக் கொண்ட குட்டி முதலாளித்துவ தீவிரவாத இயக்கம் விளங்கியமையும் தற்செயலானது அல்ல.

## பு.க.க. போராட்டம்

முதலாளித்துவ அரச அடக்குமுறைக்கு இலக்கானதனதும் பொதுமக்களிடையே சிறுபான்மையினர் ஆகியதனதும் காரணமாக தொழிலாளர் வர்க்க புரட்சிகர முன்னணிப் படையணியிடம் அன்று சமசமாஜ-ஸ்டாலினிச அரசியலில் இன்னமும் சார்ந்திருந்த வர்க்க இயக்கத்தின் நனவான பகுதியினரை மக்கள் முன்னணி அரசியலில் இருந்து பிரித்து எடுக்கும் பணி புறநிலை ரீதியில் ஒப்படைக்கப்பட்டு இருந்தது. அதற்கான பொருத்தமான பிரச்சார உபாயமாக சோசலிச சமத்துவக் கட்சியின் முன்னோடியான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் "சமசமாஜ-கம்யூனிஸ்ட் தலைவர்களை அரசாங்கத்தில் இருந்து விலகுமாறும் சோசலிச வேலைத்திட்டத்துக்கு சபதம் பூண்ட ஒரு அரசாங்கத்தை அமைக்குமாறும்" நெருக்கும் இயக்கத்தை பயன்படுத்தியது.இது தொழிலாளர் வர்க்கத்தின் சுயாதீன அரசியல் வேலைத்திட்டத்தை நிராகரித்து, இறுதியில் முதலாளி வர்க்கத்தின் கையாளாகத் தன்னை அர்ப்பணம் செய்து கொண்ட குட்டி முதலாளித்துவ தீவிரவாத இயக்கங்களது பிரமாண்டமான எதிர்ப்பின் மத்தியில் தொழிலாளர் வர்க்கத்தை நனவான அரசியல் சக்தியாக அணிதிரட்டி, அதன் சிறந்த பிரிவினரை கட்சியின் பக்கம் வென்றெடுத்து, புரட்சிகர காரியாளர்களாக பதாகை தாங்குவதை இலக்காகக் கொண்டிருந்தது.

தமிழர் எதிர்ப்பு இனவாத யுத்தத்துக்கான பின்னணிடைய உருவாக்கி, முதலாளித்துவ கூட்டரசாங்கம் தமது புதிய அரசியலமைப்புச் சட்டத்தை நிறைவேற்றிய 1972 மே மாதத்தில் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் ஒரு அறிக்கையை வெளியிட்டது. தமது பத்திரிகைகள் தடைசெய்யப்பட்டு இருந்த ஒரு நிலையிலும் அதிகாரம் பெற்ற பத்திரிகை அதிகாரியின் தணிக்கைக்கு உள்ளாகி பிரசுரங்கள் வெளியிடத் தள்ளப்பட்ட ஒரு நிலையிலும் கூட புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் அச்சிட்டு வெளியிட்ட பிரசுரத்தின் மூலம் ட்ரொட்ஸ்கிச நிரந்தரப் புரட்சிக் கோட்பாட்டின் அடிப்படையில் பொதுமக்களுக்கு அரசியல் முன்நோக்கை திடசங்கற்பத்துடன் வழங்கியது. அதில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டது:

"ஸ்டாலினிஸ்டுகள் இரண்டு கட்டப் புரட்சி மூலம் ஜனநாயகப் புரட்சியின் பணிகளை "முற்போக்கு முதலாளித்துவ வர்க்கத்துடன்" ஒன்றிணைந்து ஆற்ற வேண்டும் என்ற உயிராபத்தான கோட்பாட்டின் ஊடாக முதலாளித்துவ வர்க்க அவசியங்களுக்கு தொழிலாளர் வர்க்கத்தை கீழ்ப்படுத்துகின்றது. தொழிலாளர் வர்க்கத்தினதும் ஒடுக்கப்படும் மக்களதும் அடிப்படை உரிமைகளையும் கோரிக்கைகளையும் வெற்றிகொள்வதற்கு முக்கிய தடையாக இருப்பது, இந்த முதலாளி வர்க்கத்துக்கு எதிர்ப்புரட்சிக்கான கட்டத்தை உருவாக்கிக் கொடுக்கும் மக்கள் முன்னணி அரசியலேயாகும்.

"...சகல போராளிகளும் சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சிகளையும் தொழிற் சங்கங்களையும் முதலாளித்துவ கூட்டரசாங்கத்தில் இருந்து பிரிந்து, தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாக்க வல்லதும் முதலாளித்துவ சொத்துக்களை ஒழித்துக் கட்ட சபதம் பூண்டதுமான சமசமாஜ-கம்யூனிஸ்ட்-தொழிற் சங்கங்களினை அடிப்படையாகக் கொண்ட ஒரு அரசாங்கத்தை அமைக்க போராடும்படி நெருக்கவேண்டும்.

"முதலாளித்துவக் கூட்டரசாங்கத்துக்கு முண்டுகொடுக்கும் சமசமாஜ-கம்யூனிஸ்ட்-தலைவர்களும் சீர்திருத்தவாத தொழிற்சங்கத் தலைவர்களும் இந்தப் போராட்டத்தை எதிர்ப்பர். தொழிலாளர் வர்க்கத்தின் இழப்புக்களின் பேரில் முதலாளி வர்க்கத்தினைப் பாதுகாக்கும் அந்த துரோகிகளைத் தொழிலாளர் வர்க்கத்தினுள் இருந்து துரத்தி அடிக்கவும் நிஜ மார்க்சிச தலைமையைத் தொழிலாளர் வர்க்கத்தினுள் கட்டியெழுப்பவும் நடவடிக்கை எடுப்பதன் மூலம் மட்டுமே தொழிலாளர்-ஒடுக்கப்படும் மக்களின் கோரிக்கைகளை வெற்றி கொள்ள முடியும்.

"தொழிலாளர் வர்க்கத்தின் சகல போராளிகள் முன்நிலையிலும் இந்தப் பிரச்சினை உருவாகியுள்ளது. அந்தச் சவாலுக்கு முகம் கொடுக்க வேண்டும். அதில் இருந்து விடுபட்டு ஓடமுடியாது."

தொடரும்

# எஸ்லாப் தோட்ட பாடசாலை அதிபரைத் தாக்கியதைக் கண்டனம் செய்

கடந்த மார்ச் 27ம் திகதி பண்டாரவளை எஸ்லாப் தோட்ட தமிழ் பாடசாலைக்குள் நுழைந்த கொலைகாரக் குண்டர்கள் அதிபர் ராஜேந்திரனைத் தாக்கியமையை சோசலிச சமத்துவக் கட்சியும் ஆசிரியர்-பெற்றோர்-மாணவர் நடவடிக்கைக் குழுவும் வன்மையாகக் கண்டனம் செய்கின்றன.

தாக்குதலுக்குள்ளான அதிபர் பண்டாரவளை மாவட்ட ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்த வேளையில் அவரை சந்திக்கச் சென்ற சோசலிச சமத்துவக் கட்சி பிரதிநிதிகளிடம் பின்வருமாறு குறிப்பிட்டார்: "மார்ச் 27ம் திகதி காலை பாடசாலைக் கூட்டம் முடிவடைந்த பின்னர் அங்கு வந்த 25 பேர் கொண்ட ஒரு கும்பல் என்னுடன் கலந்துரையாட வேண்டும் எனக்கூறியது. அதற்கு இணங்கித் தயாராகி வருகையில் எதிர்பாராத விதமாகத் தாக்கினார்கள். பாதுகாப்புக்காக கூச்சலிட்டதைத் தொடர்ந்து அவ்விடத்துக்கு வந்த ஆசிரியர்கள் , மாணவர்களையும் இவர்கள் தாக்கி மிரட்டினர். இந்தத் தாக்குதல் சுமார் அரைமணி நேரம் நீடித்தது. எமது பாடசாலைக்கு அருகேயுள்ள திரிபுருவ கல்லூரியான சிங்களக் கல்லூரியின் ஆசிரியர் குழு அப்பக்கமாகப் போன சமயம் தலையிட்டதைத் தொடர்ந்து இந்தத் தாக்குதல் நிறுத்தப்பட்டது. பின்னர் தோட்டத் தொழிலாளர், ஆசிரியர், மாணவர் உதவியுடன் பண்டாரவளை ஆஸ்பத்திரிக்கு வந்தேன்." என்றார்.

அதிபர் முகத்தில் பலமாகத் தாக்கப்பட்டதால் நான்கு நாட்கள் ஆஸ்பத்திரியில் தங்கி சிகிச்சை பெற நேரிட்டது. இந்தத் தாக்குதலை கண்டனம் செய்து எஸ்லாப் தோட்டத்தின் சகல தொழிலாளர்களும் வேலை நிறுத்தம் செய்தனர். தொழிலாளர்-மாணவர்-பெற்றோர் பெருமளவில் அதிபரின் நலனை அறியும் ஆவலில் ஆஸ்பத்திரியை நோக்கிச் சென்றதைக் காணக் கூடியதாக இருந்தது.தாக்குதலுக்குள்ளான அதிபரின் வருகையின் பின்னர் பாடசாலையின் கல்வித்தரம் முன்னேறியுள்ளதாக பெற்றோரும் மாணவ -மாணவியர்களும் தெரிவித்தனர். அதிபர் ராஜேந்திரனின் முயற்சி காரணமாகவே ஆண்டு -8 கொண்ட பாடசாலை ஆண்டு -11 கொண்ட பாடசாலையாக முன்னேற்றம் கண்டுள்ளதாகத் தெரிவித்தனர்.

பதவி உயர்வு எதிர்பார்த்த ஒரு சில ஆசிரியர்கள் அதிபருடன் மனஸ்தாபம் கொண்டிருந்தனர். அவர் மாணவி ஒருவரைக் கற்பழிக்க முயன்றார் என்று குற்றம் சாட்டினர். இக்குற்றசாட்டு அதிபருடன் கருத்து வேறுபாடு கொண்ட ஒரு சில ஆசிரியர்களின் சிருஷ்டி எனச் தெரிவித்ததோடு இது ஒரு அபாண்டமான குற்றச்சாட்டு என தொழிலாளரும் மாணவ-மாணவியர்களும் கூறுகின்றனர். அத்தகைய தவறை அவர் இழைத்திருந்தால் அவர் மீது கொலைத்தாக்குதல் அல்ல சட்டத்தின் முன் அவரை நிறுத்தியிருக்கலாம் எனத் தொழிலாளர்கள் தெரிவித்தனர். அதிபர் பொலிசாருக்குக் கொடுத்த முறைப்பாட்டைத் தொடர்ந்து 16 பேர் கைது செய்யப்பட்டு, பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

சம்பவம் நடைபெற்ற மார்ச் 27ம் திகதியின் பின்னர் தமது குழந்தைகளை பாடசாலைக்கு அனுப்ப மறுத்த தொழிலாளர்கள் இந்தச் சம்பவத்தையிட்டு விசாரணை நடாத்துமாறு கல்வித் திணைக்களத்தைக் கேட்டுள்ளனர். சிகிச்சை பெற்று வீடு திரும்பிய அதிபரைக் காவல் புரிய அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் தினமும் ஒவ்வொரு தொழிலாளர் குழு காவலில் ஈடுபட்டுள்ளது. இச்சம்பவத்தின் பின்னர் நடைபெற்ற பாடசாலை அபிவிருத்திச் சபைக் கூட்டத்தில் தாக்குதலுக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டதுடன் அதிபருடன் கருத்து வேறுபாடு கொண்ட-அதிபருடன் மோதியதாகச் சந்தேகிக்கப்படும் இரண்டு ஆசிரியர்களை வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யுமாறு கோரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இவர்களை இடமாற்றம் செய்யின் அவர்களின் இடத்துக்கு பதிலாக வேறு ஆசிரியர்களை நியமனம் செய்வது கஷ்டமானது என அங்கு வந்திருந்த கல்வி அலுவலக அதிகாரி தெரிவித்துக் கொண்டார்.

இத்தாக்குதலுக்கு எதிராக தலையிட்ட சோசலிச சமத்துவக் கட்சி பிரதிநிதிகள், பாடசாலைக்கு பிள்ளைகளை அனுப்பாதது தவறானது என பெற்றோருக்கு எடுத்து விளக்கியதோடு சோசலிச வேலைத்திட்டத்தின் கீழ் பெற்றோர்-மாணவர்-ஆசிரியர் கொண்ட நடவடிக்கைக் குழுவும் பாதுகாப்புக் குழுவும் அமைக்கப்பட்டாக வேண்டும் என எடுத்து விளக்கினர்.

## பு.க.க. 6 வது தேசிய...

(12 பக்கத் தொடர்ச்சி)

தோற்கடிக்கப்பட்டமையின் புறநிலை அர்த்தம் வலியுறுத்துகின்றது. அது சகல நிஜ தொழிலாளர் வர்க்க சக்திகளும் அனைத்துலக ரீதியில் மீண்டும் அணிதிரளும் பொருட்டு அடிப்படையை வழங்கியதோடு கடந்த தசாப்தம் பூராவும் நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழு முன்னெடுத்துச் சென்றுள்ள மார்க்சிசத்தின் சக்திவாய்ந்த புனருத்தாரணத்துக்காகவும் அடிப்படையை தயார் செய்தது.நாம் முன்னர் குறிப்பிட்டுள்ளதை போல முன்னைய காலப்பகுதியில் அரசியல் அரசியல் செயற்பாட்டாளர்களின் சார்பு ரீதியில் சிறிய குழுக்களுக்கு இடையே சண்டை போட்ட மையப் பிரச்சினை இன்று சகல நாடுகளின் உள்ளும் இலட்சோபலட்சம் மக்களைப் பாதிக்கும் தீர்க்கமான பிரச்சினை ஆகியுள்ளது. முதலாளித்துவ அமைப்பினால் தாம் மூழ்கடிக்கப்பட்டுள்ள சமூகப் பேரழிவுகளில் இருந்து விடுபடுவதற்கு தொழிலாளர் வர்க்கத்துக்கும் ஒடுக்கப்படும் மக்களுக்கும் முன்வழியை வழங்க நான்காம் அகிலத்தின் அனைத்துலகக் குழுவின் பகுதிகள் போராடும் முன்நோக்கினாலும் வேலைத்திட்டங்களாலும் மட்டுமே முடியும்.பு.க.க.சோசலிச சமத்துவக் கட்சியாக பரிணாமம் செய்யப்படுவதன் மூலம் நீங்கள் இலங்கையினுள் எமது இயக்கத்துக்கு ட்ரொட்ஸ்கிச பதாகையின் பக்கம் ஆயிரமாயிரம் புதிய தொழிலாளர் வர்க்க சக்திகளை ஈர்ப்பதற்கு அடிப்படையிடும் என்பதில் எமக்கு நம்பிக்கை. இது இலங்கையினுள்ளும் அனைத்துலக ரீதியிலும் பிரமாண்டமான தாக்கத்தை ஏற்படுத்தும். உலகம் பூராவும் நான்காம் அகிலத்தின் அரசியல் ஆளுமையை அபிவிருத்தி காணச் செய்யும்.

இன்டர்நஷனல் கம்யூனிஸ்ட் கட்சியின் சகல தோழர்களும் உங்களின் மாநாட்டின் கலந்துரையாடலும் நீங்கள் எடுக்கும் தீர்மானமும் பற்றிய அறிக்கைகளை வாசிக்க ஆவலாக உள்ளோம்.

அதிஉயர்ந்த நல்வாழ்த்துக்களுடன் டேவ் ஹைலன்ட்

(இன்டர்நஷனல் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலாளர்)

## ந.ச.ச.க....

(3 பக்கத் தொடர்ச்சி)

கொண்டுள்ளது போல் தெரிகின்றது.

இன்டர்நஷனல் வியூ பொயின்ட் என்ற பப்லோவாதிகளின் சஞ்சிகைக்கு விக்கிரமாபாகு கருணாரத்ன அனுப்பியுள்ள அறிக்கையில் 1988ல் ஜே.வீ.பி.யின் தேசபிரேமி இயக்கத்தின் இனவாதப் பகுதியினரின் "தாக்குதல்களுக்கு எதிராக ஆயுதம் தூக்குவது" இடம்பெற்ற தாகக் குறிப்பிட்டுள்ளார். ஜே.வீ.பி.க்கு அன்றும் வெள்ளைச் சுண்ணம் பூசிய ந.ச.ச.க. இன்றும் வெள்ளைச் சுண்ணம் தடவி அதை முன்னணிக்குத் தள்ள முயற்சிக்கின்றது. அவர்களின்படி அதில் இடதுசாரி பிரிவும் வலதுசாரி பிரிவும் இருக்கின்றது. ந.ச.ச.க. தொழிலாளர் வர்க்கத்துக்கு எதிரான பிற்போக்கு சக்திகளை அணிதிரட்ட கூட்டுச் சேர்ந்துள்ளது என நாம் மீண்டும் கூறக்காரணம் அதுவே. பப்லோவாதிகளின் சஞ்சிகைக்கு எழுதும் சஞ்சிகையில் தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விலக்கிக் கொள்ளுமாறு கூறினாலும் ஏனைய தமது இரண்டு கட்சி அங்கத்தவர்களையும் சும்மா கைதில் இருந்து விடுதலை செய்யும்படி மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. இது என்ன இலட்சணத்திலான பாதுகாப்பு பிரச்சாரமோ! அத்தோடு தொழிலாளர் பாதை பத்திரிகைக்கு(கம்கறு மாவத்த) அறிக்கை வழங்கிய லீனஸ் ஜயதிலக 1990ல் தமது கட்சிக்கு கிடைத்த ஆயுதங்களை திருப்பி கொடுத்தாலும் தொழிற்சங்கம் அங்ஙனம் கொடுக்காததன் மூலம் தவறிழைத்துவிட்டதாக கூறியுள்ளார். தமது கட்சி அங்கத்தவர்களைக் கூடக் காட்டிக்கொடுக்க இக்கட்சி தயார் என்பதை இது காட்டு கின்றதல்லவா

பொதுஜன முன்னணி அரசாங்கம், யூ.என்.பி.மற்றும் பிற்போக்கு சக்திகளை அணிதிரட்டிக் கொண்டு கொடிய தாக்குதல்களை நடாத்தப் போகின்றது. முதலாளி வர்க்கத்தில் இருந்து அரசியல் ரீதியாக சுயாதீனமாகி தொழிலாளர் வாக்கத்தை அதன் வரலாற்று வேலைத்திட்டத்தின் அடிப்படையில் அணிதிரட்டும் அமைப்பினால்-சோசலிச சமத்துவக் கட்சியினால் மட்டுமே இத்தாக்குதல்களில் இருந்து உரிமைகளைக் காக்க முடியும்.

படிப்பகம்

www.padippakam.com

# கல்பிட்டியில் அமைதியான பிரச்சாரம் செய்தோர் மீது துப்பாக்கிப் பிரயோகம்

கல்பிட்டியில் அமைக்கத் திட்டமிட்டுள்ள அனல் மின்சார நிலையம் தமது உயிர்கள், வீடுகள், மற்றும் உடமைகளுக்கு ஆபத்தை உருவாக்கி உள்ளதாகக் கூறி, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 6000 பொதுமக்கள் மீது இராணுவமும் பொலிசாரும் நடாத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் சமூக ஊழியரான எஸ்.ஏ.சோமசிரி கொல்லப்பட்டதோடு மேலும் 100 பேர் காயமடைந்தனர். ஏப்பிரல் 25ம் திகதி இடம்பெற்ற இந்த ஆயுதப் படையினரின் துப்பாக்கிப் பிரயோகமும் கண்ணீர்ப் புகை அடியும் சுமார் 2 மணித்தியாலங்கள் இடம்பெற்றுள்ளது.

தமது உரிமைகளுக்கான பிரச்சாரத்தில் ஈடுபட்ட இந்த மக்கள் மீது பொதுஜன முன்னணி அரசாங்கம் நடாத்திய இந்தக் காட்டுமிராண்டித் தாக்குதலை சோசலிச சமத்துவக் கட்சி வன்மையாகக் கண்டனம் செய்கின்றது. கல்பிட்டியைச் சேர்ந்த இம்மக்களைப் பாதுகாக்கவும் அவர்களின் உரிமைகளைப் பேணவும் சோசலிச சமத்துவக் கட்சி தொடுத்துள்ள பிரச்சார இயக்கத்தைச் சூழ அணிதிரளுமாறு நாம் சகல தொழிலாளர்களையும் ஒடுக்கப்படும் மக்களையும் வேண்டுகின்றோம்.

ஏப்பிரல் 24ம் திகதி சுமார் 4000 மக்கள் கல்பிட்டி நுரைச்சோலை கடைவீதி பக்கமாக பதாகைகளை காட்சிக்கு வைத்துக் கொண்டு அமைதியான முறையில் பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தனர். ஏப்பிரல் 25ம் திகதி காலை சுமார் 200 பொலிசாரும் 300 இராணுவத்தினரும் நுரைச்சோலை சந்தியில் இருந்து களப்பு பக்கமாக வந்திறங்கியதோடு காணிகளை அளப்பதற்கான இன்னொரு கோஷ்டியும் அங்கு படகுகள் மூலம் வந்திறங்கி உள்ளது. இச்செய்தியைக் கேள்விப்பட்ட 7 கிராமங்களைச் சேர்ந்த சுமார் 6000 மக்கள் மேலே குறிப்பிட்ட இடத்தில் கூடினர். இராணுவமும் பொலிசும் இம்மக்களை கலைத்து காணி அளப்பதற்கான வாய்ப்புக்களைச் செய்து கொடுத்தனர். அன்று மாலை 2 மணிக்கு நுரைச்சோலை கடைவீதியில் கூடிய மக்கள் மீண்டும் சமாதானமான முறையில் பிரச்சாரத்தினை ஆரம்பித்தனர். "எமது கிராமம் எமக்கு வேண்டும்." "அனல் மின்சார நிலையம் எமக்கு வேண்டாம்" என்ற கோஷங்கள் பதாகைகளில் பொறிக்கப்பட்டிருந்தன.

அன்று மாலை 4 மணிக்கு சுமமார் 200 இராணுவத்தினர் மேலும் 30 பொலிசாருடன் ட்ரக்குகளிலும் ஜீப்புகளிலும் வந்திறங்கினர். இங்கு வந்த பொலிசார் கல்பிட்டி, புத்தளம் பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்தவர்கள் என மக்கள் தெரிவித்தனர்.

பிரச்சாரத்தில் ஈடுபட்ட மக்களிடையே வந்து சேர்ந்த ஒரு உதவி பொலிஸ் அதிபர் "இந்த பிரச்சினை சம்பந்தமாக நாம் ஒரு முடிவு தருகின்றோம். சகலரும் உட்காருங்கள். எனக் கட்டளையிட்டார்." இதைச் சந்தேகிக்காமல் அமர்ந்து கொண்ட மக்கள் மீது பொலிசார் குண்டு போன்ற ஒன்றை வீசியுள்ளனர். அது கண்ணீர்ப் புகைக் குண்டாக விளங்கியது. இதைத் தொடர்ந்து பொலிசாரும் இராணுவத்தினரும் கண்ணீர்ப் புகைக்குண்டு வீச்சுக்களிலும் துப்பாக்கிப் பிரயோகத்திலும் ஈடுபட்டனர். மக்கள் இறப்பர் ரவைகளில் இருந்தும் கண்ணீர்ப் புகைக் குண்டுகளில் இருந்தும் உயிர் தப்ப குறுகிய ஒழுங்கைகள் வழியாகத் தப்பி ஓடினர்.

மூன்று துப்பாக்கி இரவைச் சூடுகள் நெஞ்சிலும் இரண்டு சூடுகள் முகத்திலும் தாக்கியதால் 43 வயதான எஸ்.ஏ.சோமசிரி ஸ்தலத்திலேயே மரணமானார். அவரது தலையையும் பிடரியையும் துப்பாக்கிச் சூடுகள் துளைத்துச் சென்ற குழிகள் இருந்ததாக அவரின் சடலத்தை கண்டோர் கூறுகின்றனர்.

பொதுஜன முன்னணி ஆயுதப் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தை தொடர்ந்து முதலில் புத்தளம் ஆஸ்பத்திரியிலும் பின்னர் சிலாபம் ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்ட டபிள்யூ.எஸ்.கிறிஸ்தோபர் திசேரா, செபஸ்தியான் டேவிட்(21), மொஹமட் பசீர்(20) பஸீல் ஆகிய நால்வரின் நிலைமை ஆபத்தானதாக உள்ளதாக தெரிகின்றது.

ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ள இவர்களுக்கு கைவிலங்கு போடப்பட்டுள்ளதோடு சிறைக் காவலர்களின் காவலிலும் வைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு எதிராக கூட்டம் கூடியமை, ஊர்வலம் சென்றமை, அரச சொத்துக்களுக்கு சேதம் விளைவித்தமை, பொலிசாருக்கு கல்வீசியமை, துப்பாக்கிப் பிரயோகம் செய்தமை முதலான குற்றச்சாட்டுக்கள் மீது வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளதோடு இந்த வழக்கு மே 9ம் திகதி புத்தளம் நீதிமன்றத்தில் விசாரணைக்கும் எடுக்கப்பட்டது.

பொலிசாரும் இராணுவத்தினரும் இரண்டு மணித்தியாலங்கள் தொடர்ந்து நடாத்திய இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் தேவாலயத்துக்கு வந்தவர்கள், கடைவீதிக்கு வந்தவர்கள், புத்தளம் அல்லது வெளியிடங்களுக்கு தொழிலுக்கு சென்று திரும்பியவர்களுக்கும் பட்டுள்ளது. துப்பாக்கிப் பிரயோகம் செய்த பொலிசார் இரவு 7மணி அளவில் அங்கிருந்து விலகிச் சென்றுள்ளதோடு இரவில் சுமார் 500 கடற்படையினரையும் தரைப்படையினரையும் ஈடுபடுத்தி அப்பகுதியில் பயங்கரம் இடம்பெற்றுள்ளது. வீடுவீடாக நுழைந்து இளைஞர்கள் இருக்கிறார்களா என இவர்கள் தேடியுள்ளார்கள். அன்று இளைஞர்கள் பாதுகாப்பு காரணங்களுக்காகக் காடுகளில் மறைந்து இருந்ததாகத் தெரிகின்றது.

## உத்தியோகப்பற்றற்ற ஊரடங்குச் சட்டம்

ஏப்பிரல் 25ம் திகதியில் இருந்து நுரைச்சோலையிலும் அயல் கிராமங்களிலும் உத்தியோகப்பற்றற்ற ஊரடங்குச் சட்டம் பிரயோகம் செய்யப்பட்டிருந்தது. இராணுவத்தினரின் பொறுப்பில் இருந்த இந்நாட்களில் கிராமவாசிகள் கிராமத்துக்கு வெளியே செல்ல இடமளிக்கப்படவில்லை.

மரணமான சோமசிரியின் சடலத்தை ஊருக்கு கொண்டு செல்வதை தடுத்த பொலிசார் அதை முந்தலில் உள்ள அவரின் தாயார் வீட்டுக்கு எடுத்துச் செல்ல உத்தரவாதம் அளிக்கும் கடிதத்தில் சோமசிறியின் தாயாரிடம் பலாத்காரமாக கையொப்பம் பெற்றனர். சோமசிரியின் மரணம் சம்பந்தமாக மரண விசாரணை எதுவும் நடைபெறுமா என்பதை எவரும் அறியார்.

நுரைச்சோலை கிராமவாசிகளின் பிரச்சாரத்தினை நசுக்கும் நோக்கத்துடன் ஏப்பிரல் 27ம் திகதி அவ்விடத்துக்குச் சென்ற பொதுஜன முன்னணி பா.உ.களான வாசுதேவ நாணயக்காரவும் முஸ்லீம் காங்கிரசின் டாக்டர் இலியாசும் சுமார் 100 பொதுமக்கள் கொண்ட ஒரு கூட்டத்தில் உரையாற்றினர். அந்தக் கூட்டத்தில் பேசிய வாசுதேவ நாணயக்கார "நான் இந்தப் பிரச்சினை பற்றி பாராளுமன்றத்தில் பேசுவேன். இன்று செய்ய வேண்டியது துப்பாக்கிப் பிரயோகம் பற்றி பகிரங்க விசாரணை நடாத்துமாறு நீதிபதியை வேண்டுவதுதான்" என்றார். ஏப்பிரல் 29ம் திகதி புத்தளம் நீதிமன்றத்தில் இந்த வேண்டுகோளை விடுப்பதற்காக 8 சட்டத்தரணிகள் வந்திருந்தனர். இவர்கள் பொதுஜன முன்னணி ஏஜன்டான வாசுதேவ நாணயக்காரவின் ஆலோசனைப்படியே வந்திருந்தனர். இது போராட்டத்தில் இறங்கிய மக்களைத் தடம்புரளச் செய்வதற்கான நடவடிக்கையாகும்.

இந்த பொதுஜன முன்னணி ஏஜன்டுகளின் சார்பில் புத்தளம் நீதிமன்றத்தில் பேசிய எஸ்.ஜீ.வஹாப் கூறியதாவது: "நாம் சொல்வது இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தை அரசாங்கம் நடாத்தியது என்று அல்ல. பொலிசு நடாத்தியது. அதை நிரூபிக்க பகிரங்க விசாரணை நடாத்தும்படி நாம் நீதிபதியை வேண்டுகின்றோம்."

முன்னர் யூ.என்.பி. அரசாங்கமும் இன்று பொதுஜன முன்ன்ணி அரசாங்கமும் தனியார் ட்ரான்ஸ் நஷனல் கூட்டுத்தாபனங்களையோ அல்லது அரசாங்க நிறுவனங்களையோ நிறுவ பொதுமக்களை பல்வேறு பகுதிகளில் இருந்து விரட்டி நடுத்தெருவில் தள்ளுகின்றது. முன்னர் இரணவிலவில் அமெரிக்கன் குரல் யுத்த நிலையத்துக்கு எதிரான பிரச்சாரத்தில் ஈடுபட்ட மக்கள் மீது நடாத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் மீனவர் ஒருவர் கொல்லப்பட்டார்.

# ஷெல் காஸ் கம்பனி ஊழியர்கள் தொழில் உரிமை காக்கும் போராட்டத்தில்

வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட ஏழு ஊழியர்களை மீண்டும் சேவையில் சேர்த்தல், ஊழியர்களின் தொழில் உரிமைகளைப் பாதுகாத்தல், ஷெல் காஸ் லங்காவின் நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொள்ளுதல் ஊழியர் பங்குகளை பங்குமுதற் சந்தைக்கு விடுதல் முதலிய கோரிக்கைகளை முன்வைத்து ஷெல் காஸ் லங்கா ஊழியர்கள் கடந்த மே 2ம் திகதியில் இருந்து வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இந்தக் கோரிக்கைகளின் பேரில் ஷெல் லங்கா கம்பனி அதிகாரிகளுக்கும் தொழிற்சங்க தலைவர்களுக்கும் இடையே மார்ச்31ம் திகதி ஆரம்பமாகி 3 நாட்கள் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்தது. வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்ட 7 பேரில் ஐவரை மட்டும் மீண்டும் சேவையில் சேர்க்க நிர்வாகிகள் இணங்கினர். எனினும் தமது இரண்டு சகாக்களையும் வெளியில் விட்டு போராட்டத்தை நிறுத்திக் கொள்வதைத் தொழிலாளர்கள் நிராகரித்தனர். கடந்த வேலைநிறுத்தத்தை முறியடித்து தொழிற்சங்க தலைவர்களும் காஸ் கம்பனியும் கைச்சாத்திட்ட உடன்படிக்கை மூலம் தொழிலாளர்கள் எதையும் பேணிக்கொள்ள முடியவில்லை எனக் காஸ் கம்பனி ஊழியர்கள் தெரிவித்தனர். இதுவரை 40 ஊழியர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தொழிற்சங்கத் தலைவர்கள் தெரிவிக்கின்றனர். இந்த 7 பேரும் ஜனவரி மாதத்துக்குப் பின்னர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளோர் ஆவர். இதில் 5 பேர் சம்பளம் அற்ற லீவில் சென்றவர்களாகக் காட்டப்பட்டுள்ளனர்.

காஸ் கம்பனி ஊழியர்களின் படி ஒரு ஊழியர் வேலைநீக்கம் செய்யப்பட்டது 42 அங்கீகரிக்கப்பட்ட விடுமுறையில் 5 நாட்களை எடுத்தமைக்காக ஆகும். ஒருவர் சேவைக்கு அறிவிக்காததற்காக நிற்பாட்டப்பட்டுள்ளார். நாவலையைச் சேர்ந்த ஒருவர் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்டதற்குக் காரணம் நிர்வாகிகளுடன் வாய்ப்பேச்சில் ஈடுபட்டதாகும். இவர்கள் குமாரசிங்க, குரூஷ், ஹேமச்சந்திர, கூரே ஆகியோராவர். அங்கீகரிக்காது விடுமுறை எடுத்தார் எனக்கூறி சேவை இடைநிறுத்தம் செய்த கொலன்னாவையைச் சேர்ந்து டயஸ் என்ற ஊழியர் சேவை இடைநிறுத்தக் கடிதம் கிடைத்ததைத் தொடர்ந்த ஆற்றில் குதித்து தற்கொலை செய்து கொண்டார்.





சந்தா (தபால் கட்டணம் உட்பட)

| | |
|---|---|
| இதழ் 8 | ரூ.40 |
| இதழ் 12 | ரூ.60 |
| இதழ் 24 | ரூ.120 |
| இதழ் 48 | ரூ.240 |

விபரங்களுக்கு:
தொழிலாளர் பாதை
முகாமையாளர்,
90, 1வது மாளிகாகந்த
ஒழுங்கை, மருதானை,
கொழும்பு-10
தொ.பே. 682220

**சோசலிச சமத்துவக் கட்சியில் சேருங்கள்**

பெயர் . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

முகவரி . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

கையொப்பம் . . . . . . . . . . . . . திகதி . . . . . . .

இக் கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி
பொதுச் செயலாளர்,
சோசலிச சமத்துவக் கட்சி
90, 1வது மாளிகாகந்த ஒழுங்கை,
மருதானை, கொழும்பு-10
தொ.பே. 682220


90, 1 வது, மாளிகாகந்த ஒழுங்கை, கொழும்பு-10ல் வசிக்கும் தீபால ஜயசேகர ஆகிய என்னால் 749, அவிசாவளை வீதி, வெல்லம்பிட்டியில் உள்ள லஸ்சன அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

படிப்பகம்